# எங்கள் தேசம்

Engal Thesam எங்கல் தேசமி

மாதம் இரு முறை

GPO/QD/17/NEWS/2015

மலர்: 14 | இதழ்: 22 | நவம்பர் 15 – 30 ஹிஜ்ரி: 1437 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 305

19 NOV 2015

20/11/2015



முத்துருவத் தீவிரங்களை நிராகரித்த துருக்கிய வாக்காளர்கள்

13

கூர்மையடையும் கருத்து வேற்றுமைகளும் தேசிய அரசாங்கம் எதிர்நோக்கும் சவால்களும்



07



எந்தவோர் உயர் பதவியிலும் முஸ்லிம் அதிகாரிகள் இல்லை

நேர்காணல்

12

# புல்மோட்டைக்கு தனியான பிரதேச செயலகம் வேண்டும்

## புல்மோட்டை முஸ்லிம்கள் வேண்டுகோள்




- ✓ போதுமான சனத்தொகை
- ✓ போதுமான நிலப்பரப்பு
- ✓ எமது பிரச்சினைகள் தீர ஒரே வழி

லரீப் சுலைமான்

குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பிரித்து, புடவைக்கட்டு முதல் புல்மோட்டை வரையுள்ள 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கியதான புல்மோட்டை பிரதேச செயலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

புல்மோட்டை, முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசம். இதற்கென தனியான பிரதேச செயலகம் ஒன்று பிரிக்கப்படுவது தமது நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தரும் என இம்மக்கள் நம்புகின்றனர்.

புல்மோட்டை முஸ்லிம்கள் மிக நீண்ட காலமாக காணிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இது தொடர்பாக எங்கள் தேசம் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

➡ 16

## மியன்மார்:
## முஸ்லிம்களைப் புறக்கணித்து ஜனநாயக மலர்ச்சி



மியன்மாரில் 25 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்லில் ஆங் சாங் சூகியின் என்.எல்.டி. கட்சி 75 சதவீத இடங்களில் முன்னிலை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

மியன்மாரில் கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சி நடைபெற்று வந்தது. இதற்கு முன்பு 1990 இல் நடைபெற்ற தேர்தலில் என்.எல்.டி. வெற்றி பெற்றது. ஆனால், தேர்தல் முடிவை இராணுவம் ஏற்க மறுத்துவிட்டது.

எனினும், சர்வதேச நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக கடந்த 2010 இல் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. இதில், இராணுவ ஆதரவு பெற்ற கட்சியான யூ.எஸ்.டி.பி. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

மியன்மாரின் நீண்ட கால இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு ஜனநாயகத்தின் வாசலை மக்கள் நுகரத் துவங்கியிருப்பினும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பொதுத் தேர்தல், சிறுபான்மை ரோஹிங்கிய முஸ்லிம்களை முழுமையாக புறக்கணித்த நிலையிலேயே இடம்பெற்று முடிந்திருக்கிறது. வேட்பாளர்களாகவோ, வாக்காளர்களாகவோ தேர்தலில் பங்கு கொள்ள மியன்மார் அரசாங்கம் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

➡ 16

## யாழ். பல்கலைக்கழக முதுமாணிக் கற்கை: முஸ்லிம்கள் மீது பாரபட்சம்?

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முதுமாணிக் கற்கைநெறியில் முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு பாரபட்சம் காட்டப்படுவதாக பரீட்சைக்குத் தோற்றியோர் சார்பில் குற்றம் சுமத்தப்படுகிறது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

இலங்கையின் தொன்மையான பல்கலைக்கழகங்களில் ஒன்று எனவும் தமிழ் பேசும் சமூகத்தின் மிகப் பெரும் சொத்து எனவும் மதிக்கப்படுகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கல்வி முதுமாணிக் கற்கைநெறியை வழங்கி வரும் நிறுவனங்களுள் ஒன்றாகும். யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் நாட்டின் வெவ்வேறு பாகங்களிலுமிருந்தும் யாழ். பல்கலைக்கழக முதுமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கப்படுகிறது. இவர்களுள் கணிசமான முஸ்லிம் பட்டதாரிகளும் அடங்குகின்றனர்.




எனினும், பல்கலைக்கழகத்தின் அண்மைக் கால நடவடிக்கைகள் கவலை தருவதாகவும் சமூகங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!



# “மூவினங்களும் புரிந்துணர்வோடு வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்”

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தேசிய மாநாட்டில் பிரகடனம்



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் 63 ஆவது வருடாந்த தேசிய அங்கத்தவர் மாநாடு கடந்த 31.10.2015 ஆம் திகதி கண்டி பொல் கொல்லை NICD மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநாட்டுப் பிரகடனம் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1. இனப் பிரச்சினை விடயத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் இடைவெளிகளைக் குறைத்து பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதோடு மூவினங்களும் புரிந்துணர்வோடு வாழும் சூழலை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணத்தோடும் விட்டுக் கொடுப்புகளுடனோடும் ஒத்துழைக்க வேண்டும்.
2. புதிய அரசாங்கத்திடம் மக்கள் எதிர்பார்க்கும் தகவல் அறியும் சட்டமூலம், மத நிந்தனைக்கெதிரான சட்டமூலம் என்பவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை துரிதப்படுத்தல் வேண்டும்.
3. பொலிஸ் குற்றத்தடுப்புப் பகுதியின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் மற்றும் கவலைக்கிடமான அண்மைய நிகழ்வுகள் பலவும் தருகின்ற தகவல்களின் பிரகாரம், நாட்டில் குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துச் செல்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள், கொலை, கொள்ளைகள், தற்கொலைகள், போதைவஸ்துப் பாவனைகள், விபத்துக்கள், மரணங்கள் என இவற்றின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்திக்கவும் ஒரு தூய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து செயற்படவும் அரசாங்கம் உட்பட சகல சமூகங்கள், சமூக நல அமைப்புகளும் ஆவன செய்ய வேண்டும்.
4. இஸ்லாம் அமைதியையும் சுபிட்சத்தையும் நிலைநாட்ட வந்த மார்க்கம். இது மனிதநேயம் மற்றும் அன்பு, சகோதரத்துவம் என்பவற்றின் அடிப்படையிலும் நல்லிணக்கம் கூட்டுறவு ஆகியவற்றின் அடிப்படையிலும் மனித சமூகத்தைக் கட்டமைக்க விரும்புகிறது. எனினும், உலகளாவிய முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தம் போன்ற கெடுபிடிகளின் எதிர் விளைவுகளாக பல்வேறு வன்முறைக் குழுக்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அந்த வன்முறைக் குழுக்களை நிராகரிக்கும் அதேவேளை, முஸ்லிம் நாடுகளின் உள் விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடாமல் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் OIC, OPEC போன்ற அமைப்புகள் ஒன்றிணைந்து பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும்.
5. இஸ்ரேலின் அடாவடித்தனங்கள் குத்ஸிலும் பலஸ்தீனிலும் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளன. இதனை மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்தப் புனித பூமியில் போராடுகின்ற தியாகிகளுக்கு அல்லாஹ் உலகிலும் மறுமையிலும் அதி உயர்ந்த நற்பேறுகளை வழங்க வேண்டும் என நாம் பிரார்த்திப்பதோடு அனைவரும் பிரார்த்திக்குமாறும் வேண்டிக் கொள்கிறது.
6. முஸ்லிம் சமூகம் பல்வேறு இயக்கங்களாகவும் கட்சிகளாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேநேரம், ஒவ்வொரு கட்சியும் அமைப்பும் தனக்கெனத் தனியான வேலைத் திட்டங்களையும் கொண்டிருக்கின்றது. இதனால், இவ்வமைப்புகள் தாம் வாழும் சமூகத்தையும் நாட்டையும் பலபோது மறந்துவிடுகின்றன. இந்நிலை தொடராதிருக்கும் வகையில் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயன்படுத்துகின்ற ஒரு பொது வேலைத்திட்டத்தின் அவசியத்தை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து, அதன்பால் கவனம் செலுத்தி செயற்பட முன்வர வேண்டும்.
7. இஸ்லாத்தின் சிறப்பியல்பான நடுநிலைத் தன்மையின் அடிப்படையிலேயே முஸ்லிம் சமூகம் வழிநடத்தப்பட வேண்டும் என்றவகையில், ஆன்மிக மற்றும் அரசியல் தலைமைகளுக்கு பாரியதொரு பொறுப்பு இருப்பதனை சுட்டிக்காட்டி அன்பு, சகோதரத்துவம், கலந்தாலோசனை, கட்டுப்பாடு, ஆக்கபூர்வ விமர்சனம் ஆகிய கூட்டு வாழ்க்கையின் பண்புகளை அனைத்து மட்டங்களிலும் மேலோங்கச் செய்வதற்கு அவர்கள் அனைவரும் உழைக்க வேண்டும் எனவும் மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

# வெளிநாடுகளில் தொழில் புரியும் சகோதரிகளின் நலன்கள் குறித்து அரசு கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்



மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்

வெளிநாட்டுச் செலாவணிக்காக பணிப் பெண்களாக இலங்கை மாதர் கடல் கடந்து செல்வதை நிறுத்தி, மாற்று வாழ்வாதார மற்றும் பொருளாதார உபாயங்களை நல்லாட்சி அரசு அறிமுகம் செய்தல் வேண்டும்.

சஊதி அரேபியா மற்றும் லெபனானில் பணியாற்றும் இலங்கையைச் சேர்ந்த 9 பெண்களுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சஊதி அரேபிய நீதிமன்றங்களின் தீர்ப்புக்களின் பிரகாரம், இலங்கைப் பெண்கள் சிலர் கல்லெறிந்து கொல்லப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மொத்த வெளிநாட்டுச் செலாவணியில் கணிசமான பகுதியை மத்திய கிழக்கில் தொழில் புரிவோரே உழைக்கின்றார்கள். சுமார் ஏழு பில்லியன் அமெரிக்க டாலர்கள் இந்த நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகப் பற்றாக்குறையை ஈடு செய்வதில் அவர்களது வைப்புக்கள் கணிசமான பங்களிப்பினை செய்கிறன.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 25% ஆனோர் வெளிநாட்டில் உழைக்கின்றார்கள். அவர்களில் 40% ஆனோர் பெண்கள். ஆனால், இவர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் அரசாங்கங்களின் போதிய கவனத்தைப் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, எகிப்து, இந்தியா, பாகிஸ்தான், சூடான் உட்பட பல நாடுகள் மிகவும் தெளிவான உடன்பாடுகளை மத்திய கிழக்கு நாடுகளுடன் செய்து கொண்டுள்ளன. மத்திய கிழக்கு தூதுவராலயங்களில் இருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளில் ஒரு சிலருக்காவது அரபு மொழியில் பரிச்சயம் இருத்தல் வேண்டும். குறிப்பாக, தொழிலாளர் நலன் பேணும் உத்தியோகத்தர்களுக்கு அரபு மொழி மற்றும் குறிப்பிட்ட நாட்டின் சட்டதிட்டங்கள் தெரிந்திருக்க வேண்டும். அந்த தொழிலாளர்களே அவர்களை சௌகரியமாக வாழ வைத்திருக்கின்றார்கள்.

அரபு நாடுகளில் உள்ள அத்தனை தூதுவராலயங்களும் தொழிலாளர் நலன் பேணவே ஸ்தாபிக்கப்பட்டன. பல பில்லியன்கள் அவற்றிற்காக செலவிடப்படுகின்றன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நூற்றுக்கணக்கான நிரந்தர உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள்; அவர்களுள் 99% ஆனோருக்கு அரபு மொழி தெரியாது. பணியகத்திலும் தூதுவராலயங்களிலும் நிரந்தரமற்ற ஒப்பந்த அடிப்படையிலான உத்தியோகத்தர்களே மிகக் குறைந்த கொடுப்பனவுகளுடன் அரபு மொழி பெயர்ப்பாளர்களாக பணிபுரிகின்றார்கள். மிக அண்மையில் ஒரு சிலரை நிரந்தர உத்தியோகத்தர்களாக ஆக்கியுள்ளனர்.

வெளிநாட்டில் சிக்கல்களை எதிர்நோக்குவோருக்கு சட்ட உதவிகள் பெற்றுக் கொடுக்க நிதியம் ஒன்றில்லை அல்லது போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை. மொழிபெயர்ப்பாளர்களே சட்டத்தரணிகளின் அலுவல்களைப் பார்க்க வேண்டும். உதாரணமாக, சகோதரி றிசானா நபீக் அவர்களுக்கான சட்ட உதவிகளை தனியார் நிறுவனம் ஒன்றே பெற்றுக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

சகோதரி றிசானா நபீக் அவர்களை காப்பாற்றவென பல தூதுக்குழுக்கள் புறப்பட்டுச் சென்று வந்தன. அவர்களுக்கான செலவு சுமார் ஐந்து மில்லியன்களையும் தாண்டியிருக்கலாம். ஆனால், தேவைப்பட்ட போது சுமார் மூன்று மில்லியன்களை வழங்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் சட்ட ஏற்பாடுகள் இருக்கவில்லை; பணமும் வழங்கப்படவில்லை.

இவர்கள் புறப்படும்போது செய்து கொள்ளும் காப்புறுதி, காப்புறுதி நிறுவனங்களையே வளர்த்து விட்டுள்ளது.

இலங்கையிலுள்ள முகவர்கள் விடயத்திலும் போதிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். பொறுப்புக்கூறல், காசு கொடுக்கல்-வாங்கல், வெளிப்படைத்தன்மை என இன்னோரன்ன விவகாரங்களில் கண்டிப்பான சட்டங்கள் கொண்டு வரப்படல் வேண்டும்.

நிதியமைச்சும் வெளிநாட்டமைச்சும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இணைந்து சில அரபு தெரிந்த சட்டத்தரணிகளை, பட்டதாரி அரபு மொழி பெயர்ப்பாளர்களை தெரிவு செய்து மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள சட்டதிட்டங்கள் குறித்த பயிற்சிகளை வழங்கி அவர்களை நிரந்தர இராஜதந்திர படித்தர உத்தியோகத்தர்களாக நியமிக்க வேண்டும்.

இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்ய அரசு தயாரெனில் அதற்குரிய பூரண ஒத்துழைப்பை மனிதாபிமான அடிப்படையில் பிரதி உபகாரம் பாராது வழங்க நாங்கள் ஒரு சிலர் தயாராக இருக்கின்றோம்.

ஜித்தாவில் கொன்ஸல் ஜெனரலாக கடமை புரிந்தபோது, கடமை நேரத்திற்குப் பின்னரும் இரவு பகலாக நாங்கள் நேரடியாகவே சட்ட விவகாரங்களைக் கையாளவும் அதேபோல், தொழில் வழங்குநர்களுடன் பிணக்குகளை சுமுகமாக அழைத்துப் பேசித் தீர்க்கவும் அரபு மொழி மற்றும் ஷரீஆ சட்ட அறிவு தனிப்பட்ட முறையில் எனக்கு உதவியது.

அவர்களது இன்னல்கள் கண்டு இறுதியில் மன அழுத்த நோயுடனேயே நாடு திரும்பும் நிலை ஏற்பட்டது. குறிப்பாக, இந்த நாட்டிலிருந்து பெண்கள் தொழிலுக்காக கடல் கடந்து சென்று அனுபவிக்கும் அவலங்கள் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாதவை. எங்களை விட வறுமையான பங்களாதேஷ் கூட பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில்லை.

வெளிநாடுகளுக்கு பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்களாக செல்ல விரும்பும் மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு ஆர்வமுள்ள, சந்தைக்கு தேவைப்படுகின்ற தொழிற் கல்விகளை, தொழில்நுட்ப, உயர் தொழில்நுட்ப கல்விகளை அரசு வழங்குவதற்கு அவர்கள் உழைக்கும் வெளிநாட்டுச் செலாவணி போதுமானதாகும்.

➜ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையை ஏற்படுத்தும் விடயங்கள் ஏராளம் ஏராளம்! அவற்றுள் மிக மோசமானது பதவி மோகம். ஆளுதல், ஆளப்படுதல் இரண்டும் மனித வரலாறு நெடுகிலும் காணப்படுகின்றன. ஆட்சி எனும் செயன்முறையில் விடப்படும் தவறுகளால்தான் ஆயிரமாயிரம் பிரச்சினைகள் தோன்றி மனிதகுலம் நிம்மதியைத் தொலைத்து நிற்கின்றது. ஆட்சியாளர்கள் மாத்திரம் இதற்குப் பொறுப்பல்ல; ஆளப்படுபவர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அசமந்தப் போக்கினைக் காட்டுவதும் இதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது.

கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு, நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்டி விட வேண்டாம்'' (அல்குர்ஆன் 5:8) என்ற இறைவசனத்தின் அர்த்தத்தை சரிவரப் புரிந்து கொண்டவர்களை எமது பிரதிநிதிகளாக நாம் தெரிவு செய்திருக்கிறோமா என்ற கேள்விக்கு எம்மிடம் திருப்திகரமான பதில் இல்லை. இஸ்லாத்தின் பார்வையில் ஆட்சியாளர்களுக்கு இருக்க வேண்டிய தலையாய பண்பு இறையச்சம். எமது தலைவர்களில் எத்தனை பேரிடம் இது இருக்கின்றது என்பதற்கு உங்களிடமே

பண்பாடுகளாலும் வேறுபட்டிருந்தாலும் பல தேசங்கள் அன்று இஸ்லாமிய சாம்ராஜ்யத்தினுள் விரும்பி இணைந்து கொண்டன. அதனூடாக நிம்மதியான, பாதுகாப்பான சமூக வாழ்க்கையினை அனுபவித்திருக்கின்றன.

எமது தேசத்தின் அரசியல் வரலாறு பிழையாக பொருள் கோடல் செய்யப்படுகிறதா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. ஒவ்வொரு தரப்பும் மற்றைய தரப்பின் மீது பழிகளைச் சுமத்திக் கொண்டிருப்பதில் எந்தளவு உண்மை இருக்கின்றது என்பதை மதிப்பீடு செய்தாக வேண்டும். இன்றைய அவல நிலைக்கு

பேசுகின்ற கட்சிகள் தமது சமூகங்கள் மீது எத்தகைய தலைமைத்துவங்களைத் திணித்திருக்கின்றன; அவர்களின் தராதரங்கள் என்ன என்ற விடயத்தை சற்று மதிப்பீடு செய்து பார்த்தால் நிலைமையின் விபரீதத்தை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். சமூக விடுதலை பற்றிய கூக்குரல்களுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் வடிகட்டிய சுயநலங்களை அறிந்து கொள்ளவும் முடியும். இந்தப் போராட்டங்கள் எதுவரை பயணிக்கப் போகின்றன என்பதை யூகிக்கவும் முடியும். இத்தகைய விபரீதத்திலிருந்து முதலில் மீண்டெழ வேண்டியதுதான்

# பாதுகாப்பான அரசியல் சூழ்நிலை எதன் ஊடாகச் சாத்தியப்படும்?



முஸ்னத் அகமது ஷரிபுத்தீன்



ஆட்சி புரிதல் என்பது சட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படும் ஒரு காரியம். சட்டங்கள் ஆக்கப்படும் போதும் அமுல்படுத்தப்படும் போதும் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் பின்பற்றப்படாதவிடத்து அச்சட்டங்களால் குழப்பங்களைத்தான் பிரசவிக்க முடியும். நடந்து கொண்டிருப்பதுவும் இதுதான். சட்டவாட்சித் தத்துவம் மாத்திரமல்ல, இஸ்லாமும் ஆள்பவருக்கொரு சட்டம்; ஆளப்படுபவருக்கொரு சட்டம் என்பதை ஏற்றுக் கொள்வில்லை. சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பது ஒரு தத்துவமாக அல்லது நீதி தேவதையின் கண்களைக் கட்டுவதன் மூலம் ஒரு குறியீடாக மாத்திரம் அமையாமல் நடைமுறைக் கலாசாரமாக மாற வேண்டும்.

''உங்களுக்கு முன்னால் சென்றவர்கள் ஏன் அழிந்து போனார்கள் என்றால் அவர்கள் கீழ்மட்ட மக்கள் மீது சட்டங்களைச் செயற்படுத்துவார்கள்; உயர் குடியினரை விட்டு விடுவார்கள். யார் கையில் இந்த முஹம்மதின் உயிர் உள்ளதோ, அவன் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் நான் அவள் கையை வெட்டுவேன்'' (அல்புகாரி) எனும் இறுதித் தூதரின் வார்த்தை ஆட்சியியலின் இலக்கணமாக அமைந்திருப்பதை இங்கு சீர்தூக்கிப் பார்த்தாக வேண்டும்.

இன முரன்பாட்டுப் பிரச்சினை என்பது இங்கு புரையோடிக் கிடக்கிறது என்பது உண்மைதான். அதற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியதும் அவசியம்தான். பதவி மோகமும் அதிகார வெறியும் கொண்ட எம்மில் பலர் இன முரண்பாட்டுப் பிரச்சினையை ஊதி, ஊதி கேவலமான அரசியல் பிழைப்பு நடத்துவதையும் இத்தகையவர்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுவதனால் எமது சமூகத்துள் திணிக்கப்படும் சீர்கேடுகள் மீதும் எமது அவதானங்களை செலுத்த வேண்டியிருக்கிறது. இவர்கள் அதிகாரத்தை செயற்படுத்தும் போது கட்சி ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாரபட்சமாக நடந்துகின்றனர் என்பதற்கும் அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர் என்பதற்கும் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

''முஃமின்களே! எந்தவொரு

தெளிவான பதில் இருக்கும் என நம்புகிறேன்.

எமது தேசத்தின் இன முரண்பாட்டுப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு எது என்பதற்கு ஒவ்வொரு தரப்பினரிடமும் வெவ்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அதிகாரப் பரவலாக்கம் தொட்டு தனிநாடு வரை அவை வேறுபடுகின்றன. ஆனால், இவை எல்லாம் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருமா என்பதை ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும். உலகில் இதற்கு எத்தனையோ நடைமுறை ஆதாரங்கள் காணக் கிடைக்கின்றன. பிரிந்து செல்வதுதான் தீர்வென்றால் 1947 உடன் பாகிஸ்தானின் பிரச்சினை முடிந்திருக்க வேண்டும்; 1971 உடன் வங்காளதேசத்தின் பிரச்சினை முடிந்திருக்க வேண்டும்.

இன ரீதியாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதினால் மாத்திரம் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. ஆட்சியதிகாரம் என்பது மிகப் பெரும் அமானிதம். அதை பக்குவப்படாதவர்களிடம் ஒப்படைப்பதினால் அதிகாரங்களைப் பிரித்துக் கொண்டதன் பயனை அடைய முடியாமல் போய்விடும். பொருத்தமான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு சமூகத்திடம் இருக்க வேண்டிய ஆற்றலை வளர்த்தெடுத்தல் என்பதுதான் நிரந்தர அரசியல் தீர்வுக்கான சிறந்த மார்க்கமாக இருக்கும். இந்த உண்மையைப் புரிந்து கொண்டதனால்தான் இறை நம்பிக்கையாலும் கலாசாரம்

அனைவருமே பொறுப்பாளர்கள் என்பதை விரைவாகப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

ஆள்பவர் எந்த இனம், எந்தப் பிரதேசம், அவரது கல்வித் தரம், பொருளாதார பலம் என்ன என்ற விடயங்களை நாம் முற்படுத்தி வந்ததன் விளைவாகத்தான் இன்று அனுபவித்துக் கொண்டிருகின்றோம். மாறாக, ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்கும் தகுதி அவர்களிடம் உள்ளதா என்பதை முக்கிய விடயமாகக் கருதி, அதனை உரியவர்களிடம் ஒப்படைத்திருந்தால் எத்தனையோ இழப்புக்களைத் தவிர்த்துக் கொண்டிருக்க முடியும்.

மக்கள் பிரதிநிதிகள் மக்களால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். ஆனால், எமது சமூக அரசியலில் அவ்வாறு நடைபெறவில்லை என்பதே யதார்த்தம். தேர்தல்கள் நடைபெறுகின்றன; மக்கள் வாக்களிக்கிறார்கள். அவ்வாறிருக்க, மக்கள் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யவில்லை என்பதை ஏற்றுக் கொள்வது சிரமம்தான். வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் முற்றுமுழுதாக அரசியல் கட்சிகளே இன்று செல்வாக்குச் செலுத்துகின்றன. அதில் ஒருவரைத் தெரிவு செய்வதற்குத்தான் மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. ஆக, கட்சிகள் தலைமைத்துவங்களைச் சமூகத்தின் மீது திணிக்கின்றன என்பதை இப்போது நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள், சுதந்திரம் பற்றி வீராப்புப்

எம்முன்னாலுள்ள பெரும் சவாலாக இருக்கும். சமூக விழிப்புணர்வு ஒன்றுதான் ஆபத்திலிருந்து மீள்வதற்கு இருக்கும் ஒரே வழி. இந்த விழிப்புணர்வை யார்; எவ்வாறு ஏற்படுத்துவது என்ற வினாக்களுக்கு புத்திஜீவிகளும் சமூக ஊடகங்களும்தான் பதிலிறுத்தாக வேண்டும்.

இத்தகையதொரு நிலையில்தான் 2016 இன் முற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலங்கை எதிர்நோக்க இருக்கிறது. அடுத்த தலைமுறையில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு தேர்தலாகவும் இதனை நோக்க முடியும். இருக்கின்ற விகிதாசார முறையிலா அல்லது வட்டார அடிப்படையிலா அல்லது கலப்பு முறையிலா இத்தேர்தலை நடத்துவது என்ற விவாதத்திற்கு இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. வட்டார முறை சிறுபான்மையினருக்கு பாதகமானது என்ற சிறுபான்மைக் கட்சிகளின் வாதத்தை முற்றாகப் புறந்தள்ளிவிட முடியாது. இருந்தாலும், வட்டார முறை அறிமுகமானால் கட்சி அரசியலின் மேலாதிக்கம் பலவீனமடையும் என்ற ஒரு காரணமும் இதன் பின்னாலுள்ளது. பொருத்தமான தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் மக்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையில் சிறந்த உறவை ஏற்படுத்துவதற்கும் வட்டார முறை சிறந்தது என்பதனையும் இங்கு சீர்தூக்கிப் பார்த்தாக வேண்டும்.

எது எவ்வாறாயினும், எந்த சமூகங்களாயினும் தமது பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கும் போது சுய விருப்பு வெறுப்புகளை புறந்தள்ளிவிட்டு பொருத்தமான, தகுதியான பண்பாளர்களைத் தெரிவு செய்தாலே போதும், பல பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிடும்.

கடந்த ஜனவரி மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அத்தகையதொரு பிரதிநிதியை தமது தேசத்தின் தலைவனாக இந்நாட்டு மக்கள் தெரிவு செய்யாது விட்டிருந்தால் இன்று இத்தேசம் எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது. வெட்கத்தை விட்டு உண்மையைச் சொன்னால், சிறுபான்மைச் சமூகங்கள் ஓரளவேனும் நிம்மதியை இன்று உணர்வது தமது சமூகத்தில் அரசியல் தலைமைகளை நம்பி அல்ல. ஒரு சிங்கள பௌத்தராக இருக்கின்ற இந்தத் தேசத்தின் தலைமையை எண்ணித்தான். எனவே, பாதுகாப்பான அரசியல் சூழ்நிலை என்பது எதன் ஊடாகச் சாத்தியப்பட முடியும் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர் : 14 இதழ் : 22 நவம்பர் 15 - 30
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: ENGALTHESAMNEWS@GMAIL.COM

## நோக்கும் செய்முறையும் சரியாக அமைய வேண்டும்

கோட்டே நாக விகாரையின் தலைமைப் பிக்கு மாதுலுவாவே சோபித தேரரின் மறைவையொட்டி சாதி, சமய, மொழி வேறுபாடுகளின்றி சகலரும் அனுதாபம் தெரிவிப்பதிலும் பதாதைகள், சுவரொட்டிகள் ஒட்டுவதிலும் ஈடுபட்டிருந்தனர். ஒரு பௌத்த பிக்குவுக்கு முஸ்லிம்கள் இந்த அளவு முக்கியத்துவம் கொடுத்த நிகழ்வு வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திருக்காது என்றே தோன்றுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் தடவை ஆட்சியின் இறுதிக் கட்டங்களில் இந்நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊழல், மோசடி, ஆட்கடத்தல் மட்டுமன்றி, சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகளும் உச்ச நிலையை அடைந்திருந்தமை தெளிவு. யுத்தத்தை வென்றெடுத்து நாட்டை மீட்ட தலைவர் என்ற கிரீடத்தை சூடி மக்கள் மனதில் ஒரு மன்னராகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது மட்டுமன்றி, முப்படைகளையும் பொலிஸாரையும் பயன்படுத்தி எதிரிகளைக் கொலை செய்தும் கடத்தியும் வேறு பல இன்னல்களுக்குட்படுத்தியும் வந்துள்ளமை இன்றைய விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

இந்த அடாவடித்தனங்களையும் அராஜகத்தையும் எதிர்த்து எவரும் வாய் திறக்க முன்வராத பரிதாப நிலை காணப்பட்டது. எதிர்க்கட்சிகளும் அடங்கிப் போயிருந்தன. ஊடகங்கள் மஹிந்தவாதிகளுக்கு எதிராக வாய் திறக்க முடியாதிருந்தன. சிவில் சமூகத்தினரும் வெள்ளை வானில் கடத்தப்படும் அச்சம் காரணமாக யாரும் முன்வரவில்லை. இந்நிலையில்தான் மாதுலுவாவே சோபித்த தேரர் துணிச்சலாகக் களமிறங்கினார். நீதிக்கான சமூக இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவராக நின்று, முன்பிருந்த பொலிஸ் ஆட்சியை... சர்வதிகாரத்தை... நிறைவேற்று ஜனாதிபதி முறையை... நீதிமன்றங்களின் பக்கச்சார்பை... பிரதேச அரசியல்வாதிகளின் அடாவடித்தனத்தை பகிரங்கமாக எதிர்த்தார்.

உயிரைத் தவிர இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையில் துறவு வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே சமூக மேம்பாட்டுக்காக தன்னை அர்ப்பணிக்கத் தீர்மானித்து இன, மத, மொழி பேதமின்றி அனைவருக்கும் எதிராக நடக்கும் அட்டூழியங்களை எதிர்க்கத் தொடங்கினார். ஆரம்ப காலத்தில் ஜாதிக சங்க சபாவ, மவ்பிம சுரக்சிமே வியாபாரய போன்ற அமைப்புகளில் இருந்து தேசியவாதியின்வகிபாகத்தினைஅரங்கேற்றினாலும்அண்மைக்காலத்தில் சிவில் சமூகத்தின் தலைமையை ஏற்று சகலருக்கும் ஒரு துணிச்சலையும் உந்துதலையும் வழங்க சோபித தேரர் தவறவில்லை. அதன் விளைவுதான் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் வேறெவருக்கும் கிடைக்காத மரியாதையையும் கௌரவத்தைம் அவருக்கு கிடைக்கச் செய்தன என்றால் மிகையாகாது.

அந்த வகையில், முஸ்லிம்கள் அவரின் விடயத்தில் தாராளமாக நடந்து கொண்டமை வரவேற்கத்தக்கது. ஆனால் ஷரீஆவின் எல்லைக்கு அப்பால் சென்று, அகீதாவுக்கு முரணான வகையிலான வசனங்களைக் கொண்ட பதாதைகளையும் அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டமையை ஆங்காங்கே காண முடிந்தது. ஜம்இய்யதுல் உலமாவின் சார்பில் தொலைக்காட்சியிலும் தேரரின் இறுதிக் கிரியைகளின்போதும் ஆற்றிய சிற்றுரை ஷரீஆ வரம்புகளை மீறாமலும் தேருக்கு எந்த வகையிலும் கௌரவக் குறைச்சல் ஏற்படாத வகையிலும் பாராட்டப்படும்படியாக அமைந்திருந்தது. வேறு சில இடங்களில் குறிப்பாக பள்ளிவாசல்களால் இடப்பட்ட பதாதைகளில் கூட பூஜ்ய, வஹன்சே, நிவன் சுவ (வணக்கத்துக்குரிய, மறுமை ஈடேற்றம்) போன்ற பிரயோகங்கள் காணப்பட்டமை கவலைக்குரியதாகும். இதுபோன்ற கருத்துக்கள் இஸ்லாமிய அகீதாவுக்கும் ஷரீஆ வரம்புகளுக்கும் அப்பாற்பட்டவையாகும். இதுபோன்ற பல விடயங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு வழிகாட்டலும் தெளிவும் தேவைப்படுகிறது. ஜம்இய்யதுல் உலமா அல்லது அது சார்ந்த நிறுவனங்கள் இவ்விடயத்தில் மார்க்க வழிகாட்டல்களை வழங்குவது கட்டாயமாகும்.


## உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்: முற்போக்கு இளம் அரசியல் தலைவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

ஜனநாயக அரசியல் கட்டமைப்பில் மக்களது அன்றாட வாழ்வுடன் நேரடியாகப் பெரிதும் தொடர்புபடும் அதிகார அலகுகளாக உள்ளூராட்சி கட்டமைப்புக்களான பிரதேச சபைகள், நகர சபைகள், மாநாகர சபைகளைக் கருதலாம்.

தற்போது நாமெல்லோரும் அதிருப்தி வெளியிடும் கையாலாகாத வங்குரோத்து அரசியல் தலைமைகளை மாற்றீடு செய்வதற்கான அல்லது நமது அரசியல் கட்சிகளை சரியான திசைகளில் நகர்த்துவதற்கான முனைவுகளின் தொடக்கப் புள்ளிகளாக மேற்படி உள்ளூராட்சி கட்டமைப்புக்களை பயன்படுத்துதல் காலத்தின் கட்டாயமாகும்.

அரசியல், ஆட்சி அதிகாரம் என்பவை இடம், காலம், இனம், மதம், மொழி எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மனிதநேயப் பணியாகும். நாம் அதிகம் விமர்சிக்கின்ற வங்குரோத்து அரசியல் ஜனநாயக அரசியல் கட்டமைப்பில் மகாஜனங்களான பொதுமக்களையும் வாங்குரோத்து அரசியல் கலாசாரத்திற்குள் கட்டிப் போட்டிருக்கின்றமை பெரும்பாலும் பேசப்படுவதில்லை.

அத்தகைய மட்டரகமான அரசியல் கலாசாரத்தின் முகவர்களாக இருக்கும் தலைமைகளையும் தொண்டர் படையணிகளையும் சரியான அரசியல் திசையில் நகர்த்துவதென்பது மிகக் கடினமான பணியாகும். சரியான



முற்போக்கான அரசியல், சமூக, பொருளாதார சிந்தனைகளை கடந்த பல தசாப்தங்களாக இஸ்லாமிய சமூக வாழ்வியலின் பிரதான அம்சங்களாக பிரசாரம் செய்து வருகின்ற சிந்தனைப் பள்ளிகள், சர்வதேச அரங்கில் அவை குறித்து வெளியிடப்படுகின்ற நவீன சிந்தனைகளை தமதாக்கிக் கொண்டுள்ள செயற்பாட்டு முகாம்கள் அவற்றை சிவில் சமூக மயப்படுத்த தவறியுள்ளமையின் இயல்பான விளைவுகளையே எமது தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூராட்சி அரசியலில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

மக்களின் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புபடாத சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்த சிந்தனைகளை பாமர மக்கள் மாத்திரமன்றி, படித்தவர்களும் கூட ஜீரணித்துக் கொள்ள மறுக்கின்றார்கள். எனவே, மக்கள் மத்தியில் செல்வதற்காக சிந்தனைப் பள்ளிகளும் செயற்பாட்டு முகாம்களும் அரசசார்பற்ற தொண்டர் பணிகளில் அதிகூடிய கவனம் செலுத்த தலைப்பட்டிருக்கின்றமை மிகச் சரியான இயங்குதள உளவியலாகக் கருதப்பட முடியாது.

எல்லாம் வல்ல அல்லாஹ் வகுத்துள்ள பிரபஞ்ச இயற்கை நியதிகளின்படி ஆட்சி அதிகாரம் சத்திய வழியில் அமையாதவிடத்து அநீதியும் அராஜகமும் அக்கிரமமும் ஊழல் மோசடிகளும் குழப்பமும் குளறுபடிகளும் மனித வாழ்வின் அன்றாட அம்சங்களாகி விடுகின்றன. பிரபஞ்சத்தின் இயல்பான ஓட்டத்துடன் மனித வர்க்கம் முட்டிமோதிக் கொள்ள ஆரம்பிக்கின்றது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தரப்புக்கள் காலா காலமாக விட்டு வந்த இடைவெளிகளே இன்று பிழையான தரப்புக்களால் நிரப்பப்பட்டுள்ளன.

என்றாலும், அவர்களையும் மகாஜனங்களான பொதுமக்களையும் இத்தகைய நிராகரிக்கப்படுகின்ற சாக்கடை அரசியல் கலாசாரத்திலிருந்து மீட்டெடுக்கின்ற பணி அடிமட்டத்திலிருந்தே ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கான பரந்துபட்ட விழிப்புணர்வு மக்கள் மத்தியில் அதிதீவிரமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அவ்வாறான பாரிய அரசியல் விழிப்புணர்வு ஒன்றை களத்திற்கு வெளியிலிருந்து வெறும் பார்வையாளர்களாகவும் விமர்சகர்களாகவும் இருந்து கொண்டு செய்ய முடியாது என்பதனை எமது அண்மைக் கால அரசியல் நன்கு உணர்த்தியிருக்கின்றது. அந்த வகையில், மக்களின் வீட்டு வாசல் வரை அல்லது சமையல் கட்டு வரை அரசியலை எடுத்துச் செல்லுகின்ற அடிமட்ட அரசியல் கட்டமைப்புக்களான உள்ளூராட்சி தேர்தல்களில் பங்காளர்களாக நாம் கவனம் செலுத்துதல் வேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாதமளவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்தும் நல்லாட்சிக் கோட்பாடுகளை மதிக்கின்ற மிகச் சிறந்த இளம் அரசியல் தலைமைகளை நாம் சமூக தளத்தில் அறிமுகம் செய்தல் வேண்டும். அது எமது தெரிவு மாத்திரமன்றி, கடமையும் கூட.

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவின மக்களின் தோழனாய் வாழ்ந்தார் சோபித தேரர்

ஐ.எம். இர்சாத்



மாதுலுவாவே சோபித தேரர் 1942 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி ஹோமாகம பாதுக்க மாதுலுவாவே பிரதேசத்தில் அப்தஹாமி மற்றும் கரலனஹாமி ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவரின் இயற்பெயர் ரத்ன சேகரவாகும்.

ஒரேயோர் ஆண் பிள்ளையான சோபித்த 1955 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கோட்டே ஸ்ரீ நாக விகாரையில் தனது 11 ஆவது வயதில் துறவறத்தில் இணைந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வித்யாலங்கார மற்றும் வித்யோதய பிரிவெனாக்களில் உயர் கல்வி பெற்றுக் கொண்டார். 1964 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் கௌரவ பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1955 ஆம் ஆண்டு முதல் கோட்டே ஸ்ரீ நாக விகாரையில் தனது துறவற வாழ்க்கையை தொடர்ந்த சோபித தேரர், மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்ப்பதற்கான பெரு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார்.

நீண்ட காலமாக தேசிய ரீதியில் மாத்திரமின்றி, சர்வதேச ரீதியாகவும் புத்தசாசனத்திற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற பல விடயங்களை கருத்திற் கொண்டு சமூக நீதிக்கான மக்கள் அமைப்பை நிறுவி, எதிர்க் கட்சிகளை ஒன்றிணைத்து நல்லாட்சியை இந்த நாட்டில் உருவாக்க அவர் முன்னெடுத்த போராட்டம் அவர் வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பௌத்த துறவியாக இருந்தபோதிலும் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் மதித்து அவர்களின் நல்லுறவுக்காய் செயற்பட்ட மதத் தலைவராக அனைவராலும் பார்க்கப்பட்டார்.

மாதுலுவாவே சோபித தேரர், இலங்கையின் அரசியல் மாற்றத்திற்காக பாரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். அந்தவகையில், கடந்த பொதுத் தேர்தலில் 75 சிவில் அமைப்புக்களை ஒன்று சேர்த்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு நல்லாட்சி நிலை பெற வேண்டும் என்பதில் உறுதியாக செயற்பட்டவர். அவரின் நல்லாட்சி அரசியல் வித்துக்கள் இன்று நாட்டில் விருட்சமாகி நிழல் வழங்கிக் கொண்டிருக்கின்றன. எதேச்சதிகாரத்தை நோக்கிப் பயணித்த இந்நாட்டின் அரசியல் பயணத்தை தடுத்து நிறுத்தி, நாடு எதிர்நோக்கியிருந்த பயங்கர அழிவை தடுத்து நிறுத்தினார். அந்த வகையில், இந்நாட்டு மக்கள் அவருக்கு நன்றிக் கடன் உடையவர்களே.

குறிப்பாக, தற்போதைய நல்லாட்சியின் தோற்றத்திற்கு அதிகளவு பங்களிப்பு செய்த மதத் தலைவராக இவரை நாம் பார்க்க முடியும்.

கடந்த அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கெதிராக துணிந்து குரல் கொடுத்தார். இலங்கையை ஒரு மதச் சார்பற்ற நாடாகவும் அனைத்து இன மக்களும் எவ்வித வேறுபாடும் இன்றி, சிறப்பாக வாழும் இடமாகவும் இருக்க வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்தார்.

இலங்கையில் சிறந்த ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு, ஆட்சி மாற்றம் ஒன்று அவசியம் என்று உணர்ந்து சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பித்து, நல்லாட்சியை விரும்பும் அனைவரையும் ஒன்றிணைத்து போராட்டங்களை நடாத்தி வந்தார்.

அதுமட்டுமன்றி, இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையின மக்களுக்கு சரி நிகரானவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டவர். அத்துடன், இந்த நாட்டில் பயங்கரவாதம் நிலவவில்லை; பொருளாதாரப் பிரச்சினையே நிலவியது என்ற மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் துணிந்து, சிங்கள மக்கள் மத்தியில் பேசி வந்தார்.

இலங்கை பௌத்த நாடு என்று இனவாதிகள் வாதித்து வந்த நிலையில், இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் ஒன்றுள்ளது; அவர்களும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும் என குரல் கொடுத்தவர்.

அதுமட்டுமன்றி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரலாம் என்று கூறியவர். அதன் மூலமாக சிறுபான்மை சமூகத்திற்கு ஒரு காப்பீடாகத் திகழ்ந்தார்.

சோபித தேரர் எனும் ஒரு நேர்மையான பௌத்த மத குருவின் இடத்தை நிரப்புவது சிரமமானது. ஒரு துறவி எல்லாவற்றையும் துறந்திருக்க வேண்டும் என்பதற்கு எதிரான மாற்று சிந்தனையோடு செயற்பட்டவர். நாட்டை பிழையாக வழி நடத்தும் அரசியல் தலைவர்களோடு மதத் தலைவர்கள் சமரசப் போக்கை கடைப்பிடித்திருக்கும் கால கட்டங்களில் கூட தைரியமாக எதிர்த்துக் குரல் கொடுத்தவர் சோபித தேரர்.

தனது பங்கேற்புடன் நிறுவப்பட்ட தேசிய அரசாங்கம் பிழையான திசையில் செல்லும்போதெல்லாம் அதற்கு எதிராகவும் குரல் கொடுத்து செயல்பட்ட ஒருவர் சோபித தேரர். யாரையும் சார்ந்திருக்காமல் நீதிக்காகவும் நல்லாட்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்து மரணித்த பின்னரும் எல்லோரது மனங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

# யார் அந்த ரோஹிங்யாக்கள்?

## புரட்டப்படும் பர்மிய கலவரத்தின் மறுபக்கம்

ஜப்பார் அலி – தெல்தோட்டை

உலகை மிரட்டும் இன சுத்திகரிப்புக்கள் வரலாற்று நெடுகிலும் ஆங்காங்கே பதிவிடப்பட்டுள்ளன.

சர்வாதிகார ஆட்சியாளர்களாலும் இனத்துவேஷ நடவடிக்கைகளாலும் தலைவிரித்தாடும் இவ்வகையான பிரச்சினைகளில் பர்மா என்றழைக்கப்படும் மியன்மாரும் அதன் கோரப் பிடிகளில் சிக்கிக் கொண்டது.

சிறுபான்மையினராக வாழும் ஓர் இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பெரும்பான்மையினரால் நசுக்கி அழிக்கப்பட்டனர். குழந்தைகள் பல கொல்லப்பட்டன. பல துஷ்பிரயோகங்கள் கலவரங்களின் வழக்காறுபடியே நடந்தேறியது.

இவ்வாறு, ஏற்படுத்தப்பட்ட கலவரச் சூழல் மியன்மாரில் திடீரெனத் தோன்றிய உட்பூசல்களாலோ, மதத்தை மட்டுமே அடிப்படையாக வைத்தோ எழுந்த ஒன்றல்ல. மாறாக, மதத் துவேஷ, அரசியல் வன்முறைகள் இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் ஏற்படுத்தப்பட்ட மிருகத்தனமான வெறியுணர்வுதான் அவ்வாறான பாரிய இனப் படுகொலையை மியன்மாருக்குள் அரங்கேற்றியது.

இதன் பிற்பாடு இது பற்றிய புலனாய்வுகளை மேற்கொண்ட அல்ஜஸீராவின் புலனாய்வுப் பிரிவு இது பற்றிய அதிகமான தகவல்களையும் ஆதாரங்களையும் வெளியிட்டதன் தொடராக பல வருடங்களுக்கு முன்னால் புதைக்கப்பட்ட மியன்மாரின் கறுப்புப் பக்கங்களுள் ஒன்றை மீண்டும் திறந்து பார்க்க வழிகோலியது.



### ரோஹிங்யா முஸ்லிம்கள்

பிரித்தானியர் பர்மாவை ஆட்சி செய்த காலத்தில் குடியேறிய ரோஹிங்ய மொழியை பேசக் கூடிய ஆரியக் குடியினரே ரோஹிங்யர்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர். இன்னும் சிலர் ராஹின் பிரதேசத்தில் குடியேற்றப்ப[illegible] பெயர் சூட்டப்பட்டது எனவும் கூறுகின்றனர்.

ராஹின் பிரதேசத்தில் முஸ்லிம்களின் குடியேற்றங்கள் பதினாறாம் நூற்றாண்டு தொட்டே இருந்து வந்துள்ளன. அரக்கான்கள் என்றும் அழைக்கப்படும் இவர்கள், 1986 இல் நடைபெற்ற முதலாவது இங்கிலாந்து-பர்மிய யுத்தத்தின் பிற்பாடு பிரித்தானியரால் சிறு பண்ணை வேலைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். 1989 ஆம் ஆண்டுகளில் வெறும் ஐந்து வீதமாகவே [illegible] இவர்கள் 1872 க்கும் 1911 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் 58,255 இலிருந்து 178,000 வரையாக அதிகரித்தனர். 1942 ஆம் ஆண்டுகளில் பிரித்தானியராலும் அவர்களுடன் இணைந்தவர்களாக செயற்பட்ட ரோஹிங்யர்களாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பௌத்தர்களுடனான சமூக கலவரத்தின் பிற்பாடுதான் இது இன ரீதியான சதியாக மாற்றப்பட்டது.

1989 இல் ஜெனரெல் நே வினால் பர்மிய தேசச் சட்டம் இயற்றப்பட்டிருந்தது. இதில் ரோஹிங்யர்களுக்கான குடியுரிமை மறுக்கப்பட்ட பல சட்டங்கள் காணப்பட்டன. அதன் பின்னணியில் 1990 இல்தான் ரோஹிங்யர்கள் என்ற பதம் பொதுவான வழக்கு மொழியாக கையாளப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் 2013 ஆம் ஆண்டு ஆகும்போது மியன்மாரில் ரோஹிங்யர்களின் எண்ணிக்கை 1.3 மில்லியனாக அதிகரித்திருந்தது.

இவ்வாறு புலம்பெயர்ந்த ரோஹிங்யர்கள் இன்றும் 'கெட்டோ' என்று சொல்லப்படக் கூடிய கூடாரங்களிலேயே மியன்மார் அரசாங்கத்தால் கட்டாய குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்ல அனுமதி முற்றாக தடுக்கப்பட்டுள்ளது. கல்வி, வைத்தியம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கான எந்த அடையாளப் பத்திரங்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

→ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலத்துக்காக வேலை செய்பவர்கள் சுய வாழ்விலும் உயர் நிலையை அடைவர்

## வளவாளர், தொழிலதிபர் உவைஸ் எம். பாஸில்

பஷீர் அலி



தமக்குள் உருவாக்கி வைத்துக் கொண்டுள்ள மனநிலையை காலத்துக்கேற்ப மாற்றிக் கொள்ளும்போதே வாழ்வில் உயர் நிலையை அடையலாம். பொதுநலத்துக்காக வேலை செய்பவர்கள் சுய வாழ்விலும் உயர் நிலையை அடைவர் என தலைமைத்துவ பயிற்சி வளவாளரான தொழிலதிபர் உவைஸ் எம். பாஸில் தெரிவித்தார்.

கண்டி மடவளை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்களுக்காக இடம்பெற்ற விசேட பயிற்சி முகாமில் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஹாதிமுல் உம்மா வெல்பெயார் எஸோஸியேஷன்' (குவா) அமைப்பின் ஏற்பாட்டில் மடவளை கார்டியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அனுபவப் பகிர்வு மற்றும் செயற்பாட்டு வழிமுறை நுட்பங்களூடாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த உவைஸ் எம். பாஸில் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்கு தீங்கு செய்யும் காரணிகளைக் கண்டால் உரியவர்கள் அதனைச் செய்து கொள்ளட்டும் என்ற சுயநலத்துடன் விலகிச் செல்வது மனிதத் தன்மை அல்ல. இந்தத் தீங்கில் இருந்து பிறரைக் காப்பது எப்படி என முயற்சிப்பவரே தலைமைத்துவப் பண்பு கொண்ட மனிதர். தூய்மையான எண்ணத்துடன் ஒரு பொது வேலையைச் செய்யும்போது நமக்கு உதவியாக பலர் வந்து இணைந்து கொள்வர் என்பது யதார்த்தபூர்வமான உண்மையாகும். அதனை விடுத்து, தனியாக என்னால் இதனைச் சாதிக்க முடியாது என விலகிச் செல்பவர்கள் தலைமைத்துவ ஆற்றல் அற்றவர்களே.

பொதுநல வேலைகளைச் செய்ய முற்படும்போது பல தடைகள் வரலாம். அதனை பொருட்படுத்தாமல் களத்தில் இறங்கி வேலை செய்பவர்கள் பொது வாழ்விலும் சுய வாழ்விலும் உயர் நிலையை அடைந்து கொள்கின்றனர்.

# ஸஹ்வதுல் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்தல் 2016

பி. முஹாஜிரீன்

பாலமுனை, சின்னப் பாலமுனை ஸஹ்வா ஆண்கள் அரபுக் கல்லூரிக்கு 2016 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஆர். முஹம்மது றமீன் (மதனி) தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகள் புனித அல்குர்ஆனை நன்றாக ஓதத் தெரிந்திருப்பதுடன், சிறந்த உடல் ஆரோக்கியமுடையவராகவும் 2016 இல் தரம் 9 இற்கு சித்தியடைந்திருக்கவும் வேண்டும்.

அரபுக் கல்லூரியின் முறையான பாடத்திட்டத்திலான ஷரீஆ பாடங்களோடு க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம், அல்ஆலிம் முதவஸ்ஸிதா, அல்ஆலிம் தானவிய்யா, அஹதிய்யா, தர்மாச்சார்ய ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான முழுநேரப் பாடங்களும் சிறந்த ஆசிரியர்களையும் வளவாளர்களையும் கொண்டு போதிக்கப்படும்.

அத்துடன், கணினி பாடநெறியில் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான பாடங்களும் போதிக்கப்படுகின்றன.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்த, விருப்பமுடைய ஆண் மாணவர்கள் எதிர்வரும் 2015, டிசம்பர் 5 மற்றும் 6 (சனி, ஞாயிறு) ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை கல்லூரியில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் பிறப்புச் சான்றிதழ், தரம் 09 இற்கு சித்தியடைந்ததை உறுதிப்படுத்தும் பாடசாலை விடுகைப் பத்திரம் அல்லது பாடசாலை அதிபர் கடிதம், மாணவர் தேர்ச்சி அறிக்கை, ஏனைய புலமைச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களும் அல்குர்ஆன் ஓதுதலும் பரீட்சிக்கப்படும்.

விண்ணப்பிக்க விருப்பமுடையவர்கள் மேலதிக தகவல்களுக்கு **0672255049, 0774272919, 0758088164** ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

# சிறுவர்களுடன் உரையாடுவதும் ஒரு கலையே

ஹனா ஹனீபா [B.Sc. Psychology – USA]



பிள்ளைகள் கவனம், பராமரிப்பு, அன்பு, ஆதரவு போன்றவற்றை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றனர். எனினும், அவர்கள் வளரும்போது சிறிது சிறிதாக சுதந்திரத்தை உணருகின்றனர். சுதந்திரமாக வளர அவர்களுக்கு பெற்றோருடைய பாதுகாப்பும் அன்பும் அவசியமாகின்றன. ஆகவேதான், உரையாடலின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. பெற்றோர் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடும்போது அது அவர்கள் பல வழிகளில் வளர உதவி செய்வதுடன், பயனுள்ள உரையாடல்கள் மூலம் இந்த உலகைப் பற்றிய தெளிவான ஒரு விளக்கத்தையும் வழிகாட்டலையும் அவர்களுக்கு வழங்க முடியும்.

பிள்ளைகள் வழக்கமாக பிறரை அவதானிப்பதன் மூலம் அதிகம் கற்கின்றனர். இது அவர்கள் சிறந்த பண்புகள், பழக்கவழக்கங்கள், சமுதாய பண்பாடுகள் மற்றும் நட்பு போன்றவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிய உதவுகின்றது. அவர்களுடன் அதிகம் உரையாடுவதன் மூலம் நாம் சிறுவர்களுக்கு ஒரு பேசும் களத்தை உருவாக்கி கொடுக்கின்றோம். அவர்கள் தங்களது விருப்பு வெறுப்புக்கள், ஆசைகள், உணர்வுகள், சூழ்நிலைகள் பற்றி மனம்விட்டு பேச ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. மேலும், அவர்களுக்கு எந்த ஒரு நேரத்திலும் உதவி செய்வதற்கு ஒருவர் இருக்கின்றார் என்ற உத்தரவாதமும் வழங்கப்படுகின்றது.

### பிள்ளைகளுடன் கழிக்க நேரம் ஒதுக்குவது எப்படி?

பிள்ளைகளுடன் கழிக்க ஒரு நேரத்தை ஒதுக்குவது வேலை செய்யும் பெற்றோருக்கு கடினமானதாக இருக்கலாம். அவ்வாறு நேரம் ஒதுக்குவது ஒரு பிரச்சினையாகத் தோன்றும்போது சில எளிமையான உத்திகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகும். தொலைபேசி மூலம் அழைப்பினை ஏற்படுத்தி பேசுவதுகூட சிறந்ததாகவே கொள்ளப்படுகின்றது. குழந்தைகள் எப்போதும் தங்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஒரு வழியை தேடிக்கொண்டே இருப்பார்கள். அதற்கு சித்திரம் ஒரு சிறந்த ஊடகமாக காணப்படுகின்றது. உங்களது பிள்ளைகளை சித்திரம் வரைவதற்கு அதிகம் ஊக்கப்படுத்துங்கள். வரையும் படங்களை அடிப்படையாக வைத்து ஓர் உரையாடலை ஆரம்பியுங்கள். அவர்கள் தாமாகவே தங்களுக்குள் இருக்கும் விடயங்களை உங்களுடன் பகிர ஆரம்பிப்பார்கள். பகிரும் விடயங்களை அவதானமாக செவிமடுக்கும் போது உங்களுக்கு தெரியாத விடயங்கள், பிரச்சினைக்குரிய விடயங்கள் ஏதுமிருப்பின் அவை தென்படத் துவங்கும்.

மேலும், உரையாட ஒரு நேரம் ஒதுக்க வேண்டும் என்று எதிர்பார்க்காது குறுகிய தாய் இருந்தாலும் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பேசுவது சிறந்தது. உணவுண்ணும் போது, மாலை நேரங்களில் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், படுக்கைக்கு செல்லும் நேரம், பயணம் செய்யும்போது, கடைகளுக்குச் செல்லும்போது என கூறிக் கொண்டே போகலாம்.

எவ்வாறிருந்தாலும், பிள்ளைகளுடன் உரையாடும் அந்த நேரங்களில் மிகவும் சிறந்த ஓர் உணர்வு ஏற்படும் விதத்தில் நடப்பது முக்கியம். பிள்ளைகள் எல்லா நேரமும் பேசுவதற்கு தயாராக இருக்க மாட்டார்கள். எனவே, பேசும் நேரங்களில் அவர்களுக்குப் பயம், சஞ்சலம், கோபம் அல்லது கவலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம். எனவேதான், பேசும் நேரங்களில் அவர்களுக்குப் பிடித்த ஏதாவது ஒன்றைச் செய்வது அவர்கள் மன அமைதி அடைய உதவும்.

### பிள்ளைகள் சொல்வதை செவிமடுப்பது எப்படி?

பிள்ளைகள் சொல்வதை செவிமடுப்பது, அவர்கள் தெரிவிக்க முயலும் விடயம் என்னவென்று அறிவது, அவர்களுடைய சூழ்நிலை என்ன என்பதைப் புரிந்து அதற்கு ஏற்ப நடப்பதே உரையாடலின் முக்கிய பகுதியாகும். பெற்றோர் அவர்களை செவிமடுத்தல் என்பது பிள்ளைகளின் சிறந்த உள, மன வளர்ச்சிக்கு பெரும் உதவியான, சக்தி வாய்ந்த கருவியாகும்.

பிள்ளைகள் இயல்பாகவே அதிக ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அவர்களுடைய கற்பனை உலகானது அவர்கள் பார்க்கும் கார்டூன்ஸ், திரைப்படங்கள் மற்றும் கதைகளில் வரும் கதபாத்திரங்களினால் நிரம்பியுள்ளது. தங்களுக்கென்றே ஓர் உலகை அமைத்துக் கொண்டு அதை மற்றவர்களுடன் பகிர ஆசைப்படுவர். ஆனால், நேரமின்மை காரணமாக பெற்றோர் அவர்களையும் அவர்களுடைய ஆசைகளையும் ஒதுக்கி விலக்கும்போது அவர்கள் மனத்தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். மேலும், அவர்களுடைய செயற்பாடுகளில் பெரியவர்கள் அதிகம் அக்கறை காட்டும்போது அவர்கள் மனம் விட்டுப் பேசவும் வெளிப்படையாக விடயங்களை கலந்து பேசவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பாடசாலைகளில் நடக்கும் விடயங்கள் பற்றி, ஆசிரியர்கள் பற்றி, ஆசிரியர்கள் பேசும், நடக்கும் விதங்கள் பற்றி பிள்ளைகளுடன் தினசரி விசாரித்து வருவதை பழக்கமாக வைத்துக் கொள்வது நல்லது. இதன் மூலம் அந்தக் குழந்தையும் எல்லா விடயங்களையும் சொல்வதற்கு பழகிக் கொள்ளும். எனவே, தவறுகள் நடக்கும் பட்சத்தில் பிள்ளை அதைப் பற்றிப் பேசும் அல்லது மறைக்க முயலும். மறைக்க முயலும்போது பெற்றோருக்கு அந்த வேறுபாட்டை உணரக் கூடியதாக இருக்கும்.

பெரியவர்கள் சிந்திக்கும் அளவிற்கோ, செயற்படும் அளவிற்கோ பிள்ளைகளால் செயற்பட முடியாதென்பதைப் புரிந்து, அவர்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அவர்கள் முடியுமானதை செய்யும்போது அவர்களைப் பாராட்டி பேசி மனம்திறந்து பேசவைக்க வேண்டும். அவர்கள் செய்யும் சிறு விடயங்கள் கூட பாராட்டப்படாவிட்டால் மனம் தளர்ந்து போவதுடன் சொல்ல வேண்டிய விடயங்களை சொல்லாமல் விட்டு விடுவார்கள். அவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முயலுங்கள். புரிய முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில் அவர்களைப் பேசவைக்க வேண்டும். அவர்களுடைய உணர்ச்சிகளை, கவலைகளைப் பற்றி விரிவாகப் பேசவைக்கும் போது மன ஆறுதல் அடைகின்றனர்.

அவ்வாறு பேசும்போது குழந்தைகளின் உடலசைவுகள், முகபாவங்கள், சைகைகள் மீது அவதானம் செலுத்துவது அவசியம். அவர்கள் சொல்லும் விடயத்திற்கும் உடலசைவுகளுக்கும் தொடர்புகள் அதிகம் காணப்படுவதால் அது அதிகளவிலான தகவல்களை தரக் கூடியதாக இருக்கும். மேலும், உரையாடும்போது பிள்ளைகளின் கண்களுடன் தொடர்பினை மேற்கொள்வது அவசியம். கண்களைப் பார்த்துப் பேசும்போது கூட அவர்களுடைய மனநிலையை நன்கு புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். விருப்பம் இன்மை, பயம், கவலை, குழப்ப நிலை என அதிகளவிலான அறிகுறிகளை கண்கள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மறைந்த மாதுலுவாவே சோபித தேரர் வழங்கிய இறுதி ஊடகப் பேட்டியில் ஜனாதிபதி சுதந்திரக் கட்சியை ஸ்திரப்படுத்துவதிலும் பிரதமர் ஐ.தே.க. யைப் பலப்படுத்துவதிலும் ஈடுபட்டால் நாட்டை முன்னேற்றுவது யார் என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமரும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியும் இதுவரை முரண்பட்டுக் கொள்ளாவிட்டாலும்

கூட்டரசாங்கமாக இருந்தாலும் தேசிய அரசாங்கமாக இருந்தாலும் பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமித்தமையை மக்கள் அலட்டிக் கொள்ளாமைக்குக் காரணம், நாட்டுக்கு நல்லது நடப்பதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்பதுதான். ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின்


# கூர்மையடையும் கருத்து வேற்றுமைகளும் தேசிய அரசாங்கம் எதிர்நோக்கும் சவால்களும்



எம்.எச்.எம். ஹஸன்

இரு கட்சிகளையும் சேர்ந்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் வெளியிடும் கருத்துக்கள் கூட்டுப் பொறுப்பை மீறுவது போன்றும் ஒருவரையொருவர் குற்றம் சுமத்துவது போன்றும் அமைந் திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக் காக தலைமைதாங்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தமையை அடுத்து, கூட்டரசாங் கத்தின் இருப்புப் பற்றி சிலர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அவ்வாறு கருத்து வெளியிடுவோர் கூறும் காரணம்,



மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சி மேடையில் ஏறுவதினூடாக ஐ.தே.க. வுடைய உறவில் பாரிய விரிசல் ஏற்பட வாய்ப்புண்டு என்பதும் அதனூடாக அரசாங்கத்தின் இரு கட்சி உறவு முறிவ டைய வாய்ப்புண்டு என்பதுவாகும்.

ரணில்-மைத்திரி கூட்டு இரண்டு வருடங்களுக்கானது என்று இணக்கம் காணப்பட்டாலும் அதன் பின்னர் தொடர்ந்து கூட்டரசாங்கம் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. 19 ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட்ட தேசிய அரசாங்க எண்ணக் கருவைப் பயன்படுத்தி மெகா அமைச்சரவையை அமைத்து பதவிகளையும் பங்கிட்டுக் கொண்டாலும் இது தேசிய அரசாங்கமல்ல என்பது எல்லோருக்கும் தெரியும்.

பிரதிபலிப்பு 19 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்துடன் நிறைவு பெற்றது. எனினும், பூரண யாப்புத் திருத்தமொன்றை மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்து விஜயத்தின்போது புதிய அரசியலமைப்பு அமைக்கப்படும் என்ற செய்தியை வெளியிட்டுள்ளார். பாராளுமன்றத் தேர்தலின் பின்னர், யாப்பு மாற்றம் பற்றி வெளியான முக்கிய செய்தியாக இதனைச் சொல்லலாம்.

மேலை நாடுகளிலும் ஐ.நா. மற்றும் மனித உரிமை அமைப்புகளிலும் இலங்கை நேர் மனப்பாங்கோடு பார்க்கப்படுவதற்கு ஜனாதிபதியின் அல்லது பிரதமரின் ஜனநாயகத் தன்மையோ, அரசாங்கச் செயற்பாடுகளோ பிரதான காரணிகளல்ல. தமிழ் மக்களும் ஏனைய சிறுபான்மையினரும் நீதியாக நடத்தப்படுகின்றனர் என்பதே முக்கிய காரணமாகும். வடக்கு-கிழக்கு மாகாண சபைகளில் சிவில் கவர்னர்கள் நியமிக்கப் பட்டமை, அரசியல் நிர்ணய சபையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை, தமிழ்க் கைதிகளின் விடயத்தில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் இலகுவான போக்கு, அண்மைக் கால நீதிமன்றத் தீர்ப்புகளில் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக வழங்கப்பட்ட நியாயமான தீர்ப்புகள், அக்னலிகொட மற்றும் தாஜுடீன் கொலையோடு தொடர்புபட்ட படைவீரர்களுக்கு எதிரான விசாரணை



போன்ற வேறு பல விடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துவது கண்கூடு.

இலங்கையின் ஜனநாயக விருத்தியில் அடுத்த எதிர்பார்ப்பு நிறைவேற்று நிர்வாக ஜனாதிபதி முறை ஒழிப்பு, தொகுதி வாரி அல்லது கலப்பு முறை பிரதிநிதித்துவம் கொண்ட தேர்தல் முறை என்பன முக்கிய இடம் வகிக்கின் றன. தமிழ் மக்களின் சார்பில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் யாப்பு மாற்றம், மனித உரிமைகளை விரிவுபடுத்துதல் என்பன முக்கிய எதிர் பார்ப்புகளாக உள்ளன. சர்வதேச சமூ கமும் இந்தியாவும் கூட எதிர்பார்ப்பது இனப் பிரச்சினைத் தீர்வுடன் கூடிய யாப்பு மாற்றத்தையே ஆகும்.

இதற்கிடையில் வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற பெயரில் இங்கும் விமல், தினேஷ், கம்மன்பில கூட்டுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறு நிகழ்ந்தால் முன்னைய சுதந்திரக் கூட்டணியின் வாக்கு வங்கி இரு கூறாகப் பிரியும் ஆபத்துண்டு. அது மட்டுமன்றி, மஹிந்தவுடன் இருக்கும் சுதந்திரக் கட்சி எம்பிக்கள் மற்றும் அரசியற் தலைமைகளின் உண்மையான நிலைப்பாடு, அதாவது மைத்திரிபாலவை தலைவராக ஏற்றுக் கொள்வதா நிரந்தரமாகப் பிரித்துவிடுவதா என்ற விடயம் தெளிவாகும். இது ஐக்கிய தேசியக் கூட்டணி உள்ளூராட்சித் தேர்தலில் சிரமமின்றி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாகவும் அமையும்.

ஜனாதிபதி யாப்பு மாற்றம் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அதனை நடைமுறைக்குக் கொண்டு வர எந்த ஏற்பாடும் இதுவரை செய்யப்பட வில்லை. அன்றியும் பாராளுமன்றத்தில் அன்றி அமைச்சரவையில் இன்னும் பேசுபொருளாக அது வரவில்லை. பிரதமர் இது விடயமாக காத்திரமான கருத்துக்களை கூறவுமில்லை. ஆனால், சிவில் சமூகத்தினர் யாப்பு மாற்றம் பற்றிய ஆழமான வாதப் பிரதிவாதங் களில் ஈடுபடுகின்றமை தெரிகிறது. மாற்றுக் கொள்கைக்கான நிலையம் புதிய யாப்பு நகர்வொன்றிற்காக மக்கள் கருத்துக்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது ஒரு முக்கிய முன்னெடுப்பாகும். அரசாங்கம் கொண்டு வரும் யாப்பின் நிறை குறைகளை, ஆழ் அகலத்தை ஆராய்வதை விட சிவில் சமூகம் முன்வைக்கும் அரசியல் யாப்பு நகலை அரசாங்கம் ஆய்வுக்கு எடுக்குமானால் அது அதிகூடிய ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக அமையும்.

இதற்கிடையில் காலம் சென்ற மாதுலுவாவே சோபித தேரரின் இறுதிக் கிரியையின்போது உரையாற்றிய மைத்திரிபால சிரிசேன அவர்கள், ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலை யில் வாக்குறுதியளித்தார். மஹிந்த

அணியில் 56 பேர் இருப்பதாகக் கூறப்படும் நிலையிலும் ஏனைய கட்சிகள், குழுக்கள் சேர்ந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவர முடியும். ஆனால், தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் அதிகாரப் பரவலாக்கலை சுதந்திரக் கட்சியினர் எவ்வாறு நோக்கப் போகின்றனர் என்பது தெளிவற்ற நிலையிலேயே உள்ளது. மைத்திரிபால சிறிசேனா சுதந்திரக் கட்சித் தலைவராக இருந்தாலும் சுதந்திரக் கட்சி எம்பிக்கள் அவரோடு இந்த விடயத்தில் எவ்வாறு ஒத்துழைப்பார்கள் என்பது இன்னும் தெளிவில்லை. நடைபெறும் நிகழ்வு களைப் பார்க்கும்போது கூட்டரசாங்கம் விரிசலடையும் நிலைக்கு இப்பிரச்சி னை வலுவூட்டக் கூடும் என்ற கருத்தும் உண்டு.

ஒற்றையாட்சி, அதிகாரப் பரவலாக்கல் ஆட்சியின் கட்டமைப்பு, தேர்தல் முறை போன்ற கருத்து வேற்றுமை மிக்க விடயங்கள் இதற்குள் உண்டு. இதனைத் தணிக்க முடியுமான ஒரே காரணியாக இருப்பது சிவில் சமூகத்தின் ஈடுபாடும் தொடர்ந்தேர்ச்சியான வலியுறுத்தலுமாகும். சிவில் சமூகம் ஒரு யாப்பு நகலைத் தயாரிப்பது இதில் பிரதான முன்னெடுப்பாக அமையும்.

நடந்து முடிந்த இரண்டு தேர்தல் களிலும் சுதந்திரக் கட்சியைத் தோற் கடித்தவர் என்ற குற்றச்சாட்டுக்கு மைத்திரிபால சிரிசேன ஆளாகியுள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் அக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து முற்றிலும் விலகி தனித்தும் போட்டியிடுவது இன்றியமையாத ஒன்றாகவுள்ளது.

ஒரு பக்கத்தில், கட்சியைத் தோற் கடித்த அவப் பெயரில் இருந்து வெளிவருவதற்கும்; மறுபக்கத்தில், பிரதேச ரீதியாகக் கட்சியின் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி, உண்மையாகவே கட்சி யைக் கையிலெடுக்க வேண்டுமானால் மைத்திரியின் தலைமையில் ஏதாவது ஒரு வெற்றி சுதந்திரக் கட்சிக்குத் தேவைப்படுகிறது. அதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் உள்ளூராட்சித் தேர்தலாகும். இது ஒரு ஆபத்தான முயற்சியும் கூட. மைத்திரி பிரசாரத்தில் இறங்கியும் சுதந்திரக் கட்சி பின்னடைந்தால், மஹிந்த மீண்டும் தலைமைத்துவத் திற்குப் போட்டியிடும் ஆபத்துண்டு. அதில் வெற்றிபெறும் வாய்ப்பும் உண்டு. ஜனாதிபதியின் தலைமையில் கட்சி வெற்றி பெற்றால், அது ஐ.தே.க. வின் பார்வையிலும் கட்சி சார்பற்ற சிவில்ச் சமூகத்தின் பார்வையிலும் ஒரு தோல் யாகவே கருதப்படும்.

அதிகாரம் இருக்கும் இடத்தினை நோக்கி மக்கள் குவியும் அரசியல் யதார்த்தத்தின்படி, ஜனவரி எட்டின் பின் பெருந்தொகையான சுதந்திரக் கட்சியினர் மைத்திரியின் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

➡ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 க்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

தொடர் 11



இஸ்மாயில் முஹம்மது அலி ஜின்னாஹ் (SLEAS)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்)

அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை வினாப் பத்திரத்துடன் தொடர்புடைய கல்வி நிர்வாக எண்ணக்கருக்களை எமது பத்திரிகையில் தொடராக பிரசுரிக்க தீர்மானித்துள்ளோம். இப்பரீட்சைக்குத் தயாராகும் பரீட்சார்த்திகளுக்கு இப்பகுதி உதவியாய் அமையலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.
- ஆசிரியர் பீடம் -

# இலங்கைக் கல்வியின் நோக்கங்கள்

### பாடவிதான அபிவிருத்தி

இலங்கை அரச பாடசாலைகள் தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தை அமுல்படுத்துகின்றன. ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைகளோடு (TIM) ஊடாக பாடத்திட்டத்தினை தயார்படுத்தல் வேண்டும்.

### இணைப் பாடவிதான செயற்பாடுகள்

இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பல்வேறு இணைப் பாடவிதான செயற்பாடுகள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துகின்றன. இணைப் பாடவிதான செயற்பாடுகள் மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தி, மனவெழுச்சி விருத்தி, அணி உருவாக்க விருத்தி, தீர்மானம் எடுத்தல், தலைமைத்துவ திறன் மானிட விருத்தி ஆளிடை தொடர்பு போன்ற திறன்களை விருத்தி செய்கின்றன.

### முறைசாராக் கல்வி

முறைசாராக் கல்வி மூலம் பாடசாலை செல்லாத, இடைவிலகிய மற்றும் வளர்ந்தோர் ஆகியோருக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. முறைசாராக் கல்வி மூலம் செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்:

01. செயற்பாட்டு கல்வியறிவு நிலையங்கள்

பாடசாலை செல்லாத பிள்ளைகள் வாழும் பிரதேசத்தினை மையப்படுத்தி இந்நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. முற்றாக பாடசாலை செல்லாத அல்லது பாடசாலையிலிருந்து இடைவிலகிய பிள்ளைகள் சமூக, குடும்ப பின்னணி காரணமாக இடர்படும் பிள்ளைகளுக்கான செயற்பாடுகள் இங்கு நடை பெறுகின்றன.

02. சமூக கற்றல் நிலையங்கள்

சமூக கற்றல் நிலையங்களினூடாக பல்வேறுபட்ட குழுக்களை மையப்படுத்தி தொடர் கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இந்நிலையங்கள் ஊடாக வருமானம் மீட்டுவதற்கான செயற்திட்டங்கள், திறன் விருத்தி செயற்திட்டங்கள் என்பன இடம்பெறுகின்றன.

03. தொழிற் பயிற்சி நிலையங்கள்

இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி செயற்திட்டங்கள் இந்நிலையங்களினூடாக செயற்படுத்தப்படுகின்றன.

04. கட்டாயக் கல்வி சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

இலங்கைப் பாராளுமன்றத்தினால் 1997 இல் கட்டாயக் கல்வி சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டதுடன் 5-14 வயதெல்லையை உடைய சகல பிள்ளைகளும் கட்டாய பாடசாலைக் கல்வியினைப் பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பாடசாலை முறைசார் கல்வி வாய்ப்பினைப் பெறாத பிள்ளைகளுக்கான மாற்று வழிமுறை முறைசாரா நிகழ்ச்சித் திட்டத்தினூடே இந்த கட்டாயக் கல்வி வழங்கப்படுகின்றது.


### விசேட கல்வி

விசேட தேவையுடைய பிள்ளைகளை மையப்படுத்தி பல்வேறு செயற்திட்டங்கள் இதனூடே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட வகுப்பறைகள் மற்றும் உட்படுத்தல் கல்வி என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### கல்வி முகாமைத்துவம்

கல்வி வாய்ப்பினை வழங்கும் பொறுப்பு கல்வி அமைச்சு மற்றும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### கல்வி நிர்வாக மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பு




### கல்வி அமைச்சின் பணிகள்

1. தேசிய கல்விக் கொள்கை வகுத்தல் மற்றும் நவீன மயப்படுத்தல், தேசிய கல்வி ஆணைக்குழு பணிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.
2. தேசிய நோக்கங்களுக்கு அமைவாக கல்வி செயற்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்
3. கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
4. பொதுக் கல்வியின் தரத்தைத் தீர்மானித்தல்.
5. பொதுக் கல்வி மற்றும் ஆசிரியக் கல்வி பாடவிதான என்பவற்றை அமுல்படுத்தல்.
6. தேசிய மட்ட பரீட்சை மற்றும் மதிப்பீட்டு முறைகள்
7. பலமிக்க பண்புசார் தரம் கொண்ட கல்விச் செயற்பாடுகள்.
8. நிர்வாக முகாமைத்துவம் மற்றும் கல்விச் செயற்பாடு தொடர்பாக மாகாண கல்விப் பொறுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
9. வெளிநாட்டு உதவி பெறும் செயற்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
10. பாடநூல், சீருடை தேசிய மட்ட விநியோக சேவை மற்றும் பொருட்கள் வழங்குதல்.

### கல்வி அமைச்சுடன் இணைந்த பல்வேறு நிறுவனங்கள்

01. மாகாண கல்வித் திணைக்களம்
02. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
03. இலங்கை பரீட்சைத் திணைக்களம்
04. தேசிய கல்வி நிறுவகம்
05. தேசிய நூலகம் மற்றும் சுவடிக்கூட சபை
06. இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை
07. இலங்கை யுனெஸ்கோ ஆணைக்குழு

### கல்வி அமைச்சின் நிருவாக முகாமைத்துவ அமைப்பு

- கல்வியமைச்சின் செயற்பாடுகள் மத்திய அரசின் கல்வியமைச்சரின் தலைமையின் கீழ் வழிநடத்தப்படும். கல்வியமைச்சர், ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு பொதுக் கல்வி தொடர்பாக வகைகூறல் வேண்டும். அமைச்சருக்கு உதவியாக பிரதியமைச்சர் நியமிக்கப்படுவார்.
- கல்வியமைச்சரின் செயலாளர் தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த பொறுப்பாக இருப்பதுடன் அவருடன் மேலதிக செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.
- இலங்கை பரீட்சை திணைக்களம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கீழ் பொதுப் பரீட்சைகள் நடத்தப்படும்.
- இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் கீழ் பாடநூல் தயாரிப்பு மற்றும் விநியோகம் என்பன இடம்பெறும்.
- தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் தேசிய பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் ஆசிரியர் பயிற்சி என்பவை பொறுப்பாக இருக்கும்.
- தேசிய பாடசாலைகள், ஆசிரிய கல்வி நிறுவனங்கள் என்பன ஆசிரியர் கல்விக்கான பிரதான ஆணையாளர் மூலம் நிர்வகிக்கப்படும்.

### மாகாணக் கல்வி நிருவாக முறை

இலங்கையில் உள்ள 9 மாகாணங்களிலும் மாகாணக் கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் மாகாணக் கல்வி அமைச்சு இயங்கும். மாகாணக் கல்வி அமைச்சருக்கு உதவியாக மாகாண கல்விச் செயலாளர் செயற்படுவார்.

பாடசாலைகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும். அதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

மாகாணக் கல்வித் திணைக்கள செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் வலயக் கல்விப் பணிமனைகள் இயங்கும். இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படுவார். பாடசாலை முகாமைத்துவம், மேற்பார்வை போன்ற பணிகள் வலயக் கல்விக் காரியாலயம் மூலம் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு வலயத்திலும் சராசரியாக 100-150 இடைப்பட்ட பாடசாலைகள் அமைந்திருக்கும். வலயக்கல்விப் பணிமனையின் செயற்பாடுகளை இலகுபடுத்த கோட்டக் கல்வி காரியாலயம் நிறுவப்பட்டுள்ளதோடு கோட்டத்திற்கு பொறுப்பாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் செயற்படுவார்.

மாகாண சபை, மாகாண கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து கீழ் பணிகளுக்கு பொறுப்பாக செயற்படல் வேண்டும்.

1. மாகாண மட்டத்தில் பாடசாலைகளை நிர்வகித்தல் மற்றும் செய்தல்
2. தேசிய மட்டக் கல்வித் தரங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைய மாகாண பாடசாலைகளில் தரத்தினைப் பேணல்
3. மாகாண கல்வி அபிவிருத்தி திட்டமிடலை தயார்படுத்தலும் மத்திய கால திட்டமிடல் மற்றும் வருடாந்த அமுலாக்கத் திட்டம் தாயர்படுத்தவும்
4. மாகாண ஆசிரியர் ஆளணி தொடர்பான முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுத்தல். அத்தோடு ஆசிரிய கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
5. முறைசார் கல்வி, விசேட கல்வி வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல்
6. மாகாண மட்ட தொடர் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

### பாடசாலை மட்ட முகாமைத்துவம்

வினைத்திறன் மற்றும் வினைத்திறன் மிக்க பாடசாலை முகாமைத்துவ செயற்பாட்டிற்கு தலைமை தாங்குநராக அதிபர் செயற்படுவார். தற்போது பாடசாலைகள் பாடசாலை முகாமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளை வலுவூட்டுவதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தாமாகவே தீர்மானம் எடுத்தல், சமூகத் தேவைகளை நிறைவேற்றல் போன்றவற்றிற்காக பாடசாலை அபிவிருத்திக்குழு (SDB) நியமிக்கப்பட்டுள்ளதோடு பாடசாலையில் செயற்திட்டங்களை முன்னெடுக்க ஆசிரியர் புறத்திலிருந்து பாடசாலை முகாமைத்துவ அணி (SMT) நியமிக்கப்படுகின்றது. பாடசாலை அபிவிருத்திக்குழு பாடசாலைக் கல்வி முன்னேற்றம் தொடர்பாக வகை கூறல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மலைஞானி

# கூட்டு ஒப்பந்தம், மீரியபெத்த வீடமைப்பு: இழுபறிக்கு என்ன காரணம்?



மலையகத் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இந்துக்கள் என்ற வகையில் அவர்களுக்கு நமது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது என்பதற்கு ஒரு புராண ரீதியான காரணம் காட்டப்படுகிறது. நரகாசுரன் என்ற தீமை செய்யும் அரக்கனை கிருஷ்ணர் அழித்ததாகவும் மரணத்துக்கு முன்னர் தான் இறந்த தினத்தை தீபமேற்றி கொண்டாடும்படி அவன் வேண்டிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. அரக்கர் என்றோர் இனம் பூமியில் வாழ்ந்ததா என்ற ஆய்வை ஒருபுறம் வைத்து விடுவோம். வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்த செய்தியை பால்சோறு சமைத்து கொண்டாடியது ஒரு பண்பான செயல் அல்ல என்றால் நரகாசுரன் இறந்ததைக் கொண்டாடுவதும் பண்பான செயலாகாது என்ற வாதத்தையும் ஒருபுறம் வைத்து விடுவோம்.

தீமைகள் அகன்று வாழ்வில் ஒளி பரவ வேண்டும் என்ற எண்ணம் அனைவரிடமும் உள்ளது. மனிதன் அதை நோக்கித்தான் எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கிறான். நோய், நொடி, பிணியில் இருந்து விடுதலை பெற்று ஆரோக்கியமாக வாழ வேண்டும்; ஏழ்மை, பாமரத்தனம் நீங்கி செல்வமும் கல்வியும் கொண்ட வாழ்க்கை அமைய வேண்டும்; காணி, பூமி, வீடு, மனைவி, பிள்ளைகள் எனச் செல்வச் சிறப்புகளோடு வாழ வேண்டும்; சுமைகளும் கவலைகளும் அற்ற வாழ்க்கை அமைய வேண்டும் என்பது போன்ற இலட்சியங்களை அடைவதற்காகவே மனிதன் தினமும் முயற்சிக்கிறான்.

முற்காலத்தில் குளிர் காலத்தில் இருந்து விடுபட்டு வசந்த காலத்துக்காக மனிதர்கள் ஏங்கியிருந்தார்கள். மாரியில் இருந்து விடுபட்டு கோடைக்காக ஏங்கியிருந்தார்கள். இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தருவதற்காக ஒரு காந்திஜிக்காக ஏங்கியிருந்தார்கள். ரோமர் ஆட்சியில் இருந்து யூதேவாவுக்கு விடுதலை வாங்கித்தருவதற்காக ஒரு மீட்பவருக்காக யூதர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காத்திருந்தார்கள். ஏன் நாம் கூட ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் இருந்து மீட்பதற்காக ஒரு மீட்பாளருக்காக காத்திருக்கவில்லையா? அப்படியான ஒரு மீட்பவரை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தார் என்பதால்தானே மாதுலுவாவே சோபித தேரரின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதையுடன் அனைத்து மக்களின் கண்ணீரஞ்சலியுடன் நடைபெற்று முடிந்தது.

இவை அனைத்தும் இருளில் இருந்து விடுபட்டு ஒளியை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆற்றப்படுபவை என்று எடுத்துக் கொண்டால் தீபாவளியின் பொருள் புரியும். அதாவது, துன்பம் களைந்து இன்பம் அடைதல் பிணி நீங்கி ஆரோக்கியம் அடைதல் என்றும் சொல்லலாம்.

மலையகத்தில் தீபாவளி விசேடமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். ஒரு ஐந்து நாட்கள் மலையகமே ஸ்தம்பித்து விடும். பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்ல மாட்டார்கள். கடைகள் பூட்டிக் கிடக்கும். வேலைக்கு செல்ல மாட்டார்கள். கொழும்பு போன்ற நகரங்களில் இருந்து வந்தவர்கள் மலையகத்தில் ஒரு வாரம் தங்கி விடுவதால் நகரக் கடைகளும் வெறிச்சோடிப் போய் விடும். மலையகத்தில் பண்டிகை என்றால் அது தீபாவளியும் பொங்கலும்தான்.

பண்டிகைக் காலம் முடிவடைந்ததும் நரகாசுரன் திரும்பி வந்து விடுவான். மீண்டும் பழைய கதைதான். வறுமை, கடன், காணியற்ற, வீடற்ற நிலை, நிச்சயமற்ற வருமானம் என்று பல பிரச்சினைகள். இப்போது மண்சரிவு என்ற இன்னொரு நரகாசுரனுடனும் போராட வேண்டியிருக்கிறது.

மலையக பெருந்தோட்டத்தவர் தற்போது இரண்டு விஷயங்களுடன் போராடி வருகின்றனர். முதலாவது, ஆயிரம் ரூபா சம்பளம் என்ற கோரிக்கை.

உண்மையாகவே ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கித் தருவோம் என்று இ.தொ.கா. அடித்துச் சொல்லி உறுதிமொழி அளித்ததா என்ற கேள்வியும் இருக்கிறது. ஆயிரம் ரூபா கேட்டால்தான் அதைவிடக் குறைந்த ஒரு தொகையைப் பெறலாம் என்று சொல்லப்பட்டதுதான் ஆயிரம் ரூபா கோரிக்கையாக மாறியதா என்ற கேள்வியும் இருக்கிறது. எனினும், இன்று ஆயிரம் ரூபா சம்பள உயர்வு என்ற கோரிக்கையே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், தேயிலை ஏற்றுமதி வர்த்தகம் தற்போது விலை சரிவு, மந்த விற்பனை, கொள்வனவுக்கான பணம் செலுத்தலில் தாமதம் போன்ற பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றது. வழமையாகவே கொடாக் கண்டனான கம்பனிகளுக்கு இது வாய்ப்பாகப் போய் விட்டது. ரூ 450 செலவில் ஒரு கிலோ தேயிலைத் தயாரித்து அதைக் கொழும்பு ஏல விற்பனையில் கிலோ 370 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக முதலாளிமார் சம்மேளனத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஒரு கிலோவுக்கு எண்பது ரூபாய் நஷ்டமடைகிறோம். இன்றைய சூழலில் இன்றைய தினசரி வேதனத்தைக் கூட வழங்க முடியாத சூழலிலேயே இருக்கிறோம். தொழிலாளர் சம்பளம் உற்பத்தியுடன் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும். வருகை அடிப்படையில் வேதனம் வழங்கும் முறை நடைமுறை சாத்தியமற்றது; திறமை அடிப்படையிலேயே வேதனம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்கிறது பெருந்தோட்ட துரைமார் சங்கம்.

சமீபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தேயிலைத் தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் சந்தித்து தேயிலைத் தொழில் துறையின் இன்றைய நிலை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். [illegible] ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகளில் பிரச்சினைகள் இருப்பதால் அந்நாடுகளை மட்டுமே நம்பியிருக்காமல் புதிய நாடுகளைக் கண்டறிய வேண்டும் என்றும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள், எகிப்து, ஆசிய நாடுகளுக்கு அமைச்சர் அந்தஸ்து கொண்ட சக்திவாய்ந்த தூதுக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கையைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு இலங்கைத் தேயிலையை ஏற்றுமதி செய்வது தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு அமைச்சர் மட்ட தூதுக்குழுவை புதுடில்லி அனுப்புவது பற்றிய யோசனையும் இங்கே முன் வைக்கப்பட்டது. பெருந்தோட்டங்களுக்கும் தனியார் சிறுதோட்ட உரிமையாளர்களுக்கும் ஒரு மாதகால மூலதனத்தை அரசு கடனாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது. தேயிலை ஏல விற்பனையில் விற்பனையாகாது தேங்கும் தேயிலையை அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

தேயிலை கைத்தொழில் மோசமான நிலையில் இருப்பதையே இந்தக் கோரிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறான சூழலில் ஆயிரம் ரூபா சம்பளம் அல்லது சுமார் 350 ரூபா அதிகரிப்பு என்பது சாத்தியமாகப் போகின்ற விடயமல்ல.

ஆறாவது முறையாகக் கூடிய கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை எந்த முடிவையும் எட்டாமல் கலைந்திருக்கிறது. அடுத்த பேச்சுவார்த்தைக்கான திகதியும் அறிவிக்கப்படவில்லை.

எனினும், சில ஊகங்களை மட்டும் இங்கே தெரிவிக்க முடியும்.

தொழில் அமைச்சர் ரூ. 770 என்ற தொகையை பிரேரித்திருக்கிறார். இது ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் வருகை அடிப்படையிலான சம்பளத் திட்டத்தின் பேரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனை. இந்த யோசனை ஒரு இடைக்காலத் தீர்வாக இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அடுத்த மார்ச் மாதம் முடிந்ததும் புதிதாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்றும் தெரிய வருகிறது. எட்டு மாதங்களாக இப்பேச்சுவார்த்தை இழுபடுவதால் ஓர் இடைக்கால தீர்வுக்கு வருவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. [illegible] செய்து கொள்ளப்படும் ஒப்பந்தமே கூட்டு ஒப்பந்தமாக அமையும் என்றும் அது திறமை அடிப்படையிலான வேதனமாகவே பெரும்பாலும் அமையலாம் எனவும் யூகிக்கப்படுகிறது.

அடுத்தது மீரியபெத்த வீடமைப்பு

மீரியபெத்த மண் சரிவு நிகழ்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகி இருக்கிறது. மண் சரிவு நிகழ்ந்த சமயத்தில், வீடுகள் உடனடியாகக் கட்டப்படும் என்று சூளுரைக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த நேரடியாகவே அங்கு சென்றார். ஆறுமுகன் தொண்டமான் அன்றைய பாதுகாப்பு செயலாளர் கோட்டாபயவை அழைத்து வந்து அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினார். ஆட்சி மாறியது... ஜனவரியில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவியேற்ற திகாம்பரம் மூன்று மாத காலத்தில் வீடுகள் அமைக்கப்படும் என்றார். அதற்குள் அடுத்த தேர்தல்-பொதுத்தேர்தல் வர எல்லாம் குழம்பிப் போனது. புதிய அமைச்சரவையில் இ.தொ.கா. வுக்கு இடம் கிடைக்கவில்லை. வீடமைக்கும் அதிகாரம் திகாம்பரத்திடம் இல்லை. இறுதியில் பார்த்தால் நான்கு வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. இந்த வேகத்தில் வீடுகள் அமைக்கப்படுமானால் பத்தாண்டுகள் சென்றாலும் வீடுகள் அமைக்கப்பட்டு திட்டம் பூர்த்தியாகாது.

பெருந்தோட்டங்களில் வீடமைப்பை ஏற்று நடத்திவரும் நிறுவனமே டிரஸ்ட். பெருந்தோட்ட சமூக அபிவிருத்தியின் பொருட்டு வெளிநாடுகள் அளிக்கக் கூடிய நிதி தோட்ட கம்பனிகள் அளிக்கும் நிதி என்பனவற்றை மூலதனமாகக் கொண்டு இயங்கும் டிரஸ்ட் நிறுவனம் தோட்ட, சுகாதார, வீடமைப்பு பிரிவுகளில் பெரும் பங்காற்றி வருகிறது. இதன் தற்போதைய தலைவராக புத்திர சிகாமணி நியமிக்கப்பட்டுள்ளார். மீரியபெத்த வீடமைப்புத் திட்டம் ஏன் தாமதமாகிக் கிடக்கிறது என்று கேட்டால் அதற்கு அவர் பதில் தருகிறார்:

''முதலில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இராணுவம் வீடுகளை அமைக்கும் என்று கூறப்பட்டது. பொதுத் தேர்தலின் பின்னர் வீடமைப்பதற்கான பொறுப்பு இடர் முகாமைத்துவ அமைச்சின் வசம் சென்றது.

தற்போது அமைக்கப்பட்டிருக்கும் நான்கு வீடுகளிலும் இராணுவத்தினரே தங்கியுள்ளனர். அவர்களிடம் கேட்டால் கட்டடப் பொருட்கள் ஒழுங்காக வந்து சேர்வதில்லை. ஒழுங்காக அவை வருமானால் வீடுகள் அமைப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்கின்றனர். ஒரு தடவை மணல் வரும். இரண்டு கிழமைகளின் பின்னர் கற்கள் வரும்; கிழமைகள் கழிந்த பின்னர் சீமெந்து வரும் இப்படி மெல்ல மெல்ல பொருட்கள் வந்தால் வீடுகளை அமைப்பது எப்படி என்று அவர்கள் கேட்கிறார்களாம். பதுளை அரச அதிபரிடம் கேட்டால் இடர் முகாமைத்துவ அமைச்சு ஒழுங்காக நிதி தருவதில்லை என்கிறாராம். இடர் முகாமைத்துவ அமைச்சோ, ஒதுக்கீடுகளை முறையாக நாங்கள் செய்திருக்கிறோம் என்கிறதாம். மூன்று பிரிவினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகிறார். இதில் எங்கேயோ ஒரு சிக்கல் இருக்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது. இந்த வீடுகளை அமைக்கும் வேலையை திகாம்பரத்திடம் அரசு வழங்கினால் அப்பொறுப்பு டிரஸ்டிடம் வந்தடையும்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புல்மோட்டை மு

# 5000 ஏக்கருக்கு

# கையறு



லரீப் சுலைமான்
lareefsulaiman@gmail.com

யுத்த காலங்களில் தமிழ் மக்களுக்கு காணிப் பிரச்சினை இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த அதிகமான ஏக்கர் நிலங்களை முஸ்லிம்களும் எல்லைக் கிராம சிங்கள மக்களும் இழந்தனர். வடகிழக்கில் புலிகளுக்குப் பயந்து பெறுமதியான விவசாய, குடியிருப்புக் காணிகளை தமிழ் மக்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு எல்லைக் கிராம முஸ்லிம்கள் வெளியேறினர்.

யுத்த நிறுத்தத்தின் பின்னர் முஸ்லிம்களைப் போன்று தமிழ் மக்களுக்கும் காணிப் பிரச்சினை தலைதூக்கிய அதேநேரத்தில், சிங்கள மக்கள் தாங்கள் இழந்திருந்த காணிகளை அரசாங்கத்தின் உதவியுடன் பெற்றுக் கொண்டனர்.

இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை முழுமையாக எதிர்கொண்டது முஸ்லிம் சமூகம் மட்டுமே. யுத்த காலச் சூழமைவில் புலிகளின் ஆதிக்கப் பிரிவுகளிலிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்களில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டனர்.

அப்போதெல்லாம் இலங்கை அரசாங்கத்திற்கு காணித் தேவை ஒரு பொருட்டாகத் தென்படவில்லை. விடுதலைப் புலிகள் மறைந்திருந்து அரச படைகளை சுட்டு வீழ்த்திய போதெல்லாம் எப்படியோ காடுகளை இல்லாமலாக்கி, குடியேற்றங்களை ஏற்படுத்தி தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணப்பாடே மேலோங்கி இருந்தது. அதனால்தான் காடுகளை வெட்டுங்கள்; வீடுகளைக் கட்டுங்கள்; தோட்டங்களை நிறுவுங்கள்; கடன் வசதி தருகிறோம்; உத்தரவுப் பத்திரங்கள் தருகிறோம் என்றெல்லாம் அரசாங்கம் மக்களை உற்சாகப்படுத்தியது.

அப்படிக் கூறிய அரசாங்கம் யுத்த முடிவின் பின்னர் தனது நிலைப்பாட்டை முற்றிலுமாக மாற்றியது. தமிழ் பேசுவோர் பிராந்தியங்களைச் சிதைக்கும் அந்தரங்கத் திட்டத்தை சிங்களக் குடியேற்றத்தின் மூலம் அது சாதித்து வருகிறது. இதனால்தான், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான முஸ்லிம், தமிழ் பிரதேசங்களில் இன்று காணிப் பிரச்சினையே பேசு பொருளாக இருக்கிறது.


இவ்வாறு, காணிப் பிரச்சினைகளை மிக நீண்ட காலமாக எதிர்கொண்டு வருகின்ற பல முஸ்லிம் பிரதேசங்களில் திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலக பிரிவிலுள்ள புல்மோட்டையும் ஒன்றாகும்.

நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டுள்ள புல்மோட்டையில் குடியிருப்பு நிலங்களும் பாரம்பரியமாக, ஐந்து தலைமுறைக்கும் மேலாக செய்கை பண்ணப்பட்டு வரும் ஆயிரக்கணக்கான விவசாய மற்றும் தோட்டக் காணிகளும் இன்று பறிபோகும் நிலையிலுள்ளன.

கடந்த அரசாங்கங்களினால் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் என்றும் வனவள இலாகாவுக்குச் சொந்தமான காணிகள் என்றும் பாதுகாப்புப் படைகளுக்கு (இராணுவம்-கடற்படை-விசேட அதிரடிப்படை) முகாம் அமைப்பதெற்கென்றும் அதேநேரத்தில், விகாரைக் காணிகள்-தியான நிலையங்கள் என்றும் பல ஏக்கர் காணிகளை புல்மோட்டை முஸ்லிம்கள் இழந்தனர். இந்த காணிகள் போக இன்று மேலும் பல ஏக்கர் நிலங்களுக்கு குறி வைக்கப்படுகிறது. அரச படைகளின் கெடுபிடிகளாலும் விகாராதிபதி ஒருவரின் சதி முயற்சியாலும் குச்சவெளி பிரதேச செயலகத்தின் பொறுப்பற்ற மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களாலும் புல்மோட்டை முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 5000 க்கும் குறையாத காணிகள் இன்று கையறு நிலையில் உள்ளன.

## பொன்மலைக்குடா (அரிசிமலை)

புல்மோட்டைக் கிராமத்தின் மிகப் பிரதானமான இடம் பொன்மலைக் குடாவாகும். 'அரிசி மலை' என்பது இதன் ஆதிகாலப் பெயர். இது கடற்கரையுடன் இணைந்த மலைப்பாங்கான, உல்லாசப் பயணிகளின் மனங்கவர்ந்த எழில் கொஞ்சுமிடம். பொன்மலைக்குடா கடற்கரையின் மணல் சம்பா அரிசியைப் போன்று வெண்மையாகவும் மென்மையாகவும் இருப்பதால் 'அரிசிமலை' என அழைக்கப்படுகிறது. அரசாங்க அளவிடப் படத்திலும் 'அரிசிமலை' என்றே குறிக்கப் பட்டுள்ளது.




தேத்தாவடித்தீவு, வீரந்தீவு, பொன்மலைக் குடா, ஸபா நகர் (ஓடாமலை) முதலான நான்கு முஸ்லிம் கிராமங்களும் 'சுனாமி விலேஜ்' என்றொரு சிங்களக் கிராமமும் இங்குள்ளன. (சுனாமி விலேஜ், சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் நீர்கொழும்பு, குருணாகல், புத்தளம் முதலான வெளி மாவட்ட மக்கள் குடியேற்றப்பட்ட இடமாகும். இதன்போது, 36 சிங்களக் குடும்பங்களும் புல்மோட்டையைச் சேர்ந்த 14 முஸ்லிம் குடும்பங்களும் இங்கு குடியேற்றப்பட்டன. இதற்காக புல்மோட்டை முஸ்லிம்களுக்குச் சொந்தமான பாரம்பரிய விவசாயக் காணிகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டன.)

ஸபா நகரில் ஒரு ஜுமுஆ பள்ளிவாசலும் அஸ்ஸபா முஸ்லிம் வித்தியாலயமும் வீரந்தீவில் ஒரு ஜுமுஆ பள்ளிவாசலும் பொன்மலைக்குடாவில் ஒரு தைக்காப் பள்ளிவாசலும் (யுத்த காலத்துக்கு முன்னர் பொன்மலைக் குடாவில் ஒரு பாடசாலையும் இயங்கி வந்தது.) தேத்தாவடித்தீவில் மஸ்ஜிதுல் முஜீப் தைக்காப் பள்ளிவாசலும் காணப்படுகின்றன.

இங்கு 1200 ஏக்கர் பாரம்பரியக் காணிகள் உள்ளன. ஐந்து தலைமுறைகளாக பராமரிக்கப்பட்டு வருகின்ற இக்காணிகளில் இதுவரை 297 ஏக்கருக்கு மாத்திரம்தான் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (17 ஆங்கிலயர் கால-உறுதிப் பத்திரங்களும் 280 அனுமதிப் பத்திரங்களும் உள்ளன.) மீதமான 903 ஏக்கர் காணிகளுக்கு இன்னும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. இக்காணிகளுக்கு பல தடவைகள் அனுமதிப் பத்திரம் வழங்கக் கோரி விண்ணப்பித்திருந்தும் குச்சவெளி பிரதேச செயலகம் காலம் கடத்தியே வருகிறது. இதனால், பொன்மலைக்குடாவில் ஏகப்பட்ட காணிப் பிரச்சினைகளுக்கு இம் முஸ்லிம்கள் முகம் கொடுத்து வருகிறார்கள்.

பொன்மலைக்குடாவின் கடற்கரையை எதிர்கொள்ளும் பகுதியிலுள்ள படர்ந்த மலை உச்சி 1992.09.22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2 ஏக்கர் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான இடமாக அரசாங்கத்தால் எல்லையிடப்பட்டிருந்தது. பின்னர், இவ்விடம் பௌத்த விகாரைக்குரிய இடமாக மாற்றப்பட்டது. (தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான பல இடங்கள் இன்று பௌத்தர்களின் விகாரைக்குரிய இடங்களாக மாற்றப்பட்டுள்ளன.)

பொன்மலைக்குடாவில் மலையொன்று தொல்பொருள் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டதாலோ, அங்கு ஒரு விகாரை அமைப்பதாலோ புல்மோட்டை முஸ்லிம்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்த விகாரைக்கு அருகாமையிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான குடியிருப்புகளையும் பாரம்பரியமாக செய்கை பண்ணப்பட்டு வருகின்ற விவசாய-தோட்டக் காணிகளையும் இலக்கு வைத்ததாக 500 ஏக்கர் விகாரைக்கு வழங்க வேண்டும் என அங்குள்ள விகாராதிபதி ஒருவர் குச்சவெளி பிரதேச செயலகத்தில் விண்ணப்பம் செய்திருப்பதே பிரச்சினைக்குரிய விடயமாகும்.

பிரித்தானியர் ஆட்சிக் கால உறுதிக் காணிகளுக்கும் (Deed) இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த உத்தரவுப் பத்திரக் காணிகளுக்கும் காணி அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பம் செய்திருக்கின்ற காணிகளுக்குமே இன்று அபாயம் ஏற்பட்டுள்ளது. இக்காணிகளை அளவையிட இதுவரையில் 7 தடவைகள் முயற்சிக்கப்பட்டும் இம்மக்களின் ஒருமித்த எதிர்ப்பின் காரணமாக இக்காணிகள் தப்பித்து வருகின்றன. இந்த எதிர்ப்பின்போது முன்னின்றவர்கள் இரண்டு தடவைகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆண்டாண்டு காலம், நான்கு தலைமுறைக்கும் மேலாக செய்கை பண்ணப்பட்டு வருகின்ற காணிகளுக்குள் இன்று அவர்களுக்கே செல்ல முடியாத துர்ப்பாக்கியம் நேர்ந்துள்ளது. உழவு வேலை அல்லது துப்புரவு செய்யும் வேலைகளில் ஈடுபட்டால் உடனே அவசர சேவைப் பொலிஸாரையும் (119) இராணுவத்தினரையும் வரவழைத்து தடுத்து [illegible]த்தும் ஈனமற்ற செயலையே இந்த விகாராதிபதி செய்து வருவதாக நம்பப்படுகிறது.

இதன்போது, ஒரு காணிச் சொந்தக்காரர் இரண்டு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. ஒன்று, காணி உத்தரவுப் பத்திரம் வைத்திருப்பவர், குறித்த உத்தரவுப் பத்திரத்திற்குரிய காணி 'இதுதான்' என்று பிரதேச செயலாளர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். இவ்விடத்திலுள்ள பிரச்சினை என்னவென்றால், விகாராதிபதி முழு அதிகாரமும் பெற்றவரைப் போன்று தீவிரமாக செயலாற்றுகிறார். இவர் உத்தரவிட்டால் பொலிஸாரும் ஏனைய அதிகாரிகளும் உடன் நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு அங்கு சட்டங்கள் முறையற்றுக் கையாளப்படுகின்றன.

விகாரைக்கு 500 ஏக்கர் வேண்டுமென எல்லைகளையும் காண்பித்து விண்ணப்பம் கோரப்பட்டிருப்பதாலும் குச்சவெளி [illegible]தேச செயலாளர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பதாலும் இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்கு குறிப்பாக, காணி விடயத்தில் ஒரு நியாயமான தீர்வு கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் புல்மோட்டையிலுள்ள ஒரு பாமர முஸ்லிம் காணி உத்தரவுப் பத்திரம் வைத்திருந்தும் தனது காணியை கையிழக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இரண்டாவது, ஒரு பொதுமகன் எத்தனை ஆண்டுகள் தனது காணியைப் பராமரித்து வருகிறான் என்பது இவ்விடத்தில் பார்க்கப் படுவதில்லை. மாறாக, காணி உத்தரவுப் பத்திரம் இல்லாதவர் 'அரச காணிகளை அடாத்தாகப் பிடிக்கிறார்' என்ற குற்றச்சாட்டுக்குள் உட்படுத்தப்பட்டு அவரைக் கைது செய்யவும் வழக்குத் தாக்கல் செய்யவும் சட்டங்கள் கையாளப்படுகின்றன. இதற்கு ஈடுகொடுக்க முடியாத அல்லது வசதியில்லாத ஏழை விவசாயிகள் காணிகளை விட்டும் வெளியேற வேண்டி அனுதாபச் சூழலே இப்பிரதேசத்தில் இடம் பெற்று வருகிறது. இதனால், புல்மோட்டையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஏகப்பட்ட காணிகள் இன்று தரிசு நிலங்களாகவும் புதர்களாவும் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

யுத்த காலத்தில் பராமரிக்கப்படாத காணிகள் காடுகளாகக் கிடப்பதென்பது அபூர்வமான விஷயமல்ல. யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் ஒருவரது காணியைப் பராமரிக்க சட்ட ஒழுங்கின் அடிப்படையில் பிரதேச செயலகத்திற்கு முறைப்பாடு கொடுத்து, பல்வேறு அலைச்சலுக்கு மத்தியில் வனவள இலாகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்லிம்களின் காணிப் பிரச்சினை

## கும் குறையாத காணிகள்
## று நிலையில்...

திணைக்கத்திற்கு போக்குவரத்துச் செய்து, அவர்களையெல்லாம் குறித்த இடத்துக்கு வர வழைத்து பார்வையிட வைப்பதும், வந்தவர்கள் குறித்த இடத்தை அடையாளப்படுத்தி, அக்காணியை துப்புரவு செய்யவும் பராமரிக்கவும் அனுமதி வழங்குவதும் இலங்கையின் நிர்வாகக் 'கடமை' பொறுப்பைப் பொறுத்தமட்டில் சர்வசாதாரண விடயங்களல்ல. இவ்வளவு படித்தரங்களையும் தாண்டிச் செல்வதென்பதே ஒருவருக்கு அது பெரும் வெற்றிதான்.

இவ்வளவு கட்டங்களையும் தாண்டிய ஒரு பொதுமகன் தனது காணியை துப்புரவு செய்யும்போது ஒரு விகாராதிபதி அதைத் தடுப்பதும், பொலிஸாரை வரவழைத்து குழப்பத்[illegible]ந உண்டுபண்ணி நீதிமன்றம் வரை கொண்டு செல்வதென்பதும் உண்மையில் அடாத்தான செயலாகும். ஒரு விகாராதிபதி ஆற்றுகின்ற கருமம் இதுவல்ல. மட்டுமன்றி சகோதர இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை வளர்த்து ஒரு பெரும்பான்மையிடமிருந்து சிறுபான்மையை ஒதுக்கிவிட முயற்சிக்கும் செயலாகும்.

> **ஒரு பொதுமகன் எத்தனை ஆண்டுகள் தனது காணியைப் பராமரித்து வருகிறான் என்பது இவ்விடத்தில் பார்க்கப்படுவதில்லை. மாறாக, காணி உத்தரவுப் பத்திரம் இல்லாதவர் அரச காணிகளை அடாத்தாகப் பிடிக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்குள் உட்படுத்தப்பட்டு அவரைக் கைது செய்யவும் வழக்குத் தாக்கல் செய்யவும் சட்டங்கள் கையாளப்படுகின்றன.**

### மண்கிண்டிமலை (மதீனா நகர்)

மண்கிண்டிமலை பிரதேசம் புல்மோட்டையின் மையமாகும். புல்மோட்டை கொக்குளாய் வீதியின் இரு மருங்கிலுமுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான குடியிருப்பு நிலங்களும் விவசாயக் காணிகளும் கடற்படையின் முகாமுக்கு இரையாகியுள்ளன.

2011 காலப் பிரிவில் கடற்படை முகாம் அமைப்பதற்கென பிரதேச செயலாளரினால் 5 ஏக்கர் காணிக்குரிய அனுமதி வழங்கப்பட்டது. அவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் மேலும் 17 ஏக்கருக்கும் அதன் பின்னர் 6 ஏக்கருக்கும் விண்ணப்பம் செய்யப்பட்டு, மொத்தமாக 28 ஏக்கர் காணிக்குரிய அனுமதியை பிரதேச செயலகம் வழங்கியிருந்தது. மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில், அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு, விவசாயம் செய்யப்பட்டு வந்த காணிகளையும் குடியிருப்பு நிலங்களையும் (கல்வீடு, கிணறு, தோட்டம் ஒருங்கே அமைந்த குடியிருப்பு) இரவோடிரவாக தரைமட்டமாக்கி கடற்படையினர் தமதாக்கிக் கொண்டனர். மேலும், இந்த முகாமுக்கு எதிர்ப்புறத்தில் நபர் ஒருவருக்குச் சொந்தமான 2 ஏக்கர் தோட்டக் காணியில் பெரிய புத்தர் சிலையொன்றையும் நிறுத்தியுள்ளனர்.

அத்துடன், கடற்படையினரின் குடியிருப்புக்கென மேலும் 178 ஏக்கரும் கடற்கரையை எதிர்கொண்டதாக சிறு சிறு முகாம் அமைப்பதற்கென 3 இடங்களில் மேலும் 2 ஏக்கர் வீதமும் இம்மக்களுக்குச் சொந்தமான காணிகள் ஒரு வரையறை இல்லாமல் சுவீகரிக்கப்பட்டன. இந்த 178 ஏக்கருக்குள் விகாரையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவை போக, தற்போது 400 ஏக்கருக்கும் குறையாத காணிகளை அடையாளப்படுத்திவிட்டு 192 ஏக்கருக்கான விண்ணப்பத்தை கடற்படையினர் கோரியுள்ளனர். குச்சவெளி பிரதேச செயலாளர் இவ்விண்ணப்பத்தை நிராகரித்திருந்தாலும் படையினரின் கட்டுக்கடங்காத கெடுபிடிகள் தணிந்தபாடில்லை. ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள 28 ஏக்கரையும் தாண்டி மேலதிகமாக 50 ஏக்கர் வரையும் விஸ்தரிக்கப்பட்டு எல்லைகளும் இடப்பட்டுள்ளன. ஆனால், இந்த எல்லைக்கு நேர்முகமாக 200 அல்லது 201 வது ஏக்கர் இடத்திலுள்ள காணிச் சொந்தக்காரர்கள் தமது காணிகளை துப்புரவு செய்யவோ, பயிர்ச் செய்கைக்குரிய வேலைகளில் ஈடுபடவோ முடியாமல் கடற்படையினர் தடைவிதிக்கின்றனர்; அவர்களைக் கைது செய்கின்றனர். இதனால், மண்கிண்டிமலை பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஏகப்பட்ட காணிகள் இன்று தரிசு நிலங்களாகவும் புற்தரைகளாகவும் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

இது விடயம் குறித்து குச்சவெளி பிரதேச செயலகத்தில் பல முறைப்பாடுகள் அளிக்கப்பட்டிருந்தும் பிரதேச செயலாளரினால் காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேநேரத்தில், யாராவது பொதுமகன் அதுவும் அவனது சொந்தக் காணியைத் துப்புரவு செய்தாலோ அல்லது விறகு வெட்டினாலோ அதே நோடிப் பொழுதில் பிரதேச செயலாளர் கருமமாற்றுகிறார். இதன் போது அனுமதிப் பத்திரம் இல்லாதவர் உடனே காணியைவிட்டும் வெளியேற்றப்படுகிறார். முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பிரதேசத்தில் ஏனைய சமூகத்தவருக்குக் கிடைக்கின்ற சலுகைகளைப் போலவாவது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால், இங்கு சிறுபான்மையாக வாழ்கின்ற தமிழ், சிங்கள மக்களைக் காட்டிலும் முஸ்லிம்கள் விடயத்தில் 100 வீதம் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றமையை அவதானிக்க முடியும்.

ஒரு வியப்புக்குரிய விடயம் என்னவென்றால், இப்போதிருக்கின்ற ஒரு காணிச் சொந்தக்காரர் தனது பரம்பரைக் காணியின் ஐந்தாவது தலைமுறைக்கு உரித்துடையவர். இவருடைய காணிக்கு இன்னும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. இப்படி, மண்கிண்டிமலையில் 95 வீதம் அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத காணிகளாகவே இருந்து வருகின்றன. (பரம்பரைக் காணிகள் ஏன் உத்தரவுப் பத்திரங்கள் இல்லாமல் இவ்வளவு காலங்களாக இருக்கின்றன என்பது தொடர்பான ஆய்வுகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.)

### புல்மோட்டை வடமேற்கு 13 ஆம் கட்டை

இப்பிரதேசத்தில் 27 வது கஜபா தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இதற்காக இம்மக்கள் தமது காணிகளை இழந்துள்ளனர். அப்படியிருந்தும் இதனைச் சுற்றியுள்ள காணிகளில் அவர்களை குடியிருக்கவிடாது இராணுவத்தினர் இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர்.

அதேநேரத்தில், இப்பகுதியிலுள்ள வீதி ஓரங்களில் குடியிருக்கும் சிங்கள மக்கள் தமது குடியிருப்புகளையும் தாண்டி விஸ்தரிப்புகளைச் செய்வதற்கு இங்குள்ள பொலிஸாரும் இராணுவத்தினரும் உடந்தையாக உள்ளனர். அவர்கள் காடு வெட்டுவதிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்வதிலும் இவர்களுக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. அவற்றைக் கண்டும் காணாதது போன்று செயற்படுகின்றனர். ஆனால், இதே வேலைகளை முஸ்லிமான ஒருவர் செய்யப்போனால் சட்டத்தை நிலைநாட்டுபவர் போன்று தொழிற்படுகிறார்கள்.

இப்பகுதியில் அமைந்துள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கென 1987 காலப் பிரிவில் குடியிருப்புத் தொகுதியொன்று ஏற்படுத்தப்பட்டு அதே காலப் பிரிவில் அம்முயற்சி கைவிடப்பட்டிருந்தது. மிக அண்மையில் குருணாகல் பொல்பித்திகம என்ற இடத்தைச் சேர்ந்த விகாராதிபதி ஒருவர் அவ்விடத்தில் குடியேறி விகாரையொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதற்காக, அப்பகுதியைச் சூழவிருந்த முஸ்லிம் குடியிருப்பு முற்சந்தி ஒன்றில் புத்தர் சிலையொன்றையும் நிறுவினார். இப்பகுதியில் பௌத்த தியான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்கனவே பிரதேச செயலகத்தால் ஓர் ஏக்கருக்குரிய காணி அனுமதி வழங்கப்பட்டிருந்தமை இதற்கு சாதகமாக அமைந்திருந்ததால் அதையும் தாண்டி முஸ்லிம்களின் குடியிருப்புடன் சேர்த்து 500 ஏக்கர் விகாரைக்கு வழங்க வேண்டுமென்ற கோஷத்தை விகாராதிபதி விடுத்து வருகிறார்.

இது தவிர, 13 ஆம் கட்டையில் இராணுவ முகாம் மற்றும் 'ரணவிரு கம்மான' எனற பெயரில் இராணுவத்தினருக்கான குடியிருப்பு, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், வனவள இலாகா திணைக்களம், பௌத்த தியான நிலையம் முதலானவை அமைக்கவென 250 இற்கும் குறையாத காணி இழப்பையும் புல்மோட்டை முஸ்லிம்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இக்காணிகளை பல தடவைகள் அளவையிட முயற்சித்து பொது மக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக தாமதித்து வைத்திருக்கிறார்களே தவிர, அம்முயற்சியைக் கைவிடுவதாக இன்னுமில்லை.

இந்தத் திட்டம் அவர்களுக்கு வெற்றியளிக்குமானால் புல்மோட்டை முஸ்லிம்கள் பாரிய இழப்புகளை சந்திக்க நேரிடும். அதாவது;

தொடர்ந்தேர்ச்சியான காணி இழப்பு எதிர்காலச் சந்ததிக்கு காணிப் பற்றாக்குறையை ஏற்படுத்தும். புல்மோட்டை முஸ்லிம்களின் ஜீவனோபாயம் 95 வீதம் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி ஆகியவற்றைக் கொண்டது. இங்கு விவசாயக் காணிகளே பெருமளவு சுவீகரிக்கப்படுவதனால் விவசாயம், கால்நடை முதலான தொழிற் துறைகளை மட்டுமல்ல, இக்காணிகளுக்குள் உள்ளடங்குகின்ற குளங்களையும் இவர்கள் முற்று முழுதாக இழக்கின்றனர். இதனால் இம்மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய பின்னடைவு ஏற்படும்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மாவட்ட செயலகங்களில் எந்தவோர் உயர் பதவியிலும் முஸ்லிம் அதிகாரிகள் இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்



**முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அமைச்சரும் கப்பல்துறை இராஜாங்க அமைச்சருமான எம்.ஈ.எச். மஹ்ரூப் அவர்களின் புதல்வரான இம்ரான் மஹ்ரூப் மிக இளவயது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராவார். எம்.ஈ.எச். மஹ்ரூப் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக மிக நீண்ட காலமாக அந்த இடைவெளி நிரப்பப்படாமல் இருந்து வந்தது. இச்சமயத்தில்தான் அவருடைய மகனான இம்ரான் மஹ்ரூப் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகவும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடன் எங்கள் தேசம் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டது.**

நேர்காணல்:
ஐ.எம். இர்சாத், முஹம்மட் சப்ரி

**எங்கள் தேசம்:**

உங்களது அரசியல் பிரவேசம் சம்பந்தமாகக் கூற முடியுமா?

**இம்ரான் மஹ்ரூப்:**

முதன் முறையாக 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பாராளுமன்ற வேட்பாளராக அரசியல் களத்தில் பிரவேசித்தேன். அந்தத் தேர்தலில் மக்கள் எனக்கு 19 ஆயிரத்துக்கு மேல் வாக்குகளை அளித்த போதிலும் என்னால் வெற்றி பெற முடியவில்லை. அதன் பிற்பாடு 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளேன், அல்ஹம்துலில்லாஹ்.

எனது அரசியல் பிரவேசம் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெறவில்லை; அது தற்செயலாகவே இடம்பெற்றது. 2010 களில் திருமலை மாவட்டத்தில் மேலோங்கியிருந்த தலைமைத்துவ இடைவெளியை கருத்தில் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் திருகோணமலை மாவட்டத்திற்கான தூரநோக்குள்ள துடிப்பான தலைமைத்துவத்தை தேடிக் கொண்டிருந்த வேளையில்தான் என்னுடைய தேவை உணரப்பட்டது. அப்போது, கட்சித் தலைமைத்துவத்தின் வேண்டுகோளின் பேரில் நான் புதுவரவாய் அரசியல் களத்தில் பிரவேசித்தேன்.

**எங்கள் தேசம்:**

இளம் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள். தேசிய அரசியலில் இளைஞர்களது பங்களிப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**இம்ரான் மஹ்ரூப்:**

இளைஞர்கள் ஒரு நாட்டின் பிரதான சக்தி என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. எனவேதான், எமது கட்சி இளம் தலைமைத்துவத்தை வலுப்படுத்த பல்வேறு பகீரதப் பிரயத்தனத்தை முன்னெடுத்து வருகின்றது. இதன் பிரகாரம் இம்முறை பொதுத் தேர்தலில் எனக்கான வேட்பாளர் அங்கீகாரம் கட்சியில் வழங்கப்பட்டது.

இளைஞர் பாராளுமன்றம் என்பதும் இளைஞர்களது சக்தியை தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைக்கின்ற ஒரு செயற்பாடாகவே உள்ளது.

> அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை, சில பகுதிகளில் தேவைகள் கனதியானது. அவற்றை மிகத் துல்லியமாக இனம் கண்டுள்ளேன். இவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வேலைவாய்ப்பு விடயத்தில் எமது இளைஞர், யுவதிகளின் தகைமைக்கேற்ப அரச, தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதும் எனது அடுத்த திட்டமாகும்.

எனவே, நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் அபிவிருத்திக்கும் இளைஞர்களது பங்களிப்பு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

**எங்கள் தேசம்:**

உங்கள் மாவட்ட மக்களுக்கான எதிர்காலத் திட்டம் என்ன?

**இம்ரான் மஹ்ரூப்:**

திருகோணமலை மாவட்டம் மூன்று இனங்களும் வாழ்கின்ற ஒரு மாவட்டமாகும். எனினும், இங்கு முஸ்லிம்களுக்கென்று தனியான பிரச்சினைகள் சில இருக்கின்றன. மீள்குடியேற்றம், காணி, மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் அதிகளவான பிரச்சினைகள் உள்ளன. இவற்றைத் தீர்த்து வைக்க முடியுமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனது முதலாவது திட்டமாகும்.

இவற்றுள் சில பிரச்சினைகள் தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். குறிப்பாக, கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம்கள் பெருவாரியாக வாழ்கின்றனர். எனினும், மாவட்ட செயலகத்தில் எந்தவோர் உயர் பதவியிலும் முஸ்லிம் அதிகாரிகள் இல்லை. குச்சவெளி, தம்பலகாமம் போன்ற பிரதேச செயலகங்களில் கூட உயர் பதவிகளில் முஸ்லிம்கள் இல்லாமையினால் அங்கு செறிந்து வாழ்கின்ற முஸ்லிம்கள் பல்வேறு நிர்வாக ரீதியான புறக்கணிப்புக்களுக்கு உட்படுகின்றனர். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வது என்னுடைய இரண்டாவது திட்டமாகும்.

அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை, சில பகுதிகளில் தேவைகள் கனதியானது. அவற்றை மிகத் துல்லியமாக இனம் கண்டுள்ளேன். இவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வேலைவாய்ப்பு விடயத்தில் எமது இளைஞர், யுவதிகளின் தகைமைக்கேற்ப அரச, தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதும் எனது அடுத்த திட்டமாகும்.

**எங்கள் தேசம்:**

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறப் போகின்றது. ஸ்ரீ.ல.சு.க. வெற்றி பெறும் என அதன் முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**இம்ரான் மஹ்ரூப்:**

தற்போதைய அரசியல் சூழ்நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாகவே உள்ளது. எனவே, அதன் வெற்றி குறித்து சந்தேகங்கள் எதுவுமில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன சுமார் 62 இலட்சம் வாக்கு களைப் பெற்றிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ சுமார் 57 இலட்சம் வாக்கு களைப் பெற்றிருந்தார். ஏறத்தாழ நாலரை இலட்சம் வாக்கு வித்தியாசத்தில்தான் மைத்திரி வென்றார்.

இதில் த.தே.கூ. மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் சுமார் 10 இலட்சம் வாக்குகள் உள்ளன. பொதுத் தேர்தலில் இந்த இரு கட்சிகளும் தனித்துப் போட்டியிடுவதால் அந்த வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்காது. எனவே, ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிடும் என மஹிந்த அணியினர் தப்புக்கணக்குப் போட்டனர். ஆனால், 8 மாதங்களுக்குள் மஹிந்த பெற்ற 10 இலட்சம் வாக்குகளை பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இழந்தது. ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த பெற்ற 57 இலட்சம் வாக்குகள் 47 இலட்சமாக அக்கட்சிக்கு குறைந்துள்ளது.

எனவே, கள நிலைவரங்களின்படி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இன்னும் மாற்றங்கள் வருவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. நாம் மாற்றத்தை நோக்கி பயணிக்க இருக்கிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றி கொள்வதற்காக ஐ.தே. க.யிடம் பல வியூகங்கள் இருக்கின்றன. அதேபோன்று, மாவட்டத்தை வெற்றி கொள்வதற்காக பல செயற்திட்டங்கள் எமது கையில் இருக்கின்றன. எனவே, . அரசியல் சலசலப்புக்களுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. மாவட்டத் தில் ஏற்கனவே நாங்கள் சாதித்துக் காட்டியிருக்கிறோம்.

**எங்கள் தேசம்:**

2016 வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர் அபிவிருத்தி தொடர்பாக எவ்வாறான வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டுமென்று கருதுகிறீர்கள்?

**இம்ரான் மஹ்ரூப்:**

இளைஞர் அபிவிருத்தி தொடர்பாக எமது தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் விசேட வேலைத் திட்டமொன்று உள்ளது. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 10 இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் அடுத்து வரும் வரவு-செலவுத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

அதேபோல, இளைஞர்களின் ஆற்றல்களை வலுப்படுத்தல், அவர்களது சக்திகளை ஒன்றுதிரட்டல், நாட்டு முன்னேற்றத்தில் அவர்களது பங்களிப்புகளை பெறல் போன்ற திட்டங்களும் வரவு-செலவுத் திட் டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இவை தொடர்பாக ஏற்கனவே சில கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசம்

# முத்துருவத் தீவிரங்களை நிராகரித்த துருக்கிய வாக்காளர்கள்



ஸகி பவ்ஸ் (நளீமி)

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற துருக்கியப் பாராளுமன்றத் தேர்தல்களில் ஆட்சியமைப்பதற்கு தேவையான 276 ஆசனங்களை எக்கட்சியும் பெறாத நிலையில், இரண்டாம் முறையும் தேர்தலை நடத்த வேண்டிய தேவை துருக்கிக்கு ஏற்பட்டது. ஆறு மாத இடைவெளிக்குள் துருக்கிய வாக்காளர்கள் மீண்டுமொரு முறை வாக்குச் சாவடிக்குச் செல்ல நேரிட்டது. ஆனால், இம்முறை பலரது எதிர்பார்ப்புகளையும் சிதறடிக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அமையப் பெற்றன. பேராசிரியர் அஹ்மத் தாவுதொக்லோவின் தலைமையிலான நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி (AKP) அமோக வெற்றியீட்டியது. 550 ஆசனங்களைக் கொண்ட துருக்கியப் பாராளுமன்றத்தில் 317 ஆசனங்களை ஆளும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியும் 125 ஆசனங்களை மதச்சார்பற்ற CHP கட்சியும் 40 ஆசனங்களை தேசியவாத MHP கட்சியும் 59 ஆசனங்களை குர்திஷ் அடையாளத்தை முன்னிறுத்திப் போராடும் HDP கட்சியும் பெற்றுக் கொண்டன.

கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளை விட, 4.8 மில்லியன் மேலதிக வாக்குகளை நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி இத்தேர்தலில் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது, கடந்த ஆறு மாதங்களுக்குள் ஒவ்வொரு மாதத்திலும் தலா ஒரு மில்லியன் மேலதிக வாக்குகளால் பேராசிரியர் தாவுத்தொக்லோ தலைமையிலான ஏகேபி கட்சியின் வாக்கு வங்கி அதிகரித்து வந்துள்ளது. ஏற்கனவே ஜூன் மாதம் இடம்பெற்ற தேர்தலில் மொத்த வாக்குகளில் 41 வீதமான வாக்குகளை மட்டுமே நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பெற்றுக் கொண்டது. இம்முறை 49.4 வீதமாக அது அதிகரித்துள்ளது. அக்கட்சியின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 258 இலிருந்து 317 வரை அதிகரித்துள்ளது. ஆறு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தேர்தலுடன் ஒப்பிடும்போது, தேசியவாதக் கட்சியின் பாராளுமன்ற ஆசனங்கள் 80 இலிருந்து 40 ஆகக் குறைந்துள்ளது. குர்திஷ் தேசியவாத கட்சியின் ஆசனங்கள் 80 இலிருந்து 59 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

### தேர்தல் முடிவுகளும் வாக்காளர் நடத்தையும்

தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி 270 ஆசனங்களைப் பெறும் என எதிர்வுகூறின. ஆனால், அவ்வெதிர்வு கூறல்களைப் பொய்ப்பிக்கும் வகையில் அக்கட்சி 317 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இங்கு, ஏன் துருக்கிய வாக்காளர்கள் ஆளும் கட்சிக்கு சார்பாக வாக்களித்தனர் என்ற கேள்வி பரவலாக எழுப்பப்படுகிறது. அதற்கான பல நியாயங்களை அரசியல் ஆய்வாளர்கள் விவாதிக்கின்றனர்.

குறிப்பாக, ஆறு மாதங்களுக்கு முன்னர் எக்காரணங்களுக்காக ஆளும் கட்சியை வாக்காளர்கள் தண்டித்தார்களோ, அத்தவறை திருத்திக் கொண்ட நிலையில் மீண்டும் தேர்தலில் குதித்தமையினாலேயே ஆளும் கட்சியை மக்கள் ஆதரித்தனர் என அரசியல் ஆய்வாளர் டிலிப் கலி குறிப்பிடுகிறார். குறிப்பாக, கடந்த ஜூன் மாத தேர்தலில் மக்களின் வாழ்வுடன் நேரடியாக தொடர்புபடாத ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்தல் மற்றும் துருக்கிக்கு எதிரான சர்வதேச நாடுகளின் சூழ்ச்சி போன்ற கருப்பொருள்களே நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னுரிமை பெற்றன. இவ்விரு அம்சங்களையும் துருக்கிய வாக்காளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

விளைவாக, தனது பிரசார உத்தியிலும் வாக்காளர்களின் தேவையை அறிந்து கொள்ளும் பொறிமுறையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி தள்ளப்பட்டது. எனவே, கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள் மனித உரிமைக் குழுக்களுடனான கலந்துரையாடல்கள், சிவில் சமூக நிறுவனங்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் கூட்டங்கள், சிறுபான்மை அலவீக்கள் மற்றும் குர்திஷ் மக்களுடனான சந்திப்புகள் என நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் நிகழ்ச்சி நிரல் அடர்த்தியானதாக அமைந்திருந்தது. இதற்கூடாக, மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அக்கட்சி மிகச் சரியாக அடையாளம் கண்டது. அதற்கேற்ப நவம்பர் மாத பாராளுமன்றத் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை அமைத்துக் கொண்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உள்நாட்டு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல், தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்கள், அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வு மற்றும் அவர்களது ஆரோக்கிய வாழ்வுக்கான செயற்திட்டங்கள், கல்வி வாய்ப்புகள் என நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் புதிய விஞ்ஞாபனம் நீண்டு செல்கிறது. கடந்த நவம்பர் மாத தேர்தலில் 317 ஆசனங்களை பெற்றுக் கொடுத்ததின் மூலம் இந்த விஞ்ஞாபனத்தை துருக்கிய வாக்காளர்கள் அங்கீகரித்தனர்.

அதேபோல், கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது துருக்கிய வாக்காளர்களால் மிகவும் மோசமாக தண்டிக்கப்பட்ட கட்சி தேசியவாத MHP கட்சியாகும். கடந்த நவம்பர் தேர்தலில் இக்கட்சி 80 ஆசனங்களைப் பெற்ற ஓரளவு பலமான கட்சியாக அது கருதப்பட்டது. என்றாலும், இம்முறை வெறும் 40 ஆசனங்கள் மட்டுமே அதற்குக் கிடைத்தன. ஏன் வெறும் ஆறு மாதங்களுக்குள் 40 ஆசனங்களை அது இழந்தது என்ற கேள்விக்கும் அரசியல் விற்பன்னர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

குறிப்பாக, ஜூன் மாத தேர்தல்களில் எதற்காக அக்கட்சிக்கு மக்கள் 80 ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தனரோ, அவ்விலக்கை கிஞ்சிற்றும் பொருட்படுத்தாத வகையில் தேர்தலின் பின்னர் அக்கட்சி நடந்து கொண்டதே அதன் பின்னடைவுக்குக் காரணமாகும். ஏனெனில், 13 வருட நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் ஆட்சி எர்டோகானிய சர்வாதிகாரத்தை மட்டுமே நிலைநாட்டியிருக்கிறது என கடந்த ஜூன் தேர்தல்களில் தேசியவாதக் கட்சி பிரசாரம் செய்தது. மட்டுமன்றி, குர்திஷ் மக்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தேசியப் பாதுகாப்பிற்கு ஆபத்தானதாக அமையும் எனவும் அக்கட்சி வாதித்தது. இந்தப் பின்புலத்திலேயே இக்கட்சியின் வாக்குவங்கி திடீரென அதிகரித்தது.

ஆனால், எந்த சர்வாதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என அவர்கள் உரக்கக் கூவினார்களோ, அதனை ஒழிப்பதற்கு கிடைத்த கூட்டரசாங்கம் என்ற தளத்தை தேசியவாதக் கட்சி பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியுடன் காணப்படும் தனிப்பட்ட குரோதங்கள் மற்றும் குர்திஷ் மக்களுடனான தனிப்பட்ட வெறுப்பு போன்றவற்றை ஆதாரம் காட்டி ஸ்திரமான பாராளுமன்றமொன்றை உருவாக்க முடியாதவாறு தேசியவாதக் கட்சி செயற்பட்டது. ஆக்கபூர்வமான செயற்திட்டமொன்றை நோக்கி நகர்வதை விடுத்து, நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் மீது பழிசுமத்திக் கொண்டிருந்தது அக்கட்சி. காத்திரமான அரசியல் கலந்துரையாடல்கள் எதிலும் தேசியவாதக் கட்சி பங்கேற்கவில்லை. இதனை துருக்கிய வாக்காளர்கள் நுணுக்கமாக அவதானித்து வந்தனர். முடிவாக, அதற்களித்த வாக்குகளில் அரைவாசியை இம்முறை நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை நோக்கி திருப்பிவிட்டனர்.

இத்தேர்தல்களில் மூன்றாவது முக்கியமான தரப்பாக குர்திஷ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குர்திஷ் தேசியவாதக் கட்சியைக் குறிப்பிடலாம்.

➡ 14



**இத்தேர்தல்களில் வாக்காளர்கள் அல்லது சிவில் சமூகத்தின் குரல் பலமாக ஒலித்திருக்கிறது. துருக்கியின் அரசியல் எவ்வாறு நகர வேண்டும் அல்லது எவ்வாறு நகரக் கூடாது என்ற பாடத்தை அனைத்துக் கட்சிகளுக்கும் அவர்கள் கற்பித்துள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 75)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

முஸ்லிம் சமூகத்தில் நன்மை தொடர்ந்திருக்கும். அல்லாஹ்வுக்கு சான்று பகரக் கூடிய சமூகமாக அது நிலைத்திருக்கும். மறுமை நாள் ஏற்படும் வரை சத்தியத்தை கைக்கொண்டு அதற்கு உதவி செய்வோர் பூமியில் உயிர் வாழ்வர். அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை அல்லாஹ்வின் உதவியைப் பெற்ற குழு ஒன்று அதற்கு அத்தகு துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்ட பொழுதும் தொடர்ந்து பூமியில் உயிர் வாழ்ந்து கொண்டேயிருக்கும் என்பன போன்ற உண்மைகளை இந்த ஹதீஸ் எமக்கு சொல்லித் தருகிறது. அபூ மாலிக் அல்அஷ்அரி அறிவிப்புச் செய்யும் இன்னொரு ஹதீஸ் இதனை உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது:

''மூன்று விடயங்களிலிருந்து அல்லாஹ் உங்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளான். நீங்கள் எல்லோரும் அழிந்துவிடக் கூடியவாறு உங்களது நபி உங்களுக்கு எதிராக பிரார்த்தனை புரிய மாட்டார். அசத்தியவான்கள் சத்தியத்தில் நிலைத்திருப்போரை மிகைக்க மாட்டார்கள். நீங்கள் அனைவரும் வழிகேட்டில் ஒன்று சேர மாட்டீர்கள்.''

(சுனனு அபீ தாவுத்)

**ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜாதித்கள் தோன்றுவர். ஒவ்வொரு நூற்றாண்டிலும் மார்க்கத்தைப் புதுப்பிப்போர் தோன்றுவர் என்பது இன்னொரு சுபசெய்தியாகும்.**

ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜாதித்கள் தோன்றுவர்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் மார்க்கத்தைப் புதுப்பிப்போர் தோன்றுவர் என்பது இன்னொரு சுபசெய்தியாகும். அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார்:

''ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அல்லாஹ் இந்த உம்மத்திற்கு அதனது மார்க்கத்தை அவர்களுக்காக புதுப்பித்துக் கொடுக்கக் கூடிய மனிதர்களை அனுப்புவான்.''

இங்கு மார்க்கத்தைப் புதுப்பிப்போர் என்பது அரபு மொழியில் 'மன் யுஜத்தித்' என வந்துள்ளது. இது ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவான ஒரு பிரயோகமாகும். இதனால்தான் உமர் பின் அப்துல் அஸீஸ், ஷாபிஈ, கஸ்ஸாலி போன்ற தனி மனிதர்களை சுட்டுவதுபோல பலர் இணைந்த குழாமையும் இது சுட்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். சில ஹதீஸ் விளக்கவுரையாளர்கள் ஒரு குழுவையே இது சுட்டுகின்றது என கூறியுள்ளனர். இக்கருத்தையே நானும் தேர்வு செய்கிறேன். தர்பியா அமைப்பு அல்லது அழைப்புப் பணியை மேற்கொள்ளும் அமைப்பு அல்லது ஜிஹாதிய அமைப்பு முஜத்தித்தாக இருக்க முடியும். எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் முஜத்தித் எங்கே எப்பொழுது தோன்றுவார் என்பதை எதிர்பார்த்திருப்பதில் முழுக் கவனத்தையும் குவிக்காது, மார்க்கத்தை புதுப்பிக்கும் இயக்கத்தில் எனது பங்களிப்பு யாது என வினவி அதற்கு பதிலளிக்கும் வகையில் தொழிற்படுவதே சிறந்ததாகும்.

மேலே குறிப்பிட்டவை தவிர்ந்த இன்னும் சில நற்செய்திகளும் உள்ளன. இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் ஆட்சி செய்வதற்காக ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பூமிக்கு வருவார்கள் இருளாலும் அநீதியாலும் நிறைந்திருக்கும் இந்த பூமியை நீதியால் நிரப்புவதற்காக. முஸ்லிம் ஆட்சியாளர் அல்லது தலைவர் ஒருவர் வருவார். மஹ்தி என்ற பெயரால் அவர் அழைக்கப்படுகின்றார்.

## மியன்மார்: முஸ்லிம்களைப்...

(முன் பக்கத் தொடர்)

சிறுபான்மை ரோஹிங்கிய முஸ்லிம்கள் உட்பட ஆயிரக்கணக்கான சிறுபான்மை மக்களது வாக்குரிமை மறுக்கப்பட்டிருப்பது முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டு அரசின் ஆதரவுடன் பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் இனவெறி குற்றங்களின் தொடர்ச்சியாகவே பார்க்கப் படுகிறது.

நீண்ட காலமாகவே நாட்டின் தென் மேற்கில் அமைந்துள்ள ராகீன் (முன்னாள் அராகான்) பிரதேசத்தில் வசித்து வரும் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மார் அரசாங்கம் இனவெறி மிக்க கொள்கைகளை அமுல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு மனிதநேய உதவிகள் கூட செய்ய மறுத்து வருகிறது. பல நூறு ஆண்டுகளாக அம்மக்கள் மியன்மாரில் வசித்து வருகின்ற போதிலும் அவர்களுக்கு இன்னும் குடியுரிமை கூட வழங்கப்படவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் மற்றும் இராணுவத்தின் உடந்தையுடன் ரோஹிங்கிய முஸ்லிம்கள் காட்டுமிராண்டித் தனமாக துன்புறுத்தப்பட்டு வந்தனர்; கொலை வெறித் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தனர். உயிருடன் தீ மூட்டி எரிக்கப் பட்டனர். பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் கல்விக் கூடங்கள் தீ மூட்டப்பட்டன. பல பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப் பட்டனர். ஆயிரக்கணக்கானோர் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு உயிர்களை மாய்த்துக் கொண்டனர். ஆயிரக்கணக்கானவர்களின் இறப்புக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களின் இடம்பெயர்வுக்கும் வழிவகுத்த பிரஸ்தாப சம்பவம் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இனப் படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

சர்வதேச சமூகமோ, தற்போது 70 வீத வாக்குகளைப் பெற்று பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள எதிர்க்கட்சியோ, சமாதானத்துக்கான நோபல் பரிசுப் பெற்ற அதன் தலைவியோ அப்போது ரோஹிங்கிய முஸ்லிம்களின் கதறல்களைக் கண்டு கொள்ளவில்லை. இதுவரைக்கும் இனவாதத்தின் கோரப் பிடியில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முழு உலகமும் தவறிவிட்டது.

இந்நிலையிலேயே மியன்மாரின் தற்போதைய பொதுத் தேர்தலும் ஆயிரக்கணக்கான சிறுபான்மை முஸ்லிம் மக்களது வாக்குரிமை மறுக்கப்பட்ட நிலையில் நடைபெற்றுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மீறிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்துள்ள ரோஹிங்கிய மக்கள் ஒன்றியம், இது ரோஹிங்கிய அரசின் ஆதரவுடன் பேரினவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் இன வெறிக் குற்றங்களின் தொடர்ச்சியாகும் என சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் ரோஹிங்கிய முஸ்லிம்களின் குடியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகளை முழுமையாக வழங்குமாறு மியன்மார் அரசை வேண்டியுள்ள அதே வேளை, ஒடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கு ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இன வெறியின் அனைத்து வடிவங்களையும் முடிவுக்கு கொண்டு வர மியன்மார் அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக...

(முன் பக்கத் தொடர்)

அண்மையில் யாழ். பல்கலைக்கழக கல்விப் பீடத்தினால் நடத்தப்பட்ட கல்வி முதுமாணிக்கான நுழைவுப் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையும் கல்விப் பீடத்தின் நேர்மையின்மையையும் பாரபட்சத்தையும் தெளிவாகப் பறைசாற்றுவதாக உள்ளன என பரீட்சைக்கும் நேர்முகத் தேர்வுக்கும் தோற்றியோர் தெரிவிக்கின்றனர்.

பரீட்சை மண்டபத்திலேயே சந்தேகம் தரும் நடவடிக்கைகள் துவங்கிவிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு பரீட்சை மண்டபத்திலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிலிருந்து தொடராக முஸ்லிம் மாணவர்களுக்கு இருக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிப்போரின் பரீட்சைச் சுட்டெண் எவ்வாறு ஓர் எண்ணிலிருந்து தொடராக அமைய முடியும்? இது திட்டமிட்டு முஸ்லிம் மாணவர்களை அடையாளம் காண்பதற்குரிய ஏற்பாடு என குற்றம் சாட்டப்படுகிறது.

திறந்த பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் முதலான வெளிவாரிக் கற்கைநெறிகளை நடத்தும் அனைத்துக் கல்வி நிறுவனங்களும் நுழைவுப் பரீட்சையில் பெறும் புள்ளிகளை அடிப்படையாக வைத்தே கற்கைநெறிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்கின்றன. ஆனால், யாழ். பல்கலைக்கழகத்தினால் நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்படுகிறது. நேர்முகத்தின்போது அழைப்புக் கடிதத்தில் வினவப்பட்டிருந்த எவ்வித ஆவணமும் பரீட்சிக்கப்படுவதில்லை. மட்டுமன்றி, நேர்முகக்குழு நடந்து கொள்ளும் விதமும் இது வெறும் பொய்முகத் தேர்வு என்று எண்ணப்பாட்டை தோற்றுவிப்பதாவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

2014/2015 ஆண்டு யாழ். பல்கலைக்கழக முதுமாணிக் கற்கை நெறிக்காகதெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுள் இருவர் மாத்திரமே முஸ்லிம்கள். ஏனைய 98 மாணவர்களும் தமிழ் மாணவர்கள். 2015/2016 ஆண்டு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் முதுமாணிக் கற்கைக்காகத் தெரிவு செய்யப்பட்ட 101 மாணவர்களில் நால்வர் மாத்திரமே முஸ்லிம்கள். மிகுதி 97 பேரும் தமிழ் மாணவர்கள். சந்தேகத்தை ஏற்படுத்தாதிருப்பதற்காக வழங்கப்பட்ட கண்துடைப்பு வாய்ப்புக்களே இவை என பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வாதிடுகின்றனர்.

மேற்குறித்த நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகம் பற்றிய ஒரு பிழையான எண்ணக்கருவை தோற்றுவித்துள்ளன. யாழ் நூலகத்தை எரித்து தமிழ் சமூகத்தின் கல்வியைச் சீரழிக்க நாடியவர்களுக்கும் யாழ். கல்விப் பீடத்தின் இத்தகைய செயற்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன: ஒரு சமூகம் தான் பெற்றுக் கொண்ட அதே வலியினை அடுத்த சமூகத்தின் மீது திணிப்பது எவ்வகையில் நியாயம் என்ற கேள்வி எழுவதாக பாதிக்கப்பட்டடோர் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, யாழ். பல்கலைக்கழகம் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், விடப்பட்ட தவறுகள் தொடர்பில் யாழ். பல்கலைக் கழக மூதவை உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றுத் தாம் எதிர்பார்ப்பதாகவும் யாழ். பல்கலைக்கத்தின் கௌரவத்தையும் கல்வித் தர்மத்தை நேர்மையாக வழங்குகின்ற நிறுவனம் என்ற அடையாளத்தையும் மீளப் பெற வேண்டும் என்றும் தாம் எதிர்பார்ப்பதாகவும் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

## கூர்மையடையும்...

(07 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத் தேர்தலின் பின் அத்தொகை மேலும் அதிகரித்துள்ளது. வரும் உள்ளூராட்சித் தேர்தல் இதன் அதிமுக்கிய இறுதிக் கட்டமாக அமையும். இந்த நிலையில்தான் ஜனாதிபதியும் பிரதமரும் இரு வேறு கட்சிகளின் கொள்கையையும் பேசும்போது முரண்பாடுகள் தோன்றும் வாய்ப்புகள் அதிகமுண்டு. தலைவர்களுக்கு மத்தியில் சுமுக நிலை இருந்தாலும் அடிமட்டங்களில் மோதல்கள் வெடிக்கும் ஆபத்து நிறையவே உள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் பொதுவாக ஆட்சியில் உள்ள கட்சிக்கே செல்வது வழக்கம். ஆனால் இம்முறை இரண்டு கட்சிகளுமே ஆளும் கட்சிகள் என்பதனால் எக்கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மஹிந்தவாதிகள் தனியொரு குழுவாக தேர்தலில் இறங்கினாலும் சுதந்திரக் கட்சியின் சட்டப்படி அதில் சேர முடியாது. சேர்ந்தால் கட்சியின் அங்கத்துவம் கேள்விக்குறியாகும். அத்துடன் ஊழல் மோசடிகளின் பட்டியலில் பெயருள்ள பலரையும் விசாரணைப் பொறிமுறைக்குள் கொண்டுவர மைத்திரிக்குக் கிடைக்கும் அனுமதிப் பத்திரமாகவும் அது இருக்கும். அந்தப் பயத்தில் சுதந்திரக் கட்சியின் மஹிந்த ஆதரவாளர்கள் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் சேராதுவிடின் அப்படியொரு கூட்டத்தையே சாத்தியமற்றதாக்கிவிடும். விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, உதய கம்மன்பில போன்றோருக்கு சுதந்திரக் கட்சியுடன் இணைந்தேயன்றி தனித்துக் கேட்கும் துணிச்சல் கிடையாது. அத்தகைய அரசியல் தற்கொலையில் அவர்கள் ஈடுபட மாட்டார்கள் என்று நம்பலாம். அத்தகைய பலவீனமான கூட்டணிக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்றும் கூற முடியாது.


மஹிந்தவாதிகள் பொதுத் தேர்தலில் ஆடிய ஆட்டத்தை உள்ளூராட்சித் தேர்தலில் அரங்கேற்ற ஜனாதிபதி மைத்திரி அனுமதிக்கப் போவதில்லை. என்பது அவர் அவன்கார்ட் விடயத்தில் காட்டிய தீரத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# "மருமகன் இருக்கிறார்; மெதுவாகச் சிரியுங்கள்"



றாஸி மொஹம்மத் ஜாபிர்

அன்புள்ள மருமகனுக்கு உங்கள் மாமனார் எழுதிக் கொள்வது...

எனது மகளை நீங்கள் மனைவியாக ஏற்று ஐந்து மணி நேரங்கள் கடந்துவிட்டன.இத்தனை காலமும் எனது நெஞ்சிலும் தோளிலும் சுமந்த எனது மகளை உங்களின் பொறுப்பில் இனி விட்டுவிட்டேன். ஒரு தந்தை என்ற ரீதியில் எனது கடமையை நான் சரியாகச் செய்து முடித்திருக்கிறேன் என நம்புகிறேன். ஒரு கணவனாக உங்கள் கடமையைச் செய்வீர்கள் என மனமார எதிர்பார்க்கிறேன்.

இப்பொழுது நேரம் இரவு பத்து மணி. அதிகாலையிலேயே நானும் உங்கள் மாமியாரும் இந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவோம். ஏனெனில், இனி இது எங்கள் வீடல்ல; உங்கள் வீடு. பரம்பரையாக வாழ்ந்த வீட்டை பாதியில் விட்டுப்போக நேர்ந்ததில் பெட்டி படுக்கைகளைக் கட்டும் கயிறெல்லாம் உங்கள் மாமியாரின் கண்ணீராலேயே கழுவப்படுகின்றன.

நானும் உங்கள் மாமியாரும் இன்னும் எட்டு மணி நேரங்கள்தான் இந்த வீட்டில் இருப்போம். உள்ளம் அமைதியில்லாமல் உலாவிக் கொண்டிருக்கிறது. இனம் தெரியாத ஏதோ ஒன்று இதயத்தைப் பிசைந்து எடுக்கிறது. என்ன செய்வதென்று தெரியாமல் நான் எழுத ஆரம்பிக்கின்றேன்.

வேகா வெய்யிலில் வியர்வை சிந்தி நான் கட்டிய இந்த இரண்டு அடுக்கு மாடியின் பிரமாண்டமான படுக்கையறையின் பஞ்சு மெத்தையில் நீங்கள் உல்லாசமாய் உறங்கிக் கொண்டிருக்க, அதே வீட்டில் யாருமில்லாத ஒரு மூலையில் பழைய பாயில் கிழிந்த தலையணையில் என்னைத் தூங்க வைத்திருக்கும் இந்த சமூக நீதியைப் பார்த்து நான் சிரித்துக் கொள்கிறேன்.

வீட்டின் சொந்தக்காரனே விருந்தாளியாய்ப் போன நிலையை எண்ணி வெட்கப்படுகிறேன். தான் கட்டிய சொர்க்கத்தில் தானே வாழ முடியாத திருசங்குவை விட என்னைக் கேவலமாக்கி விட்ட இந்த சமூகத்தை எண்ணி நான் சிரித்துக் கொள்கிறேன்.

அன்பின் மருமகனே,

இந்த வீட்டின் ஒவ்வொரு கல்லுக்குப் பின்னாலும் ஒரு கதையும் ஒரு வேதனையும் ஒரு வியர்வையும் இருப்பது உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு வெய்யில் படாது செய்த இந்த கூரைக்குப் பின்னால் நான் வெய்யிலில் நின்று வெட்டிய வேளாண்மை இருக்கிறது.

நீங்கள் காலாற நடக்கும் இந்த டைல்ஸ் தரைக்குப் பின்னால் எனது மனைவிக்கு நான் செய்த நகைகள் இருக்கின்றன. நீங்கள் தூங்கி விழும் அந்தத் தேக்குமரக் கட்டிலுக்குப் பின்னால் நான் எனது மகனுக்கென்று மிச்சம் வைத்த வளவொன்று விற்ற கதை இருக்கிறது.

நீங்கள் சுகமாகக் கழிக்கும் கழிப்பறைக்குப் பின்னால் கையிலிருந்த சேமிப்பெல்லாம் கரைந்து கிடக்கின்றன.
நீங்கள் உண்டு பருக குளிர்சாதனப் பெட்டி, கண்டு களிக்க கலர் டீவி, கழுவித் துடைக்க வொஷிங் மெஷின்... இவற்றிற்குப் பின்னால் இந்த ஏழையின் கடன் இருக்கிறது.

மனிதாபிமானம் என்பது மருந்துக்கும் இல்லாத சமூகமா இது மருமகனே?

முதுமையின் பலவீனமும் தனிமையின் மறதியும் என்னை முடியாதவனாய் ஆக்குகின்றன. மூலையில் இருந்து முழங்கால் வலியால் முனகிக் கொண்டிருக்கும் உங்கள் மாமியாரோடும் இருந்தால் எழும்ப முடியாத இடுப்பு வலியோடும் எனது காலங்கள் மெதுவாய்க் கழிகின்றன.

எனக்கு அதிகமான நாட்கள் எதிரில் இல்லை என்பதை எனது உடம்பு எனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. நாளை ஒரு வருத்தம் வாதம் வந்தாலும் கடன் பட்டுக் காலம் கழிக்கும் நிலைக்கு வந்திருக்கிறேன்.

நான் செய்த தவறு என்ன என்று சிந்தித்துப் பார்க்கிறேன்.
ஒரு பெண்ணைப் பெற்றதா? எனது மகள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று கனவு கண்டதா? படித்தவர் கையில் பாதுகாப்பாகக் கொடுக்க வேண்டும் என நினைத்ததா?
சந்தோஷமாய் வாழ்வதற்கு அடுக்கு மாடி எதற்கு மருமகனே? ஓர் ஓலைக் குடிசை போதுமே!

நாளை மாமாவுக்கு ஏதாவது கடன் இருக்கிறதா என்று அன்புருகக் கேட்பீர்கள். மச்சான் எத்தனை கருணையுள்ளவர் என்று எனது மகளும் உங்களில் மயங்கி விடுவாள்.

அறைந்துவிட்டு வலிக்கிறதா, தடவிவிடவா? எனக் கேட்பது போல்தான் இது இருக்கிறது. இதற்கு நீங்கள் அறையாமலே இருந்திருக்கலாமே. இந்த வேதனையில் நான் விழுவேன் என்று தெரிந்த பின்னும் நீங்கள் என்னைத் தள்ளிவிட்டு விட்டு கைகொடுத்து காப்பாற்ற நினைப்பது எத்தனை கபடத்தனம்.

இத்தனை அதிருப்தி இருந்தும் ஏன் உங்களைத் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா? அந்த ஏலத்தில் இலகுவாகக் கிடைத்தது நீங்கள் மாத்திரம்தான்.

அப்துஸ் ஸமதின் மகன் ஐந்து மாடி வீடும் ஆறு கோடிப் பணமும் கேட்டார். கூரைக்கும் டைல்ஸ் போடச் சொன்னார் குத்தூஸின் மகன். கௌரவமான குடும்பமாம் கார் ஒன்று வேண்டும் என்றார் காதரின் பேரன்.

வெளிநாட்டு டிகிரியாம் வேனொன்று இருந்தால் நல்லம் என்றார் நபீலின் தம்பி.கத்தாரில் எஞ்சினியராம் கைநிறைய சம்பளமாம் காணி நாலு ஏக்கர் தந்தா குறைஞ்சா போகும் என்றார் சொழுக்கரின் சின்ன மகன்.

கொம்பியூட்டர் ஸ்பெசலிஸ்டாம், கொழுத்த சம்பளமாம் கொழும்பில் ஒரு வீடு தாருங்கள் என்றார் தம்பி லெப்பையின் மூத்த மகன்.

மார்க்கமான பொடியனாம் வீடு மட்டும் போதுமாம் என்று நீங்கள் வந்தீர்கள். லாபமாக வருகிறது உடனடியாக வாங்கிப் போட்டுவிடுங்கள் என்றார் உங்கள் மாமியார்.

உங்கள் வீட்டாரிடம் விலை பேசினேன். உங்களை வாங்கிவிட்டேன்.

என்றாலும் மருமகனே இதைப் போன்ற வியாபாரத்தில் எனக்கு இஷ்டம் இல்லை. வந்த இடத்தில் வாழ்ந்தவனை விரட்டி ஓரத்தில் வைத்து ஒய்யாரமாக உறங்கும் உங்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் வேறுபாடு தெரியவில்லை.

அடிமை உள்வீட்டுக்குள்; எஜமான் அரச மரத்தடியில். இந்த சகவாசம் எனக்குச் சரிவராது.

உங்களை யார் விரட்டியது; நீங்களாகப் போக விரும்பிவிட்டு என்னை ஏன் குறை கூறுகிறீர்கள் என்று கேட்காதீர்கள்.

எனது நியாயம் என்னோடு.

வெளியில் இருந்து வியர்வையோடு வருவேன். எனது சாய்மணையில் நீங்கள் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருப்பீர்கள். என்னைக் கண்டதும் அரைவாசி எழும்பி இருக்கப் போகிறீர்களா என்று கேட்பீர்கள்.

நான், இல்லை நீங்கள் இருங்கள் என்று சொல்லப் போவது உங்களுக்குத் தெரியும். அந்த நிலை எனக்கு வேண்டாம்.

உங்களைத் தேடி யாரும் வரும்போது உள்ளே இருக்கும் என்னைத் தேடி வந்தவர்களை எழுப்பிக் கொண்டு நான் வாங்கிய குஷன் செட்டை உங்கள் நண்பருக்குக் கொடுத்துவிட்டு வெளி விறாந்தையில் ரப்பர் கதிரை போட்டு பேசிக் கொள்ளும் கேவலம் எனக்கு வேண்டாம்.

சொந்த வீட்டில் சற்று சப்தமாகச் சிரித்தாலும் மருமகன் இருக்கிறார்; மெதுவாகச் சிரியுங்கள் என்ற உங்கள் மாமியாரின் அதட்டலின் அசிங்கம் எனக்கு வேண்டாம்.

நான் வாங்கிய டீவியில் செய்தி பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் மெச் பார்க்க வேண்டுமாம் என்று எனது மகளை தூது அனுப்புவீர்கள். எழும்பிச் செல்லும் ஏமாற்றம் எனக்கு வேண்டாம்.

வீட்டுவாசலில் உங்கள் சைக்கிள் சத்தத்தைக் கேட்டு எனது சாரனைச் சரி செய்யும் சுதந்திரம் இல்லாத
கோழைத்தனம் எனக்கு வேண்டாம்.

25 வயது உங்களோடு தோற்றுப் போவதற்கு 55 வயது அதர்மம் இடம் தரவில்லை.

ஒரு மகளைப் பெற்ற பாவத்திற்காக இந்த வீட்டில் நான் அடிமையாய் இருப்பதை விட ஒரு வாடகை குடிசையில் ராஜாவாய் இருந்து விட்டுப் போகிறேன்.

வாழ்க்கையில் சொந்தக் காலில் வாழப் பழகிக் கொள்ளுங்கள். சொந்தக்காரர்களிடமே சுரண்டி வாழாதீர்கள். ஒற்றைப் பெண்ணைப் பெற்ற ஓரளவு வசதியுள்ள நானே ஓட்டாண்டியாகி விட்டேன் என்றால், நாலு பெண்ணைப் பெற்ற ஏழையின் நிலையை என்னவென்று சொல்வது?

ஒரு தந்தையின் பாசத்தை துரும்பாகப் பயன்படுத்தி எங்களைத் துவைத்து துருவி எடுக்கிறீர்கள். பெண்ணைப் பெறுவது பரகத் (அருட்கொடை) என்பதைப் பொய்யாக்கிய பாவம் உங்களோடுதான்.

கடையில் இருந்ததையெல்லாம் உங்களுக்கு இறைத்துவிட்டு கடனாளியாய் கைவிரித்தபடி செல்கிறேன். இது ஆயுள் கடனல்ல; பரம்பரைக் கடன். எப்போது கழிக்கப் போகிறேனோ தெரியாது.

ஆனால், பயப்படாதீர்கள் மருமகனே, இதை யாரிடமும் சொல்லமாட்டேன். எனது உள்ளத்தில் உறுமும் எதையும் உங்களுக்கு காட்டமாட்டேன்.

உங்களைப் பார்க்கும் போதெல்லாம் பரவசமாவதுபோல் பல்லிளித்துக் கொள்வேன். சொந்தக்காலில் நிற்கத் தெரியாத சோம்பேறி என்று மனதுக்குள் சொல்லிக் கொள்வேன்.

உங்கள் வீட்டார் வந்தால் விழுந்து விழுந்து கவனிப்பேன். என்னை வங்குரோத்தாக்கியவர்கள் வெட்கமில்லாமல் வருகிறார்கள் என்று உள்ளே நினைத்துக் கொள்வேன்.

எனது மருமகன் போல் உலகில் யாருமில்லை என்று எல்லோரிடமும் சொல்லிக் கொள்வேன். ஒரு பெண்ணை வைத்து வாழ வழியில்லாதவன் என்று வாய்க்குள் முனகிக் கொள்வேன்.

வேளாண்மை நெல் அனுப்பி வைத்தால் என்ன கவனிப்பு எனது மருமகன் என்று வண்டிக்காரனிடம் சொல்லிவிடுவேன். எனது விளைச்சலில் எனக்கே நெல் அனுப்புகிறான் என்று எனக்குள் நானே எண்ணிக் கொள்வேன்.

எனது மகளோடு மருமகனுக்குத்தான் எத்தனை இரக்கம் என்று அயல் வீட்டுக்காரர்களிடம் கூறி வைப்பேன். வீடு கொடுக்காவிட்டால் வந்திருப்பானா என்று எனக்குள் நானே கேட்டுக் கொள்வேன்.

நான் உங்களோடே இருப்பேன்... உங்களோடே சிரிப்பேன்... கடைசிவரைக்கும் எனது வெறுப்பை நீங்கள் கண்டு கொள்ளவே மாட்டீர்கள்.
இவ்வாறுதானே ஒவ்வொரு மாமனாரும் உலகத்தில் வாழ்கிறார்கள்!

இக்கடிதத்தை உங்களிடம் நான் காட்டவும் மாட்டேன். கிழித்துப் போட்டும் விடுவேன்.

வாசித்த கையோடு எனது மகளை விட்டுவிட்டு ஓடிவிடுவீர்களே. எனது மகள்தானே எனது பலவீனமும் உங்கள் பலமும்.

சரி மருமகனே, நேரமாகிவிட்டது. செல்ல வேண்டும். நான் கட்டிய வீட்டை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நாளை முதல் அழுத உள்ளத்தோடும் சிரித்த முகத்தோடும் அடிக்கடி நாம் சந்தித்துக் கொள்வோம்.

வாழ்க்கையே ஒரு தற்காலிக நாடகம்தானே.

இப்படிக்கு,

உங்கள் மாமனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துருவத் தீவிரங்களை...

(13 ஆம் பக்கத் தொடர்)

இவர்களின் வாக்குவங்கியும் 13 வீதத்திலிருந்து 10 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த தேர்தலில் 80 ஆசனங்கள் பெற்றவர்கள் இம்முறை 59 ஆசனங்களை நோக்கி கீழிறங்கியுள்ளனர். இவர்களும் துருக்கிய வாக்காளர்களால் தண்டிக்கப்பட்ட தரப்பாகவே கூறப்பட வேண்டும். ஏனெனில், கடந்த ஜூன் மாத தேர்தலின்போது குர்திஷ் மக்களின் விடிவுக்காக நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி எந்தவித ஆரோக்கியமான முன்னெடுப்பையும் மேற்கொள்ளவில்லை என்றும், சிரிய விவகாரத்தில் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் குர்திஷ் எதிர்ப்பு இரட்டை வேடம் வெளிப்பட்டதெனவும் பிரசாரங்களை முடுக்கி விட்டனர். மட்டுமன்றி, தேசியவாத மற்றும் மதச்சார்பற்ற கட்சிகளுடன் கூட்டிணைந்து கொண்டு நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை தாக்கத் துவங்கினர். என்றாலும், தேர்தல்களின் பின்னரான ஆறு மாத காலப் பகுதிக்குள் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை ஒரு புறம் வைத்து விட்டு, புதிய பாராளுமன்றத்தை ஸ்திரத்தன்மையற்றதாக்கும் முயற்சியில் இறங்கினர். அரசாங்கத்திற்கு எதிராக இன்னுமின்னும் குர்திஷ்களை தூண்டிவிட்டனர். இந்நிலை நேரடியாகவே குர்திஷ் தேசியவாதக் கட்சியைப் பாதித்தது. அவர்களின் அழகிய சுலோகங்களால் கவரப்பட்டு, சென்ற முறை வாக்களித்த துருக்கிய பொதுச் சமூகம் தனது ஆதரவை விலக்கிக் கொண்டது. மறுபுறம், நாட்டின் தென்கிழக்கு எல்லையில் வாழும் குர்துகளும் தமது ஒப்பீட்டளவில் வாக்குகளை ஏனைய கட்சிகளை விட தமது கல்வி, கலாசார மற்றும் மொழிச் சுதந்திரங்களை பெற்றுத் தந்த நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை நோக்கி திருப்பிவிட்டனர்.

இவ்வாறு, நடந்து முடிந்த தேர்தல்களினுடைய வாக்காளர் நடத்தையை ஆழமாக ஆராயும்போது 'வாக்காளர்களின் தேர்தல்' என அதனை அடையாளப்படுத்தலாம். ஏனெனில், இத்தேர்தல்களில் வாக்காளர்கள் அல்லது சிவில் சமூகத்தின் குரல் பலமாக ஒலித்திருக்கிறது. துருக்கியின் அரசியல் எவ்வாறு நகர வேண்டும் அல்லது எவ்வாறு நகரக்கூடாது என்ற பாடத்தை அனைத்துக் கட்சிகளுக்கும் அவர்கள் கற்பித்துள்ளனர். இந்த வகையில், கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற தேர்தலில் தீவிர மதச்சார்பற்றவாதம், தீவிரத் தேசியவாதம் மற்றும் தீவிர குர்துத் தேசியவாதம் என்ற மூன்று தீவிரங்களும் இணைந்து துருக்கிய வாக்காளர்களது பலத்தை பங்குபோட்டுக் கொண்டன. இம்முறை இம்மூன்று தீவிரங்களையும் நிராகரித்து, மூன்று தரப்பினரையும் இணைக்கும் நடுநிலையான நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் வேலைத்திட்டத்திற்கு மக்கள் வாக்களித்துள்ளனர்.

## யார் அந்த ரோஹிங்யாக்கள்?...

(05 ஆம் பக்கத் தொடர்)

2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த வெள்ளைக் கடவுச் சீட்டுக்களையும் வாக்குரிமை போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு பயன்படுத்த முடியாது என்று வரையறுக்கப்பட்டிருந்தது. பல நூற்றாண்டு காலமாக பர்மியராக வாழ்ந்த இவர்களால் அதனை நிரூபிப்பதற்கோ, உரிமை கோருவதற்கோ ஆவண ரீதியான எந்த ஆதாரமும் கிடையாது.

2011 ஆம் ஆண்டில் தேங் சேன் பதவியேற்ற போது ரோஹிங்யர்களுக்கான சீர்திருத்த சட்டங்கள் ஏற்படுத்தப்படும் என்று பிரகடனம் செய்திருந்தபோதும் தொடராக நடந்து வந்த அவரது செயற்பாடுகள் ரோஹிங்யர்களுக்கு எதிரானவையாகக் காணப்பட்டனவே அன்றி, சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை.

2012 ஆம் ஆண்டு கலவரங்களின்போது இவர்களை வேறு நாடுகளில் குடியமர்த்துமாறு ஐ.நா. விடம் வேண்டுகோள் விடுத்த போது, "ரோஹிங்யாக்கள் எம்மினத்து தேசிய குடிமக்கள் கிடையாது. நாம் எம்மினத்தின் பால் மட்டுமே கரிசனை செலுத்த முடியும். பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமான முறையில் குடியேறியவர்களை ஒருகாலும் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று ஆக்ரோஷமான கருத்துக்களை முன்வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### ரோஹிங்யர்களின் தற்போதைய நிலை

அண்மைக் காலத்தில் அதிகமான ரோஹிங்யர்கள் படகுகள் மூலம் வெளிநாடுகளில் தஞ்சம் புகத் தொடங்கியுள்ளனர். 2012 ஆம் ஆண்டு தொட்டு மேற்கொள்ளப்பட்ட யூ.என்.எச்.சி.ஆர். இன் கணக்கெடுப்பின்படி 110,000 ரோஹிங்யர்கள் படகுகளின் மூலம் புலம் பெயர்ந்து வாழ்வதாக கணிக்கப்பட்டுள்ளது.

2015 முதல் மூன்று மாதங்களுக்குள் இவர்களது தொகை 25,000 தைக் கிட்டியதாக இரட்டிப்பாகியுள்ளது.

தென்கிழக்காசியாவின் வன்முறைச் சூழல், சுரண்டல்கள், வருவாய்கள்போன்ற பல விடயங்கள் இவர்களது புலம்பெயர்வில் தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### வன்முறைத் தூண்டல்

இனத்துவேஷ நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டத்தை இராணுவத்துக்குள்ளிருந்தே வெளிக் கொணர்ந்திருக்கிறது பர்மிய அரசு. அதன் முதற்கட்டமாக மியன்மாரின் தலை நகரான நே பி டோவ்வில் அமைந்திருக்கக் கூடிய இராணுவப் பயிற்சி நிலையங்களில் புத்த மதத்தையும் தம் இனத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக முஸ்லிம்கள் கருவறுத்து வருவதாக கூறும் பொய்யான பல இட்டுக்கட்டல்களுடன் கூடிய முன்வைப்புகள் நடைபெற்றன. அதில் வேகமாக அதிகரித்து வரும் ரோஹிங்யர்கள் பௌத்தர்களுடைய சனத்தொகையை விடவும் எதிர்காலத்தில் அதிகரித்து விடப் போவதாகவும் திருட்டுத்தனமான முறையில் மக்களுக்குள் ஊடுருவி மார்க்கத்தை பரப்புவதாகவும் ரோஹிங்யா என்ற பதப் பிரயோகத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்தி பேசக் கூடிய வகையிலும் அது அமைக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக, அதன் பக்கங்களில்,

"ஓர் இனம் பூமியில் புதையுண்டு போவதில்லை. மாறாக, ஏனைய மக்களால்தான் விழுங்கப்பட்டு விடுகிறார்கள்"

"பௌத்த மதம் அழிந்து கொண்டிருக்கும் சூழலில் நாம் எம்மினத்தை இயன்ற வரையில் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம்"

என்பன போன்ற கோஷங்கள் பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இது விடயத்தில் முன்னாள் இராணுவ உள்துறை மற்றும் அரச பணிப்பாளர் தாய்சென் அல்ஜஸீரா செய்தி தளத்திற்கு கருத்துத் தெரிவிக்கையில், குறித்த பேரில் இயங்கி வந்த அந்த இராணுவப் பயிற்சி நிலையம் உளவியல் ரீதியான போர் பயிற்றுவிப்பு நிலையமாகவே செயற்பட்டது என்று தெரிவித்திருந்தார்.

மேலும், ரோஹிங்யர்கள் பௌத்தர்களைக் கொலை செய்வதாகவும் இளம் பெண்களை வல்லுறவுக்குட்படுத்துவதாகவும் இடங்களை ஆக்கிமிப்பதாகவும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. அதுபோல MRTV-4, Myawady போன்ற அலைவரிசைகளில் இவ்வாறான அறிக்கைகளை இரு பிக்குகள் ஏசிப் பேசி பரப்பும் காட்சிகள் பதிவாக்கப்பட்டிருந்தன.

மேலும், 2014 ஆம் ஆண்டு Myawady என்ற இராணுவத்திற்கு சொந்தமான ஓர் அலைவரிசை ஒரு முஸ்லிமை திருமணம் செய்து வாழ்வை இழந்துவிட்டு நிற்கும் பௌத்த பெண், பிக்கு ஒருவரிடம் முறையிடுவதாக சித்திரிக்கப்பட்ட காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தது.

இவ்வாறு, பல வகையிலும் உளவியல் ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் இனத்துவேஷத்தை இராணுவம் வாயிலாகவே மியன்மார் அரசு அரங்கேற்றியது. இது பற்றிய அதிகமான ஆதாரக் கோவைகளை அல்ஜஸீரா நிறுவனம் ஒன்று திரட்டி ஜனாதிபதி தலைமையகத்தில் ஒப்படைத்திருந்த போதும் அதற்கு எவ்வித கரிசனையையும் மியன்மார் அரசு காட்டவில்லை என்று அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிட்டுள்ளது.

## கூட்டு ஒப்பந்தம், மீரியபெத்த...

(09 ஆம் பக்கத் தொடர்)

என்னிடம் வந்தால் மளமளவென்று வீடுகளை அமைத்துக் கொடுத்து விடுவேன். ஏனெனில் அதற்கான ஆதார வளங்கள் எம்மிடமுள்ளன."

இதற்கிடையே அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜனவரியில் அனைத்து வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டு விடும் என்று தெரிவித்துள்ளார். பிரதமர், ஜனாதிபதி இருவருமே இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இதனால் பெப்ரவரி ஆரம்பத்தில் 56 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு விடும் என்று திகாம்பரம் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது இப்படி இருக்க, டிரஸ்ட் தன் பங்குக்கு மலையகத்தில் பல பகுதிகளில் வீடுகளை அமைத்துக் கொடுத்து வருகிறது. 306 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது இப்படி இருக்க,

ஊவா மாகாண அமைச்சராக அண்மையில் பதவியேற்ற செந்தில் தொண்டமான் தான் வீடுகளை அமைக்கப் போவதாகவும் பொங்கல் முடிய மீரியபெத்தவில் வீடுகள் அமைக்கப்பட்டு விடும் என்றும் கூறித் திரிகிறார்.

மீரியபெத்த வீடமைப்புத் திட்டம் என்பது மத்திய அரசின் கீழ் வருவது. அதற்கும் மாகாண சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அப்பாவிகளான பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றி பெயர் போட்டுக் கொள்ள செந்தில் முயல்வதாகத் தெரிகிறது.

## புல்மோட்டைக்கு தனியான...

(முன் பக்கத் தொடர்)

அச்சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவர்கள் தமது தேவையை வெளிப்படுத்தினர்.

புல்மோட்டையில் விகாரைக் காணிகள் என்ற பெயரிலும் இராணுவ முகாம் அமைக்கவென்றும் அவ்வாறே, தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், வனவள இலாகாவுக்குச் சொந்தமான காணிகள் என்றும் சுமார் 5000 ஏக்கருக்குக் குறையாத காணிகள் குறிவைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கெல்லாம் பிரதான காரணமாக இருப்பது முறையான காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படாமையே. புல்மோட்டையில் 77 வீதத்திற்கும் மேற்பட்ட காணிகளுக்கு இன்னும் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. பரம்பரை பரம்பரையாக காணி உத்தரவுப் பத்திரம் கோரி விண்ணப்பித்திருந்தும் அல்லது குச்சவெளி பிரதேச செயலகம் குறித்த விண்ணப்பங்களைக் கோரி அவற்றைப் பெற்றிருந்தும் இதுவரை அவற்றுக்கான எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அது மேற்கொள்ளவில்லை.

புல்மோட்டை நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பல்லின சமூகங்கள் வாழும் ஒரு பிரதேசம். 2014 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இங்கு 24,288 முஸ்லிம்களும் 11,552 தமிழர்களும் 711 சிங்களவர்களும் வசிக்கின்றனர். முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட குச்சவெளி பிரதேச செயலகத்தின் வரலாற்றில் 23 பிரதேச செயலாளர்கள் கடமையாற்றியுள்ளனர். இவர்களில் 1985 காலப் பிரிவில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய எம்.எஸ். இப்றாஹீம் (நளீமி) என்பவர், தான் கடமையாற்றிய மிகக் குறுகிய கால இடைவெளியில் எவ்விதப் பாரபட்சமும் இன்றி சேவையாற்றினார். இவரைத் தவிர்ந்த ஏனையோர் எங்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவில்லை என இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு பாரபட்சமான நிருவாக முறையே காணப்படுகின்றது. சிறுபான்மையாக வாழ்கின்ற ஏனைய சமூகத்தவர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளாவது பெரும்பான்மையாக வாழ்கின்ற எமக்கு வழங்கப்படுவதில்லை என இம்மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

கிராம உத்தியோகத்தர் பிரிப்பிலும் இங்கு பாரபட்சமே காட்டப்பட்டுள்ளது. குச்சவெளி செயலகப் பிரிவிலுள்ள கள்ளம்பத்தை, வீரச்சோலை, தென்னை மரவடி ஆகிய மூன்று தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முறையே 37, 71, 150 குடும்பங்களே வசிக்கின்றன. இவற்றைத் தனியான கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்க முடியுமென்றால், புல்மோட்டை முதலாம் வட்டாரப் பிரிவில் 1133 குடும்பங்களையும் இரண்டாம் வட்டாரப் பிரிவில் 642 குடும்பங்களையும் மூன்றாம் வட்டாரப் பிரிவில் 595 குடும்பங்களையும் நான்காம் வட்டாரப் பிரிவில் 879 குடும்பங்களையும் கொண்டுள்ள முஸ்லிம் பிரிவுகளுக்கு ஏன் கூடுதலான கிராம சேவையாளர் பிரிவுகளை வழங்க முடியாது என இவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். பிரிவுகளுக்கான ஒதுக்கீடுகள் என்று வருகின்றபோதும் 37 குடும்பங்களைக் கொண்டுள்ள கள்ளம்பத்தை பிரிவுக்கு ஒதுக்கப்படுகின்ற அதே தொகைதான் கூடுதலான சனத்தொகை கொண்டுள்ள (1133 குடும்பங்கள்) முதலாம் வட்டாரப் பிரிவுக்கும் ஒதுக்கப்படுகின்றது.

பிரதேச செயலகம் மக்களின் அன்றாட வாழ்வுடன் பிணைந்திருக்கின்ற ஒன்று. இது தினமும் மக்களுக்கு தேவைப்படுகின்ற ஒரு காரியாலயம். இதற்காக புல்மோட்டையிலுள்ள மக்கள் 21 கி.மீ. தூரத்திலுள்ள குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு பயணம் செய்ய வேண்டி உள்ளது.

அனர்த்தங்களின்போதும் புல்மோட்டைக்கும் குச்சவெளிக்கும் உள்ள நிலத் தொடர்பு முற்று முழுதாக வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டு போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு விடும். இதனால் இம்மக்கள் பெரும் இன்னல்களை ஒவ்வொரு வருடமும் அனுபவித்து வருகின்றனர். குச்சவெளி பிரதேசத்திலிருந்து அதிகாரிகள் சமுகமளித்து அனர்த்த நிவாரணங்களை வழங்குவதிலும் இவர்கள் கரிசனை கொள்வதில்லை என்பதும் மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

ஒரு தனியான பிரதேச செயலகத்தைப் பெறத் தகுதியான சனத்தொகையையும் நிலப் பரப்பையும் கொண்டுள்ளமையால் எமது கோரிக்கையில் நியாயமுள்ளது என இப்பிரதேச மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது விடயமாக முஸ்லிம் அரசியல் தலைமைகள், அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஆழ்ந்து கவனத்தில் கொண்டு குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பிரித்து புல்மோட்டைக்கென தனியாக செயற்படும் பிரதேச செயலகம் ஒன்றை அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இம்மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## வெளிநாடுகளில் தொழில்...

(02 ஆம் பக்கத் தொடர்)

அன்று என்னுடன் பணிபுரிந்த தொழில் அமைச்சின் இரண்டாவது செயலாளர் திரு. பத்திரத்ன, மொழிபெயர்ப்பாளர்களான அஷ்ஷெய்க் நளீர், அஷ்ஷெய்க் ஷிப்லி, ஷெய்க் தில்ஷாத், பொதுசன உறவுகள் அதிகாரி சகோதரர் முபாரக் போன்றோர் மிகப் பெரிய அர்ப்பணிப்புடன் என்னுடன் பணியாற்றியமையை மறக்க முடியாது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் சகோதர சகோதரிகளின் நலன்கள் குறித்து இந்த அரசு கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்களது உரிமைகள், சலுகைகள், சட்ட உதவிகள், அவர்களது குடும்பங்களின் சேம நலன்கள் குறித்து தெளிவான சட்டவலுவுள்ள தொழிலார் சாசனம் வரையப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர் அமைப்புக்கள் தமக்குள் ஒரு தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு தமது உரிமைகள், சலுகைகள், சட்ட உதவிகள் மற்றும் ஏனைய நலன்கள் விடயத்தில் அவ்வப்போது அரசின் கவனத்தை வென்றெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எளிமையால் உயர்ந்தவர்

மூலம்– அத்தய் சத்தய் (உண்மையிலும் உண்மை)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகச் சாதாரண வாழ்க்கை நடத்தும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவரின் வாழ்க்கைச் சரிதத்திலிருந்து சில சுவையான அனுபவங்களை எங்கள் தேசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இத்தொடரின் நோக்கமாகும்.

## மைத்திரி நடுவீதியில்...

1991 ஆம் ஆண்டு பொலன்னறுவைப் பிரதேசத்தை மையப்படுத்தி மைத்திரிபால சிறிசேன ஒரு பாரிய அரசியல் பிரசாரக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். அந்த பிரசாரக் கூட்டத்துக்கு வருகை தர இருந்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்க என்பதால் பிரசார மேடை அலங்காரம், ஏனைய வரவேற்பு நிகழ்வுகள் அனைத்தும் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நாளை நடக்கவிருக்கும் பிரசாரக் கூட்டத்தை எதிர்பார்த்திருந்த மைத்திரிக்கு அன்றிரவு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

''மைத்திரி அவர்களே... நாளைய பிரசாரக் கூட்டத்துக்கு நீங்கள் தயார்படுத்தியிருந்த அலங்காரங்கார மேடை பொலிஸாரால் உடைத்து தீ வைக்கப்படுகிறது...''

என்பதுதான் அந்த அழைப்பு.

இந்த செய்தியைக் கேட்டவுடன் மைத்திரி அவ்விடத்துக்குச் செல்ல ஆயத்தமானார். அச்சமயத்தில் அவருடன் துணைக்கு யாரும் இருக்கவில்லை. குறைந்தது அவரது வாகன சாரதி கூட அந்நேரத்தில் இருக்கவில்லை. நேரமோ நடுநிசி! மைத்திரி எதையும் யோசிக்கவில்லை; வாகனத்தை தானே எடுத்துக் கொண்டு பிரசாரக் கூட்டம் நடக்கவிருந்த வைத்தியசாலை சந்திக்கு விரைந்தார்.

அங்கு அவர் கண்ட காட்சி மைத்திரியை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. அங்கிருந்த பொலிஸாரை நோக்கி,

''ஏன் இப்படியான வேலையைச் செய்கிறீர்கள். இந்த மேடை நாளை நடக்கவிருக்கும் கூட்டத்திற்காக செய்யப்பட்டதல்லவா?'' என்று ஆவேசத்துடன் கேட்டார்.

அதற்கு அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர்,

''மைத்திரி அவர்களே... இது மேலிடத்திலிருந்து வந்த கட்டளை. இதை எங்களால் தடுத்து நிறுத்த முடியாது...'' என்றார்.

இதனைக் கேட்டு ஆவேசப்பட்ட மைத்திரி அத்தருணம் செய்த காரியம் அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

அப்படி மைத்திரி என்னதான் செய்தார்?

பொலிஸார் வாகனத்தின் முன்னால் சென்று அதன் முன் டயரில் தனது கழுத்தை வைத்து,


''நீங்கள் இந்த மேடையை உடைத்து விட்டு எனது கழுத்துக்கு மேலால் உங்கள் வாகனத்தைக் கொண்டு செல்லுங்கள்...'' என்றார்.

மைத்திரி போட்ட சப்தத்தினால் அவரது ஆதரவாளர்கள் அங்கு திரண்டுவிட்டனர். இப்போது பொலிஸாருக்கு மைத்திரியை சமாதானப்படுத்துவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை; தமது வாகனத்தைத் திருப்பிக் கொண்டு அவ்விடத்தை விட்டும் நகர்ந்தனர்.

மைத்திரியும் தனது நண்பர் ஒருவருடன் பொலன்னறுவைக்கு திரும்பினார். செல்லும் வழியில் அங்கும் சில இடங்களில் மேடைகள் தீவைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதைக் கண்ட மைத்திரி வாயால் தடுக்க முற்பட்டு முடியாமல் போனதால் நடு வீதியில் அமர்ந்தார். இது வாகனப் போக்குவரத்துக்கு தடையாக அமைந்தது. அதிகாலை வரை மைத்திரி பாதையிலிருந்து எழும்பவில்லை.

இப்படி, பல போராட்டங்களுக்கும் தியாகங்களுக்கும் மத்தியிலேதான் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் பயணம் தொடர்ந்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் பலர் சாதித்துள்ளார்கள். இவர்கள் சாதனைகளைப் பெறுவதற்கு முன்னர் பல சோதனைகளைக் கண்டு கொண்டார்கள் என்பதுதான் உண்மை. சோதனைகள் வரும்போது அவற்றை முறியடித்தவர்கள்தான் இன்று உயர்ந்து நிற்கின்றார்கள். அவ்வாறான பல சோதனைகளை மைத்திரியும் அனுபவித்தார் என்பது உண்மை.



# சிறைச்சாலை நினைவுகள்

வெலம்பொட ராஃபி

21

அறை ஒன்றுக்கு முற்பணம் கொடுத்து பதிவு செய்து கொண்டான் சுமதிபால. அவனுக்காக ஒதுக்கப்பட்ட அறையின் பக்கம் சுமதிபாலவை ஓர் ஊழியர் அழைத்துச் சென்றார். போகும் வழியில் தங்க நிறப் பூட்டு இடப்பட்டிருந்த ஓர் அறை தென்பட்டது.

''இந்த ரூம் நல்லா இருக்கே இதத் தந்துடுங்களோ'' சுமதிபால ஊழியரிடம் கேட்கின்றான்.

''சார் இது நம்ம முதலாளியின்ட ரூம். அந்த ரூம வெளி ஆளுங்களுக்கு குடுக்குறதில்ல...'' என்றார் ஊழியர்.

இதனைக் கேட்டு சுதாகரித்துக் கொண்ட சுமதிபால அந்த அறையின் சமீபத்தில் இருந்த அறையொன்றை தனக்காகப் பெற்றுக் கொண்டான். பகல் உணவை அங்கு உண்டுவிட்டு தனது பயணப்பையை அறையிலேயே வைத்துவிட்டு, காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்து கொண்டு அறையைத் தாழிட்டு சாவியுடன் ஹோட்டலின் முன் பகுதிக்கு வந்தான். அப்போதும் முதலாளி அங்கு வந்திருக்கவில்லை. ஹோட்டலின் முன்னாலிருந்த வாகனத் தரிப்பிடத்தை மெதுவாக நோட்டம் விடுகின்றான்... அங்கும் எந்த வாகனமும் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. முதலாளி வரும் வரை அங்கு காத்திருக்காது, கொச்சிக்கடை சந்திக்கு நடக்கலானான். அந்த வழியாக சிலாபம் செல்லும் ஒரு பஸ் வண்டி வர அதில் ஏறிக் கொண்டான்.

அக் காலப் பகுதியில் கத்தி வியாபாரத்துக்கு 'வைக்கால' எனும் பகுதி பிரசித்தி பெற்றிருந்தது. பாதையின் இரு மருங்கிலும் பல வகைப்பட்ட கத்திகள் விற்பனை செய்யப்படும். வைக்கால தெருவில் நடந்து சென்ற சுமதிபால கத்தி விற்கும் ஒரு கடைக்குச் சென்றான். தனது வேலையைக் கச்சிதமாகச் செய்து முடிக்க எந்தக் கத்தி உதவும் என யோசிக்கலானான்... மன்னா எனும் கத்தி, இறைச்சி கொத்தும் கத்தி, காடுகள் வெட்டும் கத்தி, கவ்வாத்து வெட்டும் கத்தி, மீன் வெட்டும் கத்தி என ஒவ்வொரு கத்தியாக அவனது கண்கள் பயணித்தன. கைப்பிடி சற்று நீளமான, கூரிய முனை கொண்ட மன்னா கத்தி மீது அவனது பார்வை தரித்து நின்றது. மனித வேட்டைக்காக அக்கத்தி விலைக்கு வாங்கப்பட்டு வெற்று சீமெந்துப் பையொன்றில் சுற்றப்படுகின்றது.

கத்தியை வாங்கிய சுமதிபாலவுக்கு ஒரு திரைப்படம் பார்க்க வேண்டும் போல் தோன்றியது. அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ள திரையரங்கொன்றைத் தேடிச் செல்கின்றான். 6.30 க்கு ஆரம்பித்த திரைப்படம் இரவு 9.30 க்கு நிறைவுக்கு வந்தது. திரையரங்கிலிருந்து வெளியே வந்த சுமதிபால சோம்பல் முறித்துக் கொண்டு பக்கத்திலிருந்த கடை ஒன்றில் இராப் போசனத்தைப் பொட்டலமாக வாங்கிக் கொண்டு ஹோட்டலை நோக்கி நடக்கலானான்... ஹோட்டலை நெருங்கிய அவனுக்கு வாகனத் தரிப்பிடத்தில் இருந்த வாகனம் முதலாளி வந்திருப்பதை ஆருடம் கூறியது.

ஹோட்டலுக்கு வாயிலால் செல்லாமல் கூரையால் நுழைவதற்கு தீர்மானித்துக் கொண்டு கூரையில் ஏறத் துவங்கினான். முதலாளி தங்கியிருக்கும் அறையின் குளியலறையை அடையாளம் கண்டு அதற்கு மேலாக இருந்த ஓடுகளை அப்புறப்படுத்தி குளியலறைக்குள் மெதுவாக இறங்குகின்றான்... அந்தக் குளியலறையின் ஊடாக முதலாளியின் அறைக்குச் செல்ல கதவு வைக்கப்பட்டிருந்தது. கதவை சற்றுத் திறந்து அறையை நோட்டமிட்டான். அறையின் ஓரமாக இருந்த கட்டிலில் ஓர் ஆண் நிர்வாணமாகப் படுத்திருப்பதை சுமதிபால அவதானித்தான்... அந்த ஆணின் அருகில் ஒரு பெண் படுத்திருந்தாள். இதுதான் தான் தேடி வந்தவர் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே கொலை முயற்சியில் ஈடுபடுவது என்ற முடிவுடன் தனது கையிலிருந்த கத்தியை உருவியவனாக மெது மெதுவாக அந்த ஆணின் உருவத்தை நெருங்கிச் சென்றான்... சுமதிபால வருவதைக் கண்ட அந்த உருவம் 'திருடன் திருடன்' எனக் கத்த ஆரம்பித்தது. வேகமாக நெருங்கிய சுமதிபால அவனது முகத்தின் அருகில் பார்வையைச் செலுத்தி அது ஐ.பி. யின் மைத்துனர் என்பதை சந்தேகமின்றி உறுதிப்படுத்திக் கொண்டான்.


''டேய் நான் குசுமாவதியின் அண்ணன் வந்திருக்கேன்டா...'' என சத்தமிட்டான். அடுத்த நொடியில் சுமதிபாலவின் கையிலிருந்த கத்தி முதலாளியின் கழுத்தை ஊடறுத்து பயணித்தது. தலை உடலிலிருந்து விடை பெற்றுச் செல்ல முண்டம் கட்டிலில் சரிந்து விழுந்தது.

அப்போது அந்த அறையிலிருந்த இள வயதுப் பெண்ணின் அலறலுக்கு மத்தியிலும் விழுந்த தலையின் முடியை இடது கையால் பற்றிப் பிடித்துக் கொண்டு வலது கையில் கத்தியுடன் ஹோட்டலின் முற்றத்துக்கு தாவிச் சென்று கொழும்பு-புத்தளம் வீதியில் நீர்கொழும்பு நோக்கி வேகமாக ஓடத் துவங்கினான்...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிருக்கு ஒரு பரிசு



எம்.ஆர். நஸ்றின்
மாவனெல்லை

"எதுக்கும்மா நாங்க இங்க ஈக்குற... உம்மா சொல்லுங்களே..."

சாமிலா தனது உம்மா சாராவை அலட்டிக் கொண்டிருந்தாள். சாமிலாவின் கேள்வி எதுவும் சாராவின் காதுகளுக்குள் எட்டவில்லை. அவளது நினைவுகள் எல்லாம் பழைய காலத்தைப் பற்றியதாகவே இருந்தன...

ஊரில் உயரப் பறந்த தங்களது செல்வாக்கு எனும் கொடி குறுகிய காலத்துக்குள்ளேயே கீழே விழுந்து எரிந்து சாம்பலாகியதை நினைத்து, நினைத்து அவளது உள்ளம் வேதனைப்பட்டது. மீண்டும் பழைய நிலைக்கே வர வேண்டி ஏற்படும் என்று சாராவோ, அவளது குடும்பமோ கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

"என்ன... எல்லாரும் ஒவ்வொரு பக்கமா உக்காந்திருக்கீங்க...?"

திடீரென வீட்டுக்குள் வந்த சாராவின் இளைய தங்கை சஹ்லாவின் மிடுக்கான குரல் கேட்டு அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த சாரா, அவளது இரண்டாவது தங்கை ஆயிஷா, உம்மா கதீஜா, ஆசிக்கின் மனைவி சஹ்ரா ஆகியோர் சுயநினைவுக்கு வந்தார்கள்.

வீட்டு வாசலில் நின் கொண்டிருந்த சஹ்லாவையும் அவளது மாமியார் பாதிமாவையும் கண்ட சாரா கொதித்துப் போனாள். அவள் மட்டுமல்ல, தங்கை ஆயிஷாவும்தான் கோபப்பட்டாள்.

"என்னம்மா மகாராணி... நாங்க உசிரோட இருக்கோமாண்ணு பாக்க வந்தியளா...?"

என்று பாய்ந்தாள் சாரா.

"என்னம்மா சாரா... வந்தவங்ககிட்ட இப்படியா கத்துறது... நீ வாம்மா... வாங்க மைனி..."

கதீஜா வந்த இருவரையும் உள்ளே அழைத்தாள்.

"வரவேற்பொண்ணுதான் குறைச்சல்..."

எரிந்துழுந்தாள் ஆயிஷா.

பரிந்து பேசினாள் சஹ்ரா. நடப்பது எதுவும் புரியாமல் நேற்று வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பாத்திமா திகைத்துப் போனாள்.

பாத்திமா ஒரு விதவை. தன் ஒரே மகன் சஹ்லானை வளர்க்க வழியின்றி அவனை அவளது உம்மா சாஹிராடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு சென்றிருந்தாள். 25 வருடங்கள் அவள் நாட்டில் இருக்கவில்லை என்பதால், அவளுக்கு இங்கு நடப்பது எதுவுமே தெரியாது.

தன் மருமகளின் அருகில் சென்ற பாத்திமா அவளது கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

"என்னம்மா ஆச்சு... எதுக்கு அவங்க உன்ன வெறுக்குறாங்க...?"

"அது ஒரு பெரிய கத மாமி..."

"எனக்கிட்ட சொல்ல முடியாததா..."

"உங்க கிட்ட சொல்லேலாத ஒண்ணு இருக்குமா மாமி..."

"...."

"அப்போது எனக்கு பத்து வயசு. நாங்க தாத்தாமாருண்ணு நிறையப்பேர் விளையாடிட்டு இருந்தோம்... அப்போது ராஜா அங்கிள் வந்தாரு..."

"ராஜா அங்கிளா...?"

"அவருக்கிட்டத்தான் எங்கட வாப்பா வீட்ட வட்டிக்கு கொடுத்து கடன் வாங்கியிருந்தாங்க... அவர் குடுத்த நாள் முடிஞ்சதால பல முறை ஊட்ட வந்துட்டாரு... அண்ணக்கி ரொம்ப கோவத்தோட வந்தீந்தாரு... வாப்பாவால கடனத் திருப்பிக் கொடுக்கவோ, வட்டிய மட்டும சரி கொடுக்கவோ முடியல்ல... அதனால, நானாவ அவர்ட வீட்டு வேலைக்கு கூட்டிட்டு போறதா மிரட்டினாரு... வாப்பா அதுக்கு சம்மதிக்கல்ல... அதனால ராஜா அங்கிள் எங்களயெல்லாம் வெளியே போட்டுட்டு வீட்ட அவர் சொந்தமாக்கிட்டாரு..."

"அடப் பாவமே..."

பெருமூச்சு விட்டவள் மீண்டும் சொல்லத் தொடங்கினாள்...

"போக எடமில்லாம தவிச்சோம்... பெமிலியில யாரும் திரும்பியும் பாக்கல்ல... அந்த இக்கட்டான நேரத்துல வாஸில் ஹாஜியார் வீட்டுவாசல் போய் நின்னோம்... அவர் வட்டிப் பணத்த என்னால கட்ட ஏலா அது ஹராம்... அதனால எங்கட உம்மாவும் வாப்பாவும் தங்கச்சியும் இருக்கிற வீட்டுல போய் இரிக்கயேலும்ணு கூட்டிட்டு போய் எல்லா உதவிகளயும் செஞ்சி தந்தாங்க... போதாதுண்ணு எங்கட வாப்ப மேல இருந்த நம்பிக்கையால அந்த வீட்ட எங்கட பேர்க்கே மாத்தி, இது எங்கட வாப்பாட சொத்து... அதனால இத விக்கவோ, உடைக்கவோ வாணாம்ணு வேண்டிட்டாரு... அதுக்குப் பொறகு கொஞ்ச நாள்ள வாப்பா அவர் மௌத்தாகிட்டாரு... தங்கச்சிக்கு கல்யாணம் முடிஞ்சி அவவும் போயிட்டா..."

என்றவளது கண்கள் குளமாகியது. தனக்குள்ளேயே அதை உள்ளடக்கிக் கொண்டவள் தொடர்ந்தாள்...

"காலம் யாருக்காகவும் காத்திருக்காம வேகமா ஓடிச்சு... அதே வேகத்துல எங்க வருமானம், செல்வாக்கு எல்லாம் கூடிச்சு... நானா, தாத்தா இரண்டு பேர்டயும் கல்யாணத்த பெரிசா செஞ்சாரு... அவர்ட கல்யாணமும் முடிஞ்சிரிச்சு... கொழும்பில ஒரு ப்ளட், மாவனல்லையில ஒண்ணுக்கு ரெண்டு கடை... இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் வஸில் அவர்தான் இப்ப நான் வாழ்ற இந்த நல்ல வாழ்க்கைய அல்லாட துணையால அமச்சுத் தந்தாரு... நான் பொலிஸுக்கு போவேண்ணு சொன்னதாலேயோ என்னவோ இந்த கல்யாணம் குடும்ப எதிர்ப்போட நடந்திச்சு... அதான் என் மேல எல்லாருக்கும் கோவம்... கல்யாணம் முடிஞ்சு ஒரு மாசத்துல வாப்பா மௌத்தாகிட்டாரு..."

"இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்..."

"உள்ளம் மாசுபட்ட அவங்கள யாராலயும் திருத்த முடியல்ல மாமி... என்னமோ பிஸ்னஸ்ணு ஹாஜியார்ட வாப்பாட வீட்ட உடைச்சு பங்களாவா மாத்திட்டாங்க... நானும் உம்மாவும் அழாத குறயா கெஞ்சினோம்... ஹாஜியார் இந்த வீட்டுக்கு எங்வளவு வேணும்ணாலும் தாரேன் அவருக்கே திருப்பி தரச் சொன்னாங்க... ஆனா இவங்க எதையும் கேக்காம நன்றிகெட்டத்தனமா நடந்துக்கிட்டாங்க..."

சஹ்லாவின் உள்ளம் கோபத்தால் கொந்தளித்தது. பாத்திமாவின் கண்களும் கலங்கின...

"மேலெல்லாம் கூசுது... இப்படி ஒரு காரியத்த அவங்களால எப்படிச் செய்ய முடிஞ்சுது... மனச்சாட்சியே இல்லயா...?"

பாத்திமா ஆவேசப்பட்டாள்.

"அவருக்கு துரோகம் செஞ்ச இவங்கள அல்லாஹ் சும்மா விடுவானா...? பேராசை உலகத்த வாங்கணும்ற பேராசை... அவங்கட கண்ண அவங்க கையாலெயே குத்திக்கிட்டாங்க... நானா, வாப்பா ரெண்டு பேரோடயும் ரெண்டு மச்சான்மாரும் சேந்துட்டாங்க... குறுக்கு வழியில பணம் சம்பாதிச்சாங்க... ஆனா இதெல்லாம் அனுபவிக்க வாப்பாவால முடியல்ல... அவர் நோயாளியாகிட்டாரு..."

"ஏன் வாப்பாக்கு என்னாச்சு...?"

"அவருக்கு ஹாட்டடெக் வந்து பாடாபடுத்திருச்சு... வாப்பாட மருந்துச் செலவ ஏத்துக்க ஹாஜியார் முன்வந்தாரு... அவமானம்தான் அவருக்கு மிஞ்சிருச்சு... வாப்பாவ கொணப்படுத்த ஒரு கடையையும் பிளட்டையும் வித்துட்டாரு... இதெல்லாம் திருப்பி எடுத்துக்க ஒரு பணக்காரனுக்கு கல்யாணம் என்ற பேர்ல என்ன விக்கப் பாத்தாங்க... நான் அதுக்கு சம்மதிக்கல்ல... வாஸில் ஹாஜியார்ட சொல்லி அழுதேன்... வீட்டையும் கடையையும் திருப்பி ஈடு வெச்சாங்க. அது புள் லொஸ்ட்... எல்லாம் மண்ணாப் போச்சு. அதான் கூலி வீட்டுல எதுக்கும் வழியில்லாம திண்டாடுறாங்க... இப்பவும் திருந்தல்லயே... அல்லாஹ்ட மன்றாடுவாங்கண்ணு பாத்தா அதுவும் இல்ல... எனக்கு கவல உம்மாவும் கஷ்டப்படுறதுதான்..."

என்றவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைப்பதற்கும் அவளது இளைய மகள் சம்ஹா பாடசாலை விட்டு வருவதற்கும் நேரம் சரியாக இருந்தது.

"உம்மி, மன்டே ரீச்சர் சொன்ன குருவிக் கதட மீதிய இண்ணக்கி சொன்னாங்க..."

"என்ன சொன்னாங்க... வாப்பம்மாட்ட சொல்லுங்க செல்லம்..."

என்று பாத்திமா எடுத்து மடியில் வைத்துக் கொள்ள அவள் கதையைக் கூறத் துவங்கினாள்...

"அந்தக் குருவியெல்லாம் யாரும் சொல்லி கேக்காம தவறான வழியில போனதால வேடன் வலயில மாட்டிச்சாம்... அப்ப ஒரு எலி காப்பாத்தப் போச்சாம்... அத கொத்திச்சாம்... வேடன் வந்து வலயோடு தூக்கிட்டுப் போச்சாம்..."

மழலை மொழியில் தன் பாஷையில் கூறி முடித்தாள்.

"இன்னொண்ணு சொன்னாங்க ரீச்சர்... நாங்க பெரியவங்க பேச்ச கேக்கணும்ணு..."

என்றாள் மெல்லிய சிரிப்போடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞனே உனக்காக

அதுவும்
ஒரு கவிதைதான்
ஆனால்...
மிக மிக மோசமானது!!

எப்படி
எழுதினாய் அதை?
எப்படி எழுத முடிந்தது
உன்னால்??

பல்லாடைகளுக்குள்
மறைத்துப்
பாதுகாக்கப்படுகின்ற
பெண் அங்கங்களை
ஊடுருவுகின்ற
உனது கற்பனைகளை
நான் சபிக்கிறேன்!

பெண்
மானம் காக்கவேண்டிய
சமூகத்தில் பிறந்தவன் நீ...

உன்
தாரத்தைத் தவிர
மற்றோரையெல்லாம் உனது
தாயாய்
தங்கையாய்
மகளாய்
எண்ணி எழுது

கவிஞனே...
உனது
பெயர் காக்க வேண்டிய
எழுத்துக்களைக் கொண்டு

பெற்றுக் கொள்ளாதே
பெண் சாபத்தை

ஏற்காத தவறுகள்
வளர்க்கப்படும்
உணரும் குற்றங்கள்
திருத்தப்படும்!

உன்னிடத்தில் – வீண்...
அகந்தைகள் வேண்டாம்!
நீ வளர வேண்டியவன்!!
வளமாக...
வாழ வேண்டியவன்!!!

தவறுகளை ஏற்கும்
பெருந்தன்மையை வளர்த்துக் கொள்!
தூய வெற்றிகள்
உன்னை
தேடி வரும்!!

ஜரீனா முஸ்தபா
வெலிவிட்ட




# உயிர்மொழி

## விட்டுச் சென்றதை பற்றிக் கொண்டால்...

ஸைன் மர்ஸூக்
கலாயா, மாஹோ

நல்லாட்சிக்காய் பாடுபட்டு
சிறுபான்மை துயர் துடைத்த
உன் கோள்கை...
பலசேனாக்களும்
ராவணாக்களும்
பற்றிக் கோண்டால்...
அமைதி பேறும் நம் நாடு
நீ தந்த நல்லாட்சியுடன்...



# முதுமை இல்லாத உலகம்

கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி
கிண்ணியா



முதுமை இல்லாத
உலகம் உண்டா?
உண்டு!

நானோ நீயோ
நன்மை செய்திருந்தால் மட்டும்
அவ்வுலகம் எமக்குக் கிட்டும்!

அந்தவுலகம்
இந்தவுலகமாக
இருந்திருக்கக் கூடாதா?
இருந்திருந்தால்...

முகஞ் சுளிக்கப்
பிள்ளைகளும் இல்லை!
முதுமை தரும்
தொல்லைகளும் இல்லை!

பெற்றோர் பிள்ளைகளுக்குப்
பளுவுமில்லை
பிள்ளைகளுக்குப் பெற்றோரைப்
பேண வேண்டுமெனும்
பெரும் பாரமுமில்லை!!

சொர்க்கத்து மண்ணில்
முப்பத்து மூன்றே மூன்று
அகவைதான்
ஆண் பெண் அனைவருக்கும்

நானோ நீயோ
நன்மை செய்திருந்தால் மட்டும்
இப்போது எமக்குக் கிட்டும்!

இம்மண்ணில் 'முதுமை முள்'
குத்துவதற்கும்
குத்தாதிருப்பதற்கும்
குத்துப்பட்டுள்ளங்கள்

கத்துவதற்கும்
கத்தாதிருப்பதற்கும்

காரணம்
கேடுகள் சூழ்ந்திருக்கும்
உலக வாழ்வுக்கான

கேள்விகளின் அபரிமிதம்!!

மனிதனே!
இறைவனின் எண்ணத்தில்
உருவானவன் நீ
உனக்கிரு பருவங்கள்
அதிலொன்று முதுமை

கிழடு கட்டையான
உன் மீதும் அம்மை
பூசப்படுவது உண்மை!


இம்மெய் தன்னை
உணர்பவர்தாம்
தம்மை மனிதராய்
மாற்றுவார் என்பதே
மெய்மை!

உனக்கு
முதுமை இல்லாத
உலகம் வேண்டுமா?
அதனை நீ
முதுமையை
மதித்த பின் காண்பாய்
நீ மரித்த பின் காண்பாய்

# மானுட தேசம்

31

## ஷெய்குல் இஹ்ஸான் எம்.இஸட்.எம். ஹூசைன் மௌலவி



கம்பஹா மாவட்டம், உடுகொட ருக்கஹாவில என்ற ஊரில் முஹம்மட் ஸகரிய்யா -உம்மு குல்ஸூம் தம்பதிகளுக்கு ஐந்தாவது மகனாக மௌலவி ஹூசைன் பிறந்தார். உடுகொட ருக்கஹாவில பிரபலமான உலமாக்களான அப்துஸ் சமத், அப்துல் லதீப் முதலானோர் பிறந்த செல்வச் செழிப்புள்ள ஊராகும்.

1945.03.03 ஆம் திகதி பிறந்த மௌலவி ஹூசைன், தனது ஆரம்பக் கல்வியை கஹோடவிட அல்பத்தரிய்யா பாடசாலையில் கற்றதுடன், 1964 ஆம் ஆண்டு பாணந்துறை தீனியா அரபுக் கல்லூரியில் ஷரீஆ கல்வியையும் கற்றார். ஆலிம்களான மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துஸ் சமத், அஷ்ஷெய்க் அப்துல் லதீப், அஷ்ஷெய்க் அஜ்வத் ஆகியோர் இவருக்கு ஷரீஆ துறையைக் கற்றுத் கொடுத்தனர்.

ஷரீஆ துறையில் தேர்ச்சி பெற்ற மௌலவி ஹூசைன்1970 இல் தான் கல்வி கற்ற அதே அரபுக் கல்லூரியில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் சேவை அடிப்படையில் கற்றுக் கொடுத்தார். இதன் வழியில் பல மார்க்க அறிஞர்களின் அறிமுகமும் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புகளும் இவருக்குக் கிடைத்தன. அவர்களது வழிகாட்டல் மூலம் மௌலவி ஹூசைன் அவர்கள், 1975 ஆம் ஆண்டு காலி கிந்தொட்டையில் அல்குல்லியத்துல் அறூஸிய்யா என்ற பெயரில் மத்ரஸா ஒன்றை ஆரம்பித்து அதை எட்டு வருடங்கள் நிர்வகித்தும் வந்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த மௌலவி அபூசுஹூத் அவர்களினால் ஆரம்பித்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இயங்கி வந்த மத்ரஸா சில காலங்கள் மூடப்பட்டிருந்தது. இந்நிலையில், 1983 ஆம் ஆண்டு மௌலவி ஹூசைன் அவர்களின் ஒத்துழைப்புடன் இந்த மத்ரஸா மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் இயங்க வாய்ப்புக் கிடைத்தது. இது மார்க்கக் கல்வியின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பாகும்.

1986.02.23 இல் கன்னத்தோட்டை என்ற இடத்தைச் சேர்ந்த இவரது பழைய மாணவர்கள் சிலர் மௌலவி அவர்களைத் தலைவராக வைத்து அல்குல்லியத்துல் நூரிய்யா என்ற மத்ரஸாவை நிறுவி அம்மத்ரஸாவுக்குரிய தலைமைப் பொறுப்பையும் இவரிடமே ஒப்படைத்தனர்.

அவ்வாறே, 1988.06.28 இல் பெரிய பள்ளிவாசலிலிருந்து விலகி மர்ஹூம் மௌலவி நியாஸ் அவர்களுடன் சேர்ந்து (தற்போது கொழும்பு 12 இல் இயங்கி வரும்) இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரியை ஸ்தாபித்து உலமாக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார், அல்ஹம்துலில்லாஹ்.

இவரது மார்க்கப் பணியின் வீரிய பெறுபேறாக இன்று இலங்கை முழுவதிலும் 200 க்கும் மேற்பட்ட ஆலிம்களையும் 300 க்கும் மேற்பட்ட ஹாபிழ்களையும் இலங்கை மண் கண்டிருக்கிறது என்றால் அது மிகைப்படாது. இவரிடம் மார்க்கக் கல்வி கற்றவர்கள் நாடளாவிய ரீதியில் பல்வேறு மத்ரஸாக்களையும் நிறுவி அவற்றின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தும் வருகின்றனர். கொழும்பு-இமாம் ஷாபிஈ, கன்னத்தோட்டை-நூரிய்யா, திஹாரி-ஈமானிய்யா, புத்தளம்-முஹாஜிரீன், மன்னார்-ஸலாமிய்யா, பேருவளை-சின்னக்கோட்டை-சலாஹிய்யா முதலான பல மத்ரஸாக்களில் அதிபர்களாக, பிரதி அதிபர்களாக கடமையாற்றும் உலமாக்களெல்லாம் ஹூசைன் மௌலவியிவிடம் ஷரீஆ கற்றவர்களே.

ஆயுள் காலத்தின் பெரும் பகுதியை சமூகப் பணியில் ஈடுபடுத்தியுள்ள மௌலவி ஹூசைன் அவர்கள் நமக்கெல்லாம் ஒரு முன்னுதாரணமாகும். அவரது பணிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

மௌலவி ஏ.எம். நாஸிர் (இஹ்ஸானி)
அதிபர், குல்லியதுல் இமாம் ஷாபி
கிருளப்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் தேசம்

மலர் : 14 இதழ் : 22 நவம்பர் 15 - 30

77. ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09. இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030.
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


# புதிய வருடத்திலிருந்து இலவச சீருடைக்குப் பதிலாக பண வவுச்சர்

எம்.எஸ். சம்சுல் ஹூதா - பொத்துவில்



1993 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இலவச சீருடை முறைமை 2016 ஆம் ஆண்டு முதல் பண வவுச்சர் முறையில் வழங்கப்படவுள்ளது. 10000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் உள்ள 45 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச சீருடைக்கு வருடந்தோறும் 230 கோடி ரூபாயினை அரசாங்கம் செலவளிக்கன்றது. குறித்த முறைமையில் உள்ள தரமின்மை, போக்குவரத்து, களஞ்சியம், ஆளணி போன்ற குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு அடுத்த வருடம் முதல் பண வவுச்சரினை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

# பகுதிநேர ஹிப்ழு குர்ஆன் கற்கைநெறிக்கு புதிய மாணவர் அனுமதிக்கப்படுவர்

எஸ்.அஷ்ரப்கான்

கல்முனை ஜமாஅத் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா ஜுமுஆ பள்ளிவாசலின் மத்ரஸது தாருத் தவ்ஹீத் லிதஹ்பீழில் குர்ஆன் மத்ரஸாவிற்கு பகுதிநேர ஹிப்ழு குர்ஆன் (மனன) கற்கைநெறிக்கு புதிய மாணவர் அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவதாக பள்ளிவாசல் நிருவாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்தவராகவும் பூரணமாக குர்ஆனை ஓதி முடித்தவராகவும் இருக்கின்ற அதேவேளை, 2015 ஆம் ஆண்டில் தரம் 5, 6, 7 இல் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து இக்கற்கை நெறிக்கு இவ்விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்முனை-07, தைக்கா வீதியில் அமைந்துள்ள ஜமாஅத் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா ஜுமுஆ பள்ளிவாசல் காரியாலயத்தில் அல்லது தாருத் தவ்ஹீத் இஸ்லாமிய நூலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, எதிர்வரும் 26.11.2015 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறும் விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.

இக்கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி 27.11.2015 மாலை 4 மணி முதல் 6 மணி வரையுமாகும். எதிர்வரும் 2015.11.29 ஆம் திகதி மஹ்ரிப் முதல் இக்கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளதாகவும் குறிப்பிட்ட தொகையினரே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது விடயமான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 077 6964632, 077 6178637, 077 6539000 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் வேண்டப்பட்டுள்ளது.


உங்களது நிறுவனங்களின் பெயர் பொறித்த கலண்டர்களை அச்சிடுவதற்கு...

JMF இன் 2016 ஆம் ஆண்டுக்கான Calendar

100/=



தொடர்புகளுக்கு: 0772649151 / 0718655873


# அமீனிய்யா அரபுக் கல்லூரி புதிய மாணவர் அனுமதி - 2016

ஸைன் மர்ஸூக்

நிகவெரட்டிய அமீனிய்யா அரபுக் கல்லூரிக்கு 2016 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏழு வருட பாடத்திட்டத்தைக் கொண்ட இக்கல்லூரிக்கு 2016 ஆம் ஆண்டு தரம் 9 க்கு சித்தியடைந்த, தேக ஆரோக்கியமுள்ள, குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விருப்பமுள்ள மாணவர்கள் 2015 டிசம்பர் 12, 13 ஆம் திகதி (சனி, ஞாயிறு) தினங்களில் கல்லூரி வளாகத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பத் தாட்சிப் பத்திரம், பாடசாலை அதிபரின் நற்சான்றுக் கடிதம், தரம் 7, 8 இன் தேர்ச்சி அறிக்கை மற்றும் திறமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்றவற்றுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் படி கல்லூரி நிர்வாகம் கேட்டுக் கொள்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு 0772980298, 0772424727, 0716852755 முதலான தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.


Like us on facebook

எங்கள் தேசம் facebook/engalthesamjmf



CONQUER THE WORLD WITH GLOBAL QUALIFICATIONS!



Courses at

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
KALMUNAI



QUANTITY SURVEYING (FULL TIME & PART TIME)

LAW (LLB)

HND IN COMPUTING & SYSTEMS DEVELOPMENT (IT)

CAD & BS

MEP & INTERIOR DESIGNING

ACCESS PROGRAMME (IT + ENGLISH)

DIPLOMA IN ENGLISH







Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

For Details
Faizer : (+94) 771 620 407
Rizad : (+94) 773 247 711
Mufeeda : (+94) 766 693 684

292/1, Main Street, Kalmunai, Sri Lanka. | Tel : 067 2226899

COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.